Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu



## மதிப்புக்குரிய சகோதரர்களின்



## கேள்விகள் ???

**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**29.04.2020**

**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**

بسم الله الرحمن الرحيم

## ஜனாப் ஷாஜஹான் சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. எனது முதல் கேள்வி முனீர் அஹ்மதிய்யா ஜமாஅத்தை விட்டு நீக்கப்பட்ட காரணம் என்ன? எந்த ஆண்டு நீக்கம் செய்யப்பட்டார்
2. தற்போது 16 மேற்பட்டவர்கள் வாதம் செய்துள்ளார்கள் கரோனா வெளிவந்த பிறகு ஒரு சிலர் வாதம் செய்துள்ளார்கள் எனவே யாரை ஏற்பது?? நீங்கள் அந்த அனைவரையும் ஏற்றுக் கொண்டீர்களா??
3. நபிமார்களின் வருகையின் நோக்கம் என்ன மேலும் அவர்கள் செய்கின்ற முக்கிய பணிகள் என்ன???
4. ஃபிர்அவ்ன், காரூன், அபு ஜஹ்ல், அபு லஹப்,லேக்ராம், அப்துல்லாஹ் ஆத்தம் போன்ற எதிரி ?? யாரும் இல்லையா?
5. மிஸ்டர் முனீர் அவர்களுக்கு எந்த மொழியில் வஹீ வருகின்றது
6. நூற்றாண்டு என்பதின் கணக்கை எதன் அடிப்படையில் செய்வது?
7. இஸ்லாம் அல்லாத மாற்று மதத்தினருடன் எவருடன் விவாதம் செய்துள்ளார்?? அதன் ஆதாரம் சான்று தரவும்
8. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஐந்து கலீஃபாக்களினல் எந்த எந்த கலீஃபாவை நீங்கள் கலீஃபாவாக ஏற்றுக் கொள்கின்றீர்கள் ?இறைவனின் கலீஃபா வாக ஏற்றால் அவர்களுடைய தீர்ப்பு உறுதியான மார்க்க தீர்ப்பாக ஏற்பீர்கள் தானே?

## ஜனாப் அன்சார் சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. திருகுர்ஆன் அடிப்படையில் இவரை நபி என்று நிரூபிக்க முடியுமா ?

## ஜனாப் அப்பாஸ் சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. ஒரு மஸீஹை பற்றிதான் திர்குர்ஆனிலும் ஹதீஸிலும் முன்னறிவிப்பு உள்ளது ஆனால் நீங்களோ முனீர் சாஹிபை மஸீஹ் என்று எப்படி கூருகின்றீர்கள?

## ஜனாப் ராஜா சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. எனது கேள்வி (இன்னிமாக்கா யா மஸ்ரூர்) என்ற முன்னறிவிப்பின் படி தற்போது 5 வது கலீபா உள்ளார் என்று அஹமதியா ஜமாத்தின்

வாதம் நீங்கள் இந்த முன்னறிவிப்பு யாருக்கு பொருந்துகிறது என்பதை என்று கூருகின்றீர்கள்

## ஜனாப் அஜாஸ் சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. Aijas Ahmed sb கேட்ட கேள்வி மிக அடிப்படையான கேள்வி ஆனால் அதற்கு நீங்கள் தரும் இந்த பதில் அதிர்ச்சியாகவும் ஆச்சர்யமாகவும் இருக்கிறது நான் சுன்னத் ஜமாஅத் குடும்பத்தில் தவ்ஹீது சிந்தனையில் இருந்து அஹமதியா ஜமாஅத் வந்தவன் நான் அங்கு இருக்கும் போதே அஹ்மதிகளுக்கு பிற முஸ்லீம்கள் காட்டும் எதிர்ப்பும் அஹமதியத்தின் புரட்சியுமே எங்களை அவர்களின் பக்கம் திருப்பியது !!!
2. எனது கேள்வியும் இதான் நபி விட முஜடிட் பொறுப்பு கீலானது இருந்தாலும் அவர்கள் செய்த புரட்சி கூட இவர் செய்யவில்லை! இவர் ஒரு நபியாக உள்ளார் என்றும் சொல்கிறார்கள் அதுவும் இவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்தும் விட்டார்

## ஜனாப் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. இந்த கேள்வி எனக்கும் உண்டு, நான்காவது கலீபா அவர்களின் காலத்தில் மிக பெரிய புரட்சி மேற்கத்திய நாடுகளில் ஏற்பட அவர்கள் காரணமாக இருந்தார்கள் இன்று வரை அவர்கள் ஹிஜ்ரத்தில் இறை உதவிகளும் அடையாளமும் நடந்து உள்ளது, அந்த நேரம் இவர் நபியாக வந்த காரணம் என்ன ?அவரின் விளக்கம் வேண்டும், உங்களின் விளக்கம் வேண்டாம்??

## ஜனாப் புஹாரி சாஹிப் அவர்கள் கேட்ட கேள்விகள்

1. எனது கேள்வி 1 திருகுர்ஆன் ஹதீஸ் மற்றும் மஸிஹ் மவ்வூது அலை அவர்களின் சொற்கள் அடிப்படையில் எந்த ஒரு நபி என பரவியிருக்கும் என வருகிறது *எனில் மூனிர் அஸிம் தன்னை நபி வாதம் செய்யும் போது அஹமதியா முஸ்லிம் ஜமாஅத்தில் எந்த கலிபாவின் காலக்கட்டத்தில் அவர் இருந்தார்?? அது நான்காவது கலிபா அவர்களின் காலகட்டம் எனில் அந்த காலகட்டத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான குழப்பமான மற்றும் பல நல்ல அஹமதி சகோர்கள்கூட அச்சபட்ட சம்பவங்கள் ஏதும் இருந்தால் கூறவும்*!!!!குழப்பமான மற்றும் அச்சமூட்டும் காலகட்டம் பற்றி உங்களுக்கு முஹம்மது நபி ஸல் மற்றும் மஸிஹ் மவ்வூது அலை வரலாற்றில் இருந்து ஓரளவு அறிவு உண்டு என நம்புகிறேன்!!

வருகையின் போதும் குழப்பங்களுங்களும் அச்சங்களும் பரவி இருக்கும்

2. அதாவது ஷஹிஹீல் இஸ்லாம் ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது ரலி அவர்கள் எழுதிய நூலில் இருந்து பொய்யான *மொழிபெயர்புகள் செய்து இன்றுநாள் வரையிலும் மேற்கோள் காட்டி வருகிறது* அது யாதேனில் ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது ரலி எழுதிய உருது மூலத்தில் தெளிவாக *கிலாபத் இருபகுதியாகும்* எனகூறியதை இவர்கள் *கிலாபத் இரு வகை* என கூறி பொய்யான மொழிபெயர்பை இன்றளவும் செய்து வருகின்றனர் இதன் மூலம் *முஸ்லிம் மவ்வூது ரலி கூற வந்து தெளிவான கருத்தே இருட்டிகப்படுகிறது* *இவர்கள் உணாமையாளர்கள் எனில் இவர்கள் இப்படி பொய்யான மொழிமாற்றம் செய்யும் வழிகெட்ட தன்மை ஏன் வந்தது* அவர்கள் செய்த அந்த மொழிபெயர்பு உண்மை என இவர்களால் நிருபிக்க முடியுமா????
3. ஹஸ்ரத் அபுபக்கர் ரலி ,ஹஸ்ரத் உமர் ரலி ,ஹஸ்ரத் உஸ்மான் ரலி,ஹஸ்ரத் அலி ரலி மற்றும் ஹஸ்ரத் ஹக்கீம் நூருதீன் ரலி , ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது ரலி,ஹஸ்ரத் நாசிர் ரலி , ஹஸ்ரத் தாஹிர் ரலி போன்ற நபிமார்களை பின் தொடர்ந்து வந்த கலிபாக்கள் உங்கள் பார்வையில் *எந்த அளவுக்கு தவறு செய்ய வாய்புள்ளவர்கள்*? உதாரணமாக அவர்கள் பேச்சுகளில் *வழி கேட்டை பரப்பும் தன்மையும் வெளிபடும்* (நவ்வூது பில்லாஹ்) என்ற உங்களுக்கு ஈமான் உருவாக காரணமான கூற்றுகள் ஹதீஸ்களை பதிவிடவும் !!!
4. உண்மையாளர் ஹஸ்ரத் அபூபக்கர் ரலி அவர்கள் மூஃமீன்களிடம் கூறிய *நான் கூறிய எல்லா நல்ல விசயங்களுக்கும் கட்டுபடுங்கள்* என்ற சொல்லை வைத்து கொண்டு தீய எண்ணங்கள் கொள்ள வேணாடாம் எனவும் அதன் உண்மையான அர்த்தம் எது எனவும் விளக்கிய *ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது ரலி தனது நூலில் விளக்கிய பின்பும் எச்சரித்த பின்பும்* அந்த கூற்றை சான்றாக காட்டி கலிபாராசீதீன்களும் குர்ஆனிற்கு மாற்றமான தவற செய்யலாம் எனக்கூறி வருகிறீர்களே??இந்த செயலை செய்யும் அளவுக்கு இறையச்சம் போனது ஏனோ??? விளக்கவும்
5. ஹஸ்ரத் மஸிஹ் மவ்வூது அலை *இரண்டாவது வல்லமைக்கு சான்றாக ஹஸ்ரத் குலபாராசிதீன் அபுபக்கர் ரலி யை* உதாரணமாக காட்டியது ஏனோ??? அவர்கள் ஏன் நூண்றாண்டில் தோன்றிய முஜதீத் இமாம் காசலி ரஹ் அவர்களை உதாரணமாக ஆக்கவில்வலை??? *அது போன்ற நூற்றாண்டு முஜதீத் மார் குறித்து பேச்சை கூட இரண்டாவது வல்லமைகு உதாரணமாக ஆக்கவில்லையே ஏன்??* சிந்திபவர் யாதரேனும் உண்டா????

நியாபடி பார்த்தால் இரண்டாவது வல்லமையாக நீங்கள் கருதும் நூற்றாண்டு முஜதீத் குறித்து தானே மஸிஹ் மவ்வூது அலை கூறி இருக்கவேண்டும்!!!!ஏன் மஸிஹ் மவ்வூது அலை கு அந்த வார்த்தை தோன்றாமல் அபுபக்கர் ரலி வகையிலான கலிபா தோன்றினார்???*இதிலிருந்து தெரியவில்லையா??? நுபூவத் வழியில் வரும் கிலாபத்தே இரண்டாவது வல்லமை என்றும் அவர்களே நூற்றாண்டு முஜதீத் களை விட மிக சிறந்தவர்கள் என்று*

6. நபிமார்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்று கூறிய அதே இறைவன் தானே 1400 வருடங்கள் *உண்மை நபி வருவதை தடைசெய்தான்* (ஆனால் பல பொய் நபி கள் வந்துள்ளனர்) ஏன் ???முதல் முஹம்மது ஸல் வருகையில் 1400 வருடம் நபிமார்கள் வருவதை!! தடைசெய்த இறைவன் ஏன் இரண்டாவது முஹம்மது ஸல் வருகையில் அந்த அந்தஸ்தை கொடுக்கமாட்டான் என இறைதீர்பு வழுங்குகிறீர்கள்!!! ???இது இறைவன் தன் தூதருக்கு கொடுக்க என்னும் அநதஸ்தை தடுக்க நீங்கள் செய்யும் திட்டம் என உங்களுக்கு தோன்றவில்லையா????எனது கேள்வியே 1400 வருடம் உங்கள் பார்வையில் *இறுதி நபி கொள்கையாக தெரியாத போது*?? 1000 வருடம் மட்டும் ஏன் கண்ணை உறுத்துகிறது???
7. முனீர் அஸிம் அவர்கள் அஹமதியா ஜமாஅத் தில் இருந்து வெளியேற்றபட்டதும் அவர் உருவாக்கிய ஜமாஅத் தின் பெயர் என்ன ????
8. *எப்படி முஹம்மது ஹஸ்ரத் நபி ஸல் அவர்களுக்கு அல்லாஹ் அபுபக்கர் ரலி போன்றும்,* *ஹஸ்ரத் மஸிஹ் மவ்வூது ரலி அவர்களுக்கு ஹஸ்ரத் ஹக்கீம் நூருதீன் ரலி அவர்களைபோன்றும் ஒரு முத்தான முதன்மை சகாபியை வழங்கினானோ???* *முனிர் அஸிம் அவர்களை நபியாக ஈமான் கொள்ளும் அல்லாஹ்வால் வாய்பளிக்கபட்டதாக நீங்கள் கருதும் அந்த முதன்மை மதிப்பிற்குரிய சாகாபியின் பெயர் என்ன???* *அவர் குறித்து முனிர் அஸிம் கூறிய நற்செய்திகள் என்னென்ன ???* *அவரின் தற்போதைய நிலை என்ன????*இவை அனைத்தும் ஒரே கேள்வியின் கிளைகளே எனவே இதனை ஒரே கேள்வியாக எடுத்து கொள்ளவும்
9. திருகுர்ஆன் மு.ஃமினான உங்களது *பொருள்களையும் உயிர்களையும் பெற்று கொண்டு சொர்கத்தை இறைவன் பரிசளிக்கிறான்* என்கிறது.இந்த வசனத்தின் படி உங்கள் *ஜமாஅத் தில் வாயலவில் கூறும் இந்த 20 வருடங்களில் எத்தனை உயிர்தியாகங்கள் நடந்துள்ளது* ஆதாரபூர்வமாக கூறவும்
10. ஹஸ்ரத் அபுபக்கர் ரலி ,ஹஸ்ரத் உமர் ரலி ,ஹஸ்ரத் உஸ்மான் ரலி,ஹஸ்ரத் அலி ரலி மற்றும் ஹஸ்ரத் ஹக்கீம் நூருதீன் ரலி ,

ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது ரலி,ஹஸ்ரத் நாசிர் ரலி , ஹஸ்ரத் தாஹிர் ரலி போன்ற நபிமார்களை பின் தொடர்ந்து வந்த கலிபாக்கள் உங்கள் பார்வையில் *எந்த அளவுக்கு தவறு செய்ய வாய்புள்ளவர்கள்*? உதாரணமாக அவர்கள் பேச்சுகளில் *வழிகேட்டை பரப்பும் தன்மையும் வெளிபடும்* (நவ்வூதுபில்லாஹ்) என்ற உங்களுக்கு ஈமான் உருவாக காரணமான கூற்றுகள் ஹதீஸ்களை பதிவிடவும் !!!

11. முஸ்லிம் மவ்வூது ரலி அவர்கள் தனது நூலில் இந்த *கிலாபத் குறித்து கூறும் போது* இந்த *கிலாத்தை இறைவன் வழிநடத்துவான் என்றும் இறைவனின் கை அவர்கள் மேல் இருக்கும் என்றும் கூறியுள்ளார்* (ஆதாரத்தை உங்களிடமும் காட்டி உள்ளேன்) இதன் அடிப்படையில் சிந்திக்து பதில் தாருங்கள் *இறைவனின் கை என்றால் என்ன???* மிக எளிமையான கேள்வி தான் பதில் தரவும்
12. *உங்கள் முனிர் sb ன் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து உலகமக்களிடம் செயத் பிரச்சாரங்கள் ஏதும் இருந்தால் இங்கு பதிவிடுங்கள்* ஏன் இந்த கேள்வி என்றால் நீங்கள் *20 வருடமாக நபியாக இருப்பதாக கூறுகிறீர்கள்* தற்போது வரை இவர் *அஹமதிய கிலாபத்தை இந்த ஜமாஅத் தை குறிவைத்து மட்டுமே பேசி வருகிறார்* இவர் முழு உலகத்துகான நபி எனில் *முழு உலகிற்கு இவர் வழங்கிய அழைப்புகள் என்ன??* *எச்சரிக்கை என்ன*? அதற்கான தீர்வு என்ன? *கிருஸ்தவர்களுக்கு இவர் எழுதிய நூல் உண்டா?*** *ஹிந்துகளுக்கு விடுத்த அழைப்பு நூல்*??? *இன்னும் பற மதங்களுக்கு???* *நாத்திக மத்தினருக்கு???*


ஸஹாபிகளுக்கு ஈத்
முபாரக்!!!
ஜமாஅத் உல் ஸஹீஹ் உல்
இஸ்லாம் தமிழ்நாடு


HAPPY
Eid

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




மதிப்புக்குரிய
சகோதரர்களின்



கேள்விகளுக்கு
எங்கள் பதில்

வெளியீட்டு
அமீர்,
ஜமாஅத் தமிழ்நாடு
30.04.2020

PHONE:+917502272774
EMAIL:jusai.tn@gmail.com


بسم الله الرحمن الرحيم

## முதல் கேள்வி:-

முனீர்,அஹ்மதிய்யா ஜமாஅத்தை விட்டு நீக்கப்பட்ட காரணம் என்ன? எந்த ஆண்டு நீக்கம் செய்யப்பட்டார்- கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்**

## பதில்:-

**ஹசரத் முஹையதீன் அல் கலீ:ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை)** அவர்கள் இறைவெளிப்பாடு கிடைப்பதாக கூறியதால் நான்காவது கலீ:ஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டதாக கூறப்பட்டு சரியாக **01.01.2001** அன்று நீக்கப்பட்டார்கள்.( அந்த ஒப்புதல் கடிதம் உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது)



[illegible] FROM TABSHIR LONDON TO MAURITIUS [illegible]

AHMADIYYA MUSLIM FOREIGN MISSIONS OFFICE

INTERNATIONAL HEADQUARTERS RABWAH, PAKISTAN

London Office: 16 Gressenhall Road, London SW18 5QL, U.K. Telephone: [illegible]
Cable: Islamabad London, Fax: [illegible]

Ref T [illegible]

Mr. Mohammad Ameen Jowahir
Amir
Ahmadiyya Muslim Jama'at
MAURITIUS

Dear Amir Sahib,

Assalamo Alaikum wa rahmatullahi wa barakatuhu!

Thank you very much for your Fax dated 14th December 2000 which we received on 23rd December 2000, was presented for the kind attention of Hazrat Khalifatul Masih IV in which you mentioned the so-called revelations of Mr. Munir Azim and the involvement of the ex-Amir Mr. Zafrullah Domun in this *fitna* against the spirit of Nizam-e-Jama'at.

You mentioned that in the meeting called by Mr. Zafrullah Domun on 13th December 2000 in the presence of some other Amila members, he *"wanted me to tell the Jama'at on the occasion of Eid-ul-Fitr, of the dangers which exist in connection with the Hizbullah. He also wanted me to request the members of the Jama'at to repeatedly say "Ya Mujib" and "Ya Qahhiru"*".

On the basis of this report, Hazrat Khalifatul Masih IV has instructed that both Mr. Munir Azim and Mr. Zafrullah Domun should be expelled from Nizam-e-Jama'at. Huzur has stated that if they desire they can form their own separate "Jama'at." Huzur expressed amazement that Mr. Zafrullah Domun who has been the Amir of the Jama'at Mauritius should not only be so stupid as to believe in the revelations of Mr. Munir Azim but to advise the Amir to announce this to the Jama'at. Huzur has stated that by the Grace of Allah, the Jama'at is marching forward throughout the world at the rate of millions. The going away of these two individuals makes no difference to the Jama'at. Huzur has also said that if these two have any associates, they can take them along with them. The departure of these people will also not have any effect on the Jama'at but their destiny will be fearful. May Allah protect the Jama'at from all sorts of dissension. Allah be with you.

Wassalam,

Yours sincerely,

[illegible]
Al-Haj Mujeeb Tahir

ஹஸ்ரத் (அலை) அவர்கள் இது சம்பந்தமாக கூறும்போது:-பொறாமை கொண்ட மொருசியஸ் பொறுப்பாளர் களால் முக்கியமாக அமீர் ஜவாஹீர் போன்றவர்களால் என் மீது தவறான தகவல்களை நான்காவது கலீ:ஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கொடுத்து அவர் களால் இன்னும் குறிப்பாக அன்னரால் கையொப்பம் இடப்படாமல் வாக்கில்-உட்- தபஷிர் மஜித் தாஹீர் அவர் களால் கையொப்பம் இடப்பட்டு நிசாம்மே ஜாமத்தில் இருந்து நீக்கப் பட்டேன்.

முக்கியமாக அவர்கள் ஹசரத் மஸீஹ் மவூது (அலை) இந்த ஜமாத்தின் உருவாக்கத்தின் நோக்கமான சாதாரண ஒருவருக்கும் இறை இல்ஹாம் கிட்டுவதை அவர்கள்



ஏற்றுக்கொள்ளவில்லை, மேலும் எனக்கு இறங்கிய இறையருளை "பெயர் தாங்கிய வஹீ" என்றும் என் முடிவு பயங்கரமானதாக இருக்கும் என்றும் தூற்றினார்கள்.

ஆனால் அல்லாஹு என்னை கைவிடவில்லை அவன் என்னை விட்டு அனைவருமே செல்லும்போதும் அவன் எனக்கு இவ்வாறாக வஹீயை இறக்கி ஆறுதல் கூறினான்.

**Bismillah hir rahman nir raheem**

**"If tomorrow, everybody leaves you, and Allah is with you; then everybody is with you. But if Allah leaves you and everybody is with you; nothing is with you".**

**"நாளை உன்னை விட்டு அனைவரும் பிரிந்தாலும் அல்லாஹ் உன்னுடன் இருந்தால் அனைவருமே உன்னுடன் இருப்பார்கள் ,ஆனால் அனைவருமே உன்னுடன் இருந்து அல்லாஹ் உன்னுடன்இல்லை என்றால் எதுவுமே உன்னிடம் இருக்காது"**



**மேலும் இறை வஹீயை பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) கூறும்போது;-**

நேசங்கொண்டவர்கள், ஆன்மீகத்தாகம் கொண்ட தமது உள்ளம் இறைவசனத்தின் இனிய ஒலியை நேரடியாகக் கேட்டுப் பேரானந்தம் பெறவேண்டும் என்ற ஆவல் கொள்ள மாட்டார்களா? இறைவனுக்காக முழு உலகையும் விட்டு விலகித் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவழியில் தியாகம் செய்து தன்னையே இறைவனுக்காக அர்ப்பணித்திருக்கின்ற ஒருவன் இந்த ஒளிமிக்க உண்மையான சூரியனைத் தன் கண்களால் காண முடியாமல் மங்கிய ஒளியிலேயே நின்று மரணமடைந்து விடுவதை விரும்புவானோ? உயிருள்ள இறைவன் 'அனல் மவ்ஜூத்' நான் இருக்கின்றேன் என நேரடியாகக் கூறும்போதுதான் ஒருவனுக்கு முழுமையான இறைஞானம் கிடைக்கும் என்பது உண்மையல்லவா? இறைவன் இருப்பதை நிரூபிப்பதற்கு முழுமை பெறாத தமது பகுத்தறிவைக் கொண்டு உலகெங்குமுள்ள தத்துவஞானிகளால் எழுதப்பட்ட புத்தகங்களை ஒரு புறத்திலும், **'நான் இருக்கின்றேன்'** என்று கூறும் இறைவனின் தெளிவான குரலை மறுபுறத்திலும் வைத்து பார்த்தால், அப்புத்தகங்களெல்லாம் **இறைவனின் குரலுக்கு முன்னால்சுத்த சூனியமாய்ப் போய்விடுகின்றன. தத்துவ ஞானிகள் என்று அழைக்கப்படுவோர் இறைவனைக் காணமுடியாத**, இறைவசனத்தைக் கேட்க முடியாத கருத்துக் குருடர்களாகி இருக்கின்ற நிலையில் இறைவனைப் பற்றி அவர்கள் எவ்வாறு நமக்குக் எடுத்துக்கூற முடியும்? சுருக்கமாக, இறைவனின் உண்மையை அறிய நாடுகின்றவர்களுக்குத் தன்னைப் பற்றிய பூரணமான ஞானத்தை அருளவேண்டுமென அவன் நாடுவானாகில், தன்னுடன் உரையாடுவதற்கான வழியையும் அவனே திறந்து கொடுத்தருளுவான்.

இதைக் குறித்து இறைவன் தன் திருமறையில் உண்மையை ஆராய்ந்தறிய நாடும் ஒவ்வொருவனுக்கும் கற்றுத்தரும் பிரார்த்தனை
இதுவாகும்:

**இறைவா! உனது அருள்களைப் பெற்றவர்களின் நேரான**
**உறுதியான பாதையை எங்களுக்கும் காட்டித் தருவாயாக (1:6,7).**

இங்குக் குறிப்பிட்டிருக்கும் அருள் என்பதன் பொருள் இல்ஹாம் (இறையறிவிப்பு) மற்றும் கஷ்ஃப் (ஆன்மீகக் காட்சி) போன்ற இறைஞானமே ஆகும். இவை மனிதனுக்கு நேரடியாகக் கிடைக்கும்.

இறைவன் தன் திருமறையில் இதைக் குறித்து இவ்வாறும் கூறுகின்றான்:

**எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி அக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம்; உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)**

இத்திருவசனத்தில் இறைவன்மீது முழுமையான நம்பிக்கைக்கொண்ட நல்லடியார்களுக்குப் பயமும் துயரமும் ஏற்படும்போது இறைவன் புறமிருந்து அவர்களுக்கு இல்ஹாம் கிடைக்கின்றது என்றும், வானவர்கள் இறங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்கள் என்றும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது.

**எனவே அன்னார் மிகத்தெளிவாக ஓர் இறைக்கொள்கையில் நம்பிக்கை கொண்டு அதில் நிலைத்து இருந்தால் அந்த அடியாருக்கு இல்ஹாமின் வாசல் நிச்சயம் தீர்க்கப்படும் என்று அல்லாஹ் உறுதியளிப்பதாக கூறுகின்றார்!!!**

**மேலும் அன்னார் கூறும்போது:-**

**ஐனுல் யக்கீன்** - அதாவது ஒரு பொருளுக்கும் அப்பொருளைப் பற்றிய அறிவுக்குமிடையே வேறு எதுவும் இல்லாமல், அப்பொருளிலிருந்தே நேரிடையாகக் கிடைக்கும் அறிவே பார்வை அறிவு (ஐனுல் யக்கீன்) என்று கூறப்படும். எடுத்துக்காட்டாக, நாம் முகர்ந்தறியும் புலனால் ஒரு நறுமணத்தையோ கெட்டவாசனையையோ அறிகின்றோம். ருசியறியும்புலனால் இனிய சுவையையோ, உப்புச் சுவையையோ அறிய முடிகின்றது. தொடுவுணர்ச்சிப் புலனால் வெப்பம் அல்லது குளிரை உணர்ந்து கொள்கின்றோம். இத்தகைய அறிவுகள் அனைத்தும் ஐந்து புலன்களின் மூலம் நமக்குக் கிட்டும் பார்வை அறிவில் அடங்குகின்றவையாகும். ஆனால் மறுவுலக வாழ்வைப் பற்றிய நமது அறிவு, பார்வை அறிவு என்ற நிலையை ஏய்தவேண்டுமானால் நாம் நேரடியாக இல்ஹாம் என்னும் இறையறிவிப்பைப் பெறவேண்டும். இறைவனின் குரலை நம் காதுகளால் கேட்கவேண்டும். தெளிவானதும் சரியானதுமான

இறைகாட்சிகளை **நம் கண்களால் காணவேண்டும். இவ்வாறு இறைவனின் தெளிவான குரலைக் (- இல்ஹாம்)** கொண்டே நாம் முழு அளவில் இறைஞானத்தைப் பெறமுடியும். அந்த முழுமையான இறைஞானம் கிடைப்பதற்காகவே நம்முடைய உள்ளத்தில் ஆன்மீகப் பசியினையும், தாகத்தையும் அனுபவித்து வருகின்றோம். அந்த இறைஞான அமுதம் நமக்குக் கிட்டுவதற்கான வழிவகைகள் எவற்றையும் இறைவன் செய்து வைக்கவில்லை என்றால் அவன் இந்த ஆன்மீகத் தாகத்தை நம் உள்ளத்தில் ஏற்படுத்துவதன் அவசியம் என்ன? நமது மறுவுலக வாழ்விற்காக இவ்வுலக வாழ்வில் சர்வ வல்லமையுள்ள – என்றென்றும் உயிருடனுள்ள - சத்தியவடிவான இறைவனைப் பற்றி நமக்கு எவ்வித அனுபவமுமில்லாமல் வெறும் புராணக் கதைகளையும் வரலாறுகளையும் மட்டுமே படித்து மனநிறைவுக் கொண்டு விடத்தக்க அடிப்படையற்ற நம்பிக்கை (ஈமான்) மட்டும் இருந்தால் போதுமா? அல்லது முழுமை பெறாத பலவீனமான மனித மூளையில் பிறக்கும் அறிவு மட்டும் இருந்தால் போதுமா?

இதைப் பற்றி இறைவனே தன் திருமறையில் கூறுவதாவது:

**இவர்களே அத்தூதர்கள் நாம் இவர்களுள் சிலருக்கு**

**மற்றவர்களைவிட மேன்மையை வழங்கியுள்ளோம். (2:254)**

இவ்வேத வசனத்திலிருந்தும் இல்ஹாம் ஓர் இறையருள் என்றும், உயர்ந்த ஸ்தானம், தாழ்ந்த ஸ்தானம் என்ற படித்தரங்களுடன் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் தெரிகின்றது. அந்தஸ்தில் ஏற்படும் வித்தியாசம் இறைவனுடன் அவருக்குள்ள பற்றுதலையும் உறவையும் தூய்மையான இறைபக்தியையும் நம்பிக்கையையும் பொருத்ததாக இருக்கும். அதாவது இறைவனால் மட்டும் புரிந்து கொள்ளத்தக்க இப்பண்புகளுக்கேற்பவே படித்தரத்தில் ஏற்றத்தாழ்வுகள் அமையும். ஆனால் அருளுக்குரிய எல்லா அம்சங்களும் அடங்கிய இல்ஹாம் கிடைப்பதும் அம்மேலான குணங்களின் ஒரு பலனேயாகும். இறையடியார் ஒருவர் இறைவனிடம் செய்யும் பிரார்த்தனைக்கு விடை கிடைத்துவிடுமாயின், இவ்வாறு பிரார்த்தனையும் விடையும் இடையறாமல் தொடர்வதும், அந்த இறை அறிவிப்புகளில் இறைவனுடைய மகத்துவமும் ஒளியும் காணப்படுவதும், எதிர்காலத்தைக் குறித்து மறைமுகமான அறிவும், இறைஞானமும் அடங்கியிருப்பதும் அது

இறைவனிடமிருந்து கிடைத்த இல்ஹாமாகவே இருக்கும் என்பதற்கு சான்று பகர்கின்றன. ஒருவன் தனது நண்பனைக் கண்டு உரையாடுவதைப் போன்று இறையறிவிப்பு அமைவது அவசியமானதாகும். ஓர் இறையடியான் ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்து இறைவனிடம் வேண்டி நிற்கும் போது இறைவனின் திருச்சந்நிதானத்திலிருந்து இனிமையான பொருள் மிகுந்த வார்த்தைகளால் விடை கிடைத்தாலும், அவ்விடை அவனுடைய விருப்பத்தின் அல்லது சிந்தனையின் அல்லது ஆராய்ச்சியின் பலனாக இராமல் இறைவனின் கருணையாக -- இறையருளாக - இருக்குமாயின் நிச்சயமாக அது இறைவனின்

திருவசனமே ஆகும். இவ்வாறு இறைவசனம் கிடைக்கப் பெற்ற அடியார் இறைவனுடைய திருச்சந்நிதானத்தில் ஏற்கப்பட்ட நேசராக இருக்கின்றார். ஆனால் இத்தகைய மேலான நிலை, அதாவது தூய உயிருள்ள இறைவசனம் இறைவன் புறமிருந்து தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருப்பது எல்லாருக்கும் வாய்க்கக் கூடியதன்று.

இல்ஹாம் என்றால் என்ன? இல்ஹாம் என்பது தூய்மையானவனும் எல்லாம் வல்லவனுமான இறைவன், தான் தேர்ந்தெடுத்த நல்லடியாருடன் அல்லது தான் தேர்ந்தெடுக்க நாடும் நல்லடியாருடன், உயிருள்ள, வலிமைமிக்க திருவசனங்களின் மூலம் உரையாடுவதே ஆகும். இந்த உரையாடல், முழுமையாகவும் திருப்திகரமாகவும் நீடித்து, எவ்விதத் தீய எண்ணத்தின் இருள்படராமலும் முழுமை பெறாது இராமலும், பொருளற்ற வசனங்களாய் இல்லாமலும், ஆனந்தம் நிறைந்ததும் இறைஞானம் ததும்பியதும் கௌரவம் மிக்கதுமான உயிருள்ள திருவசனங்கள் அடங்கியதுமாக இருந்தால் அதுவே இல்ஹாம் என்று கூறப்படும். இத்திருவசனங்களால் அவன் தன் அடியாருக்கு மனநிறைவைத் தருகின்றான். அவ்வசனங்களே அந்த அடியார் முன்னால் அவனை வெளிப்படுத்தவும் செய்கின்றன.



ஆனால், இச்சீரிய வழி திறப்பது எவ்வாறு? இந்தத் திசை உயர்த்தப்படுவதற்குரிய வழிவகை என்ன? **இவை பற்றித் தெளிவான நற்செய்தி கூறும் ஒரேயொரு**

மார்க்கம் இஸ்லாம்தான் என்று சத்தியத்தைத் தேடித் திரிவோருக்கு நான் உறுதியாகக் கூறுகின்றேன். ஏனைய மார்க்கங்களோ இறைவசனம் என்னும் அருட்பேறு அதாவது இறைவன் தன் அடியானுடன் உரையாடுதல் என்ற வாசலானது நீண்டகாலமாகவே முத்திரையிடப்பட்டு அடைப்பட்டுக் கிடப்பதாக அறிவிக்கின்றன. ஆனால் இந்த முத்திரை இறைவனால் போடப்பட்டதல்ல. **மாறாக இவ்வருட்பேறு கிடைக்கப் பெறாததால் நிராசையடைந்தோர் தாமாகவே ஒரு சாக்குப் போக்கை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள்** என்பதை நான் உங்களுக்கு உறுதியாக எடுத்துரைக்கின்றேன். கண்களில்லாமல் காணவோ காதுகளி ல்லாமல் கேட்கவோ, நாவில்லாமல் பேசவோ முடியாததைப் போலவே **திருக்குர்ஆனின் உதவியில்லாமல், மெய்யான, அன்பே வடிவான, ஒளிமயமான அந்த இறைவனின் திருமுகத்தை நம்மால் காணயியலாது**. நான் எனது இளமைப் பருவத்தைத் தாண்டி, தற்போது முதியவனாக இருக்கின்றேன். இந்த நீண்டகால வாழ்க்கையில் இந்த தூய்மையான ஞான ஊற்றிலிருந்து அல்லாமல் வேறெங்கிருந்தும் மெய்ஞானமாகிய பானத்தை அருந்தி மனநிறைவு கொண்ட எந்த ஒரு மனிதனையும் நான் கண்டதில்லை!!!

இவ்வாறு ஹசரத் மஸீஹ் மவூது (அலை) கூறியிருக்க

ஆனால் இன்று அந்தோ பரிதாபம்!!! நிசாம்மே ஜமாத்தில் ஒரு வஹீயை கூட அறிவிக்க முடியவில்லை குறிப்பாக ஐந்தாவது கலீஃபதுல் மஸீஹ் அவர்களின் காலத்தில் இத்தனை பையத் இத்தனை பள்ளிகள் இத்தனை மருத்துவமனைகள் என்று கூறப்படுவதே அன்றி மாபெரும் இறை அருளனான இறை வஹீ பற்றி ஒரு நாள் கூட பேசப்படுவதும் இல்லை அதை வெளீயிடுவதும் இல்லை!!!

எனவே ஹஸ்ரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்களை நிசாம்மே ஜமாஅத் நீக்கியது இதன் நிலைமையை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

இதை தான் அல்லாஹ் திருமறையில் கூறும்போது

**இரவு(ம்) அவர்களுக்கு ஓர் அடையாளமாகும். இதிலிருந்து நாம், பகலை இழுத்துக் கொள்கிறோம். அதற்குப் பின்னர் அவர்கள் இருளில் மூழ்கி விடுகின்றனர்.**

**சூரியன், அதற்கெனக் குறித்த வரையறைக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது, வல்லோனும், ஞானமிக்கோனுமாகிய (இறை)வன் ஏற்படுத்திய திட்டமாகும்.**
**( திருக்குர்ஆன் 36: 38-39 )**

**இந்த வசனத்தில் இரவு அதாவது "இருள்" என்பதை இறை வஹீ இல்லாத காலம் என்று ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்கள்எச்சரிக்கின்றார்கள்!!!**

**சிந்திக்கும் மக்களுக்கு இதில் ஆன்மீக உணவு உள்ளது!!!**

**ஜசாக்கல்லாஹ்**

இந்த பதிலால் உங்கள் மனம் பாதிக்கபட்டால் அல்லஹ்விற்காக எங்களை மன்னியுங்கள், இதில் உண்மை இருக்கின்றது என்று தோன்றினால் இறைவனின் இந்த நூற்றாண்டின் மாபெரும் இறைவெளிப்பாட்டில் உங்களை இணைத்து கொள்ளுங்கள் இன்ஷாஅல்லாஹ் அமீன்

1. https://sahih-al-islam.blogspot.com/2011/06/why-new-massih-was-expelled.html#more
2. https://sahih-al-islam.blogspot.com/2014/05/truth-about-whispering-campaign.html#more
3. இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்

# Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu

## வெளியீட்டு

அமீர்,

**ஜமாஅத் தமிழ்நாடு**

**02.05.2020**

**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**




**மதிப்புக்குரிய**
**சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு**
**எங்கள் பதில்**

بسم الله الرحمن الرحيم

**இரண்டாவது கேள்வி:-**

தற்போது 16 மேற்பட்டவர்கள் வாதம் செய்துள்ளார்கள் கரோனா வெளிவந்த பிறகு ஒரு சிலர் வாதம் செய்துள்ளார்கள் எனவே யாரை ஏற்பது?? நீங்கள் அந்த அனைவரையும் ஏற்றுக் கொண்டீர்களா?? - கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்**

**பதில்:-**

சகோதரர் அவர்களே!!! முதலில் இந்த செய்தி இட்டுக்கட்டப்பட்ட பொய்யான தகவல் ஆகும் மேலும் ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹமத் (அலை) அவர்களின் மூலம் இறைவன் வெளிப்படுத்தும் இந்த நூற்றாண்டின் மாபெரும் இறை அருளான காலத்தின் இறைவஹீயை ,உண்மையை தேடும் நன்மக்களை கேட்கவிடாமல் குழப்பம் செய்ய சிலரால் தீய எண்ணத்துடன் பரப்பப்பட்டு வருகின்றது இத்தகைய பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக அமீன்!!!

மேலும் நீங்கள் யாரை ஏற்பது என்று கேட்டது நிச்சயமாக ஒரு உண்மையை தேடும் மனிதரின் கேள்வியாகும் அல்ஹம்துலில்லாஹ்!!!

மேலும் திருகுரானில் அல்லாஹ் குறிப்பிடும் போது

**நிச்சயமாக உமது பகைவனே ஆண் சந்ததியற்றவன்.**
**( திருக்குர்ஆன் 108: 4 )**

திருக்குர்ஆனின் கருத்துப்படி இறை அறிவிப்பைப்(இறைவஹீயை) பெறும் கூட்டத்தினரே ஆன்மீக சந்ததிகளாவர். அப்படிப்பட்ட ஆன்மீக சந்ததியினரை முஹம்மது நபி (ஸல்) அவர்களாலேயே பெறமுடியும்; அவர்களின் எதிரிகளால் பெறவிலாது, என்பது தெளிவாகின்றது

எனவே திருகுர்ஆனின் வழிகாட்டல் படி, வஹீயை வைத்து வாதம் செய்யும் ஒருவரை பற்றி அறிவது நம்மேல் மிகப்பெரிய கடமையாகின்றது.

## மேலும் திருகுர்ஆன் நம்பிக்கை கொண்டோரை பற்றிக்கூறும்போது

**உமக்கு அருளப்பட்டதன் மீதும், உமக்கு முன்னர் அருளப்பட்டதன் மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்வர். இனிமேல் வரக்கூடிய (வாக்களிக்கப்பட்ட) வற்றின் மீதும் உறுதியாக நம்புவர். இவர்கள் தங்கள் இறைவனின் நேர்வழியில் இருப்பவர்கள். இவர்களே வெற்றிக்குரியவர்களும் ஆவர்.( திருக்குர்ஆன் 2: 5-6 )**

எனவே ஹசரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதன் மீது திட்டமாக ஈமான் கொண்ட நிலையில் அதாவது முன்னுள்ள வேதங்களை ஏற்றுக்கொண்ட நிலையில் அன்னாருக்கு பிறகு வாக்களிக்க ப்பட்டவர்களுக்கு (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட சீர்த்திருத்தவாதி) இறங்கியதை ஏற்றுக்கொண்ட நிலையில் அதாவது நம்பிக்கையாளர் என்ற நிலையில் இறை வஹீயை வைத்து வாதம் செய்பவரின் வாதத்தை பற்றி சிந்திப்பது நம் மேல் இருக்கும் ஒரு தலையாய கடமையாகும்.

மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹசரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் நமக்கு இது தொடர்பாக மிகச்சிறந்த வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள் அல்ஹம்துலில்லாஹ்

வாக்களிக்கப்பட்ட **மஸீஹ்** அலைஹிவஸலாம் கூறுகின்றார்கள்:-

*ஒரு வேஷதாரிக்கு மீண்டும் மீண்டும் பொய் பிரச்சாரம் செய்ய இறைவன் அவனது உண்மையான வெளிபாடு செய்பவர் என்று எவ்வாறு அங்கீகரிப்பான்* ,இறைவன் போலியானவர்களை நிச்சயம் பிடிப்பான் என்று உங்களுக்கு உறுதியாக அறிவிக்கப்படவில்லையா ? தவ்ராத் மற்றும் தீர்க்க தரிசனங்களில் ***பொய்யான ஒரு நபி கொல்லப்படவேண்டும்*** அவர்கள் **விரைவாக பிடிக்கப்ப டுவார்கள் மற்றும் அவரை பின்பற்றுபவர்கள் சிதறடிக்கப்படுவார்கள்** என்று கூறப்படவில்லையா? இதை போன்ற ஏதேனும் ஒரு சம்பவம் கூறமுடியுமா? என்னை போல் மக்கள் மத்தியில் வெளிபாடு செய்து நீண்ட நாள் வாழமுடியுமா அப்படி இருந்தால் என் முன் கொண்டு வாருங்கள்!!!! ,நான் உறுதியாக * கூறுகின்றேன் இதை **போல் ஒரு சம்பவம் இந்த உலகம் தோன்றிய த்திலிருந்து இல்லை***

**ஒரு இறை நம்பிக்கையாளர்** /இறைவனுக்கு அஞ்சுபவர் தனது (ஜமாஅத்) நிருபனத்திருந்து ஆதாயம் பெற இப்படி கூறுவாரா?

**நான் இவ்வாறு கூறவில்லை, ஒரு சிலை வழிபடுபவர் அல்லது இறைமறுப்பாளர் அல்லது இறைவன் இல்லை என்று அல்லது நான் தான் கடவுள் என்று வாதம் செய்பவர் *நீண்டநாள் தண்டனை இன்றிவாழமாட்டார் என்று* ,இறைவன் இவர்களை போன்று வழிகெடுப்பவர்களை *பிறகு பார்த்துக்கொள்வான்* (மறுமையில் )**

ஆனால் நான் உறுதியாக கூறுகின்றேன், ***இறைவஹீயின்*** மீது பொய் உரைப்பவன் விரைவாக பிடிக்கப்படுவார்கள் இதற்கு சான்றாக *தவ்ராத் ,இன்ஜீல் மற்றும் திருக்குரான்* உள்ளது .இதன் காரணத்தினாலே தான் நான் உறுதியாக கூறுகின்றேன், ***என் எதிரிகள் இதை போன்ற ஒரு சம்பவத்தை கூட வரலாற்றிலிருந்து எடுக்க முடியாது*** (காதியான் ஜிவுள்இஸ்லாம் பிரஸ் 1899.Newly printed in ரூக்கானி காசாய்ன்(லண்டன் 1984) vol 14 பக்கம் 35-36 )

**மேலும் அன்னார் (அலை) அவர்கள் திருகுரானின் போலியாக வஹீயியை அறிபவர்களுக்கு இறங்கும் தண்டனையை பற்றி குறிப்பிட்டவராக**

**அன்றியும், நம்மீது சொற்களில் சிலவற்றை இட்டுக் கட்டிக் கூறியிருப்பாரானால் -அவருடைய வலக்கையை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டு-பின்னர், அவருடைய நாடி நரம்பை நாம் தரித்திருப்போம்.அன்றியும், உங்களில் எவரும் (நாம்) அ(வ்வாறு செய்வ)தைத் தடுப்பவர்களில்லை.(அல்குர்ஆன் : 69:44-47)**

வலக்கரத்தால் பிடிப்படுவது உறுதி என்பது.-

"... அவர்கள் எவ்வாறெல்லாம் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறினாலும் , *பொய்யான இல்ஹாம்களை உருவாக்கி அவற்றை இறைவனுடன் தொடர்பு படுத்தி ,அவனிடமிருந்து அவை வந்தன என்று கூறினாலும,* அவற்றைக் குறித்து இறைவனின் தன்மான உணர்வு பொங்கி எழாது என்ற எண்ணம் எவ்வாறு அறிவுக்கு புறம்பாக இருக்கின்றதோ அவ்வாறே அது எல்லா வேதங்களுக்கும் எதிராக இருக்கின்றது ..."(ஹக்கீக்கதுல் வஹி V 22p.- 213)

குறிப்பு: இந்த வசனத்தை தனக்குரிய வானத்தின் அடையாளமாக - 18 ஆவது அடையாளமாக 'ஹகீ கதுல் வஹீ' யில் குறிப்பிட்டுள்ளார்கள்

எனவே நம்பிக்கை கொண்ட நிலையில் வஹீயை வைத்து பொய்யாக வாதம் செய்பவரை அந்த ஏக இறைவனின் வல்லமை ஒருபோதும் அமைதிப்பதில்லை என்பதை மிகச்சரியாக புரிந்துகொள்ளமுடியும் சகோதரர்களே!!! மேலும் குறிப்பாக அன்னார் மிகத்தெளிவாக தன்னை அல்லாஹ் என்பவனை கூட இறைவன் பிறகு பார்த்துக்கொள்வான் அதாவது மறுமையில் பார்த்துக்கொள்வான் என்றும், ஆனால் இறைவஹீ வருவதாக நம்பிக்கையாளர் என்ற நிலையில் நம்பிக்கை கொண்ட மக்களை வழிகெடுக்க அந்த ஏகவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பது தெள்ளத்தெளிவாக புரிகின்றது, அல்ஹம்துலில்லாஹ்.

ஆனால் இதை பற்றிய அடிப்படை ஞானம் இல்லாத மக்கள் ரசாதி கலீஃபா வாதம் செய்துள்ளார் என்றும் கோபால் என்பவர் நபியென்று வாதம் செய்கின்றார் என்று உண்மையை தேடும் அப்பாவி மக்களை குழப்புகின்றார்கள். இதைப்போன்ற செயலையே ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் வாதம் செய்த நூற்றாண்டிலும் குறைமதி கொண்ட மக்கள், பேரரசர் அக்பர் வாதம் செய்தார் என்றும் ஜலந்தரைச் சேர்ந்த ரோஷன் தீன், நபி என்று வாதம் செய்கிறார் கூறி அன்னாரின் வஹீயின் அடிப்படையிலான உண்மை வாதத்தை உண்மையை தேடும் மக்களை குழப்பும் வண்ணம் இவ்வாறே செய்துள்ளார்கள் அந்த நேரத்திலும் அன்னார் இவ்வாறே தக்க பதிலை அளித்துள்ளார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அதே போன்ற ஒரு வரலாறு இப்போது நமது காலத்திலும் தோன்றியுள்ளது மக்கள் வஹீ வாதத்தின் உண்மை நிலையை திருகுரானின் அடிப்படையில் ஆராயாமல் தங்களது **மனோ இச்சைகளை** பின்பற்றுகின்றனர் இதைப்போன்ற மக்களை திருகுர்ஆன் மிகத் தெளிவாக எச்சரிக்கின்றது

**“வேதமுடையவர்களே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் உண்மையில்லாததை கூறி வரம்பு மீறாதீர்கள்; (உங்களுக்கு) முன்பு வழிதவறிச் சென்ற கூட்டதாரின் மனோ இச்சைகளை நீங்கள் பின்பற்றாதீர்கள்; அநேகரை அவர்கள் வழி தவறச் செய்ததுடன், தாங்களும் நேர் வழியை விட்டு விலகி விட்டனர்”(அல்குர்ஆன் : 5:78)**

இன்னும் நிதர்சனமான உண்மை என்னவென்றால் நாம் வாழும் இந்த அருளுக்குரிய நூற்றாண்டில் ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் மட்டுமே இறை வஹீயின் மூலம் தன்னை இந்த நூற்றாண்டின் உம்மதி

நபியென்று வாதம் செய்கின்றார்கள் மேலும் அன்னார் 2000 ம் ஆண்டில் தனது முதல் வஹீ தொடங்கி தொடர்ச்சியாக இறைவஹீ மூலம்




**Bismillah hir rahman nir raheem**

**La Mabooda bil Haqqe lillallah - There is no one to worship in truth but Allah**

**உண்மையில் வணக்கத்திற்குறியவன் அல்லாவை தவிர வேறு எவறும்மில்லை-**

**ஆதாரம்**
(https://sahih-al-islam.blogspot.com/2011/04/new-mujaddid-and-kerala-jamaat-i.html#more)

அன்னார் தன்னை **கலீஃபத்துல்லாஹ் (அல்லாஹ்வின்கலீபா), நபி மற்றும் ரசூல் என்று அன்னாரின் அனைத்து வாதமும் இறை வஹீயின் அடிப்படையிலானது.( ஆதாரம்**
https://sahih-al-islam.blogspot.com/2014/08/surah-al-fatiha-on-divine-guidance.html#more)

**சென்ற ஆண்டு கரோனா வைரஸ் பற்றி அன்னாருக்கு வெளிப்பட்ட வஹீயில் ஒன்று உங்கள் பார்வைக்கு, இந்த வஹி அன்னாருக்கு 20.07.2019 அன்று அரபி மற்றும் கிரியோல் மொழியில் இறங்கியது**

**Bismillah hir rahman nir raheem**

**After Tahajjud prayers Saturday 20 July 2019 17 Dhul-Qaddah 1440 AH**

**Fatawakkal 'alallaah. Innaka 'alal-Haqqil mubeen. Innaka laa tusmi-'ul-mawtaa wa laa tusmi-us-summaddu-'aaa-'a izaa wallaw mudbireen. Wa maaa anta bihaadil-'umyi an-zalaalatihim. 'In tusmi-u 'illaa may-yu'-minu bi-Aayaatinaa fahum Muslimuun. Wa izaa waqa-'al-Qawlu 'alayhim 'akhrajnaa lahum Daaabbatam-minal-'arzi tu-kallimuhum 'annannaasa kaanuu bi-'Aayaatinaa laa yuuqinuun.**

தஹஜ்ஜுத் தொழுகைக்கு பிறகு அரபி மற்றும் கிரியோல் மொழியிலும் இறங்கிய வெளிப்பாடு

பொருள்:- நீங்கள் அல்லாஹுவிடத்தில் நம்பிக்கை வையுங்கள் நீங்கள் உண்மையாகவே உண்மையின் மீது இருகிண்றீர்கள் உங்களால் இறந்தவர்களை செவியேற்க செய்ய முடியாது மேலும் முதுகு பின்னால் திரும்பிய அத்தகைய செவிடர்களை உம்மால் கேட்கும்படி செய்யவியலாது, இன்னும் குருடர்களை உம்மால் அவர்களின் தவறுகளில் இருந்து நேர்வழி செலுத்த முடியாது ஆனால் எவர்கள் உம்முடைய அடையாளங்கள் மீது நம்பிக்கை கொள்கிறார்களோ மேலும் உம்முடன் தங்களை முஸ்லிம்களாக அர்ப்பணித்து இருக்கின்றார்களோ அவர்களையே உம்மால் சீர்திருத்த முடியும் மேலும் அவர்களின் (நிராகரிப்பாளர்கள்) மீது அவர்களின் வாக்கு நெருங்கும் போது **பூமியில் இருந்து ஒரு பிராணியை நாம் வெளிப்படுத்துவோம்** மக்கள் நம் அடையாளங்களில் நம்பிக்கை கொள்ளாததே அதற்குக் காரணம்.

**ஆதாரம் காண்க** :- http://jamaat-ul-sahih-al-islam.com/jusai2019/rev_hmaa_20jul19.pdf

இந்த நூற்றாண்டின் மாபெரும் எச்சரிக்கை செய்யும் வஹீ இதன் உண்மைத்தன்மையை நாம் வாழும் இந்த காலத்தில் ஒவ்வொரு மனிதனும் அவன் அரசனானாலும் சரி பிச்சைக்காரனானாலும் சரி உணர முடிகின்றது .இந்த பூமி இதுவரை கண்டிராத மாபெரும் இறை அடையாளத்தை பார்த்த பிறகும் நம்மிடையே இறைவனின் இந்த நூற்றாண்டின் தூது செய்தி மீது நம்பிக்கை கொள்ளாமல் இருப்பது நிச்சயம் ஆச்சரியத்திற்குரியது.

மேலும் தற்போது மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு பிரிவுகளாக இருக்கும் அமைப்புகளிலும் ஒருவர் கூட இறைவஹீயை தொடர்ச்சியாக அறிவித்து தன்னை உம்மத்தி நபி என்று எவரும் வாதம் செய்யவில்லை

உங்களின் புரிதலுக்காக சுருக்கமாக பார்க்கலாம்

1. ** லாகூர் அஹ்மதிய்யா இயக்கம்**



இந்த அமைப்பு முதலாவது கலீஃபதுல் மஸீஹ் ரலி அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹசரத் மஸீஹ் அலை அவர்கள் நபி மற்றும் ரசூல் இல்லை என்றும் அன்னார் ஒரு முஜத்தித் என்றும் மஸீஹ் அலை அவர்களின் சில சஹாபிகளால் 1914 ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும் இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் இறுதி நபி என்ற இறுதிநபி என்னும் வழிகேடு கொள்கையை கொண்டவர்கள். இங்கே வாதம் செய்யும் ஆண் சந்ததி எவரும் இல்லை

2. **ஜமாஅத்ததே அஹ்மதிய்யா ஹக்கீ பிரிவு**



தோற்றுநர் டாக்டர் நஸீர் சுல்தானி சாஹிப் அவர் தன்னை 15 வது நூற்றாண்டின் முஜத்தித் என்று வாதம் செய்கின்றார் இவரும் இறுதி நபி கொள்கை என்னும் வழிகேட்டு கொள்கையில் உள்ளவர்.

ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் இவருடன் முபாஹிலா செய்ததன் விளைவாக அல்லாஹ்வின் தண்டனையால் பிடிக்கப்பட்டு பாகிஸ் தான் சிறையில் உள்ளார் அவரது இயக்கம் சிதறடிக்கப்பட்டு அவரது வெப்சைட்டும் முடக்கப்பட்டு விட்டது **ஆதாரம் காண்க** :- https://sahih-al-islam.blogspot.com/2013/06/mubahila-statement-on-nasir-ahmad.html#more

இது சம்பந்தமாக **ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹமத் (அலை)** கூறும்போது இந்த இடத்தில் நான் உங்களிடம் தெளிவு படுத்துகின்றேன் நான் அந்த புனித நபி எம்பெருமான் (ஸல்) அவர்களை போன்ற பரிபூரண முழுமைபெற்றவன் என்று ஒருபோதும் நான் கூறவில்லை, ஆனாலும் அந்த ஏக இறைவன் என்னை **ஒரு சிறிய முஹம்மத்தாக முயற்சி செய்யும் பொருட்டு என்னை தேர்வுசெய்துள்ளான்** மேலும் அன்னாரின் அடிசுவற்றை பின்பற்றுவதன் மூலம் **அன்னாரின் உம்மத்தில் நபியாக ஒரு சீர்திருத்தவாதியாக** தகுதியை பெற்று இஸ்லாம் மற்றும் முழுமனித சமுதாயத்தையும் சீர்த்திருத்த நான் வந்துள்ளேன். நிச்சயமாகவும் உங்களிடம் மீண்டும் மீண்டும் கூறிக்கொள்கின்றேன் நான் எனது எஜமானார் தூய நபி பெருமானார் (ஸல்) அவர்களின் கணுக்காலில் உயரத்தின் நிலையை கூட நான் ஒருபோதும் எட்டவில்லை,மேலும் அல்லாஹ் என்னை ஆதாம் என்றும் தாவூது என்றும் அழைத்துள்ளான் என்பதன் அர்த்தம் நான் என் எஜமானர் பெருமானார் (ஸல்) அவர்களை விட உயர்ந்தவன் அல்லது சிறந்தவன் என்றில்லை, மேலும் நான் ஒரு புதிய மார்க்கத்தை கொண்டுவந்துள்ளேன் என்பதும் இல்லை, மாறாக இதன் அர்த்தம் அல்லாஹ் என்னை இன் நபிமார்களின் குணஇயல்புடன் அனுப்பியுள்ளான், என்பதும் ஏனைய நபிமார்களின் சிறப்புகளையும் என் மூலமாக பிரதிபலிக்கின்றான் என்பதாகும்.அவை நூறு சதவீதம் இல்லாவிட்டாலும் அவன் என் தோலின் மீது வைத்துள்ள வேலையை நான் சிறப்புடன் செய்வதற்க்காகவே அவன் இவ்வாறு செய்கின்றான்.

ஆனால் இப்போது மேலும் துரதிஸ்டவசம் என்னவென்றால் மக்கள் தங்களது உலக சட்டங்களை பயன்படுத்தி தனது சகோதரர் இஸ்லாத்தை பின்பற்றுவதிலிருந்து தடுக்கின்றனர். இன்னும் இதன் மூலம் தங்களது சுய கருத்துக்களை வெளிடுகின்றனர் இந்த உண்மை ஒரு பக்கம் இருக்க சில தினங்களுக்கு முன் **நாசிர் சுல்தானி** என்பவர் என்னை பொய்யர் என்று கூறி தன்னை உண்மையாளர் என்று வாதம் செய்தார். இதற்கு பிறகு பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் கைது செய்து சிறையில் ஒரு வருடத்திற்கு மேலாக அடைந்துள்ளார்கள் என்பதை அறிந்தேன் அனேகமாக மார்ச் 2017 வரை அவரைப்பற்றிய எந்த தகவலும் இல்லை, **நான் அல்லாஹ்வின் கலீபா** என்ற முறையில் பாகிஸ்தான் உயர் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். அவரை சிறையில் இருந்து விடுதலை செய்யுங்கள், உங்களை நான் எச்சரிக்கின்றேன்! ஒருவரின் நம்பிக்கையை பற்றி தீர்மானிப்பது உங்கள் வேலை அல்ல அது முழுக்க நம்மை படைத்த அல்லாஹ்வின் பணியாகும் அவரை உண்மையாளர் என்றும் பொய்யர் என்றும் தீர்மானித்து தண்டிப்பது அல்லது கௌரவ படுத்துவது உங்கள் வேலையில்லை, இறைக்கட்டளை


இல்லாமல் எவர் தான் இறைபுரத்திலிருந்து வந்துள்ளேன் என்று வாதம் செய்தால் அவரை பொய்யர் என்பதை அல்லாஹ் மட்டுமே தீர்த்துவைப்பான் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

### 3. அஹ்மதிய்யா முஸ்லீம் ஜமாஅத்



புனித தோன்றுவர் ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது மேலும் அன்னார் வாக்களிக்கப்ட்ட மஹதி மற்றும் மஸீஹ் க்கும் ஆவார்கள் மேலும் அன்னாருக்கு பிறகு ஹசரத் முஸ்லிஹ் மவூத் (ரலி) அவர்கள் 1944 ம் ஆண்டு இறைவஹீயை பெற்று தன்னை வாக்களிக்கப்பட்ட சீர்த்திருத்தவாதி என்று வாதம் செய்தார்கள். அன்னாருக்கு பிறகு இறைவஹீயை பெற்று வாதம் கிடையாது, மேலும் இப்போது உள்ள அஹ்மதியா ஜாமத்தில் கொள்கையின் படி இந்த கிலபாத் இறுதிதீர்ப்புநாள் வரை தொடரும் இன்னும் குறிப்பாக இந்த நபிமார்கள் அல்லாத கலீபாதுல் ரசூல் மார்களே தொடர்வார்கள் என்றும் மஸீஹ் (அலை) அவர்களுக்கு பிறகு நபி (ஸல்) அவர்களின் நூற்றாண்டு கலீஃபத்துல்லாஹ்க்கள் வருகை முற்றுப்பெற்று விட்டது என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்கும் ஒருவர்தான் எனவே மஸீஹ்க்கும் இறுதியானவர் என்ற நம்பிக்கையில் உள்ளார்கள்.

### 4. க்ரீன் அஹ்மதிய்யா



க்ரீன் அஹ்மதிய்யா இதன் தோற்றுநர் மிர்சா ரபி அஹ்மத் சாஹிப் அஹ்மதிய்யா ஜமாத்தின் முன்றாவது கலீபா தேர்வில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக ஜமாத்தில் இருந்து வெளியேறி நூற்றாண்டின் வர வேண்டிய இறை அருளனான முஜத்தித் மக்களை பற்றி கூறி வந்தார் அவரின் வபாத்திற்கு பிறகு சிலரால் அவரது வெப்சைட் நடத்தபடுகின்றது அவர் தன்னை

முஜத்திக் என்று கூறினார் என்று கூறு கிறார்கள் இப்போது எந்த வாதமும் கிடையாது.

5. **அஹ்மதிய்யா இஸ்லா பெசன்ட்**

தோற்றுநர் அப்துல் கபார் ஜனாபா, மஸீஹ் (அலை) அவர்கள் முன்னறிவித்த முஸ்லிஹ் மவூது என்று வாதம் செய்கின்றார் மேலும் ஹசரத் மிர்சா பசுரூதீன் மஹமூத் அஹமத் (ரலி) அவர்கள் ஒரு பொய்யர் (நஊதுபில்லாஹ்) என்று கூறுகிறார். இவ்வாறு பொய்யாக ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்களை இழிவு படுத்தியபோதும் நிசாம்மே ஜமாஅத் எந்த ஒரு ஆன்மீக போருக்கும் அழைக்கவில்லை ஆனால் காலத்தின் இமாம் ஹசரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் அவரை முபாஹிலாவிற்கு அழைத்தார்கள் பல்வேறு சாக்குபோக்குகளை கூறிய ஜனாபா இறுதியில் கையொப்பம் இட்டு உள்ளார் ஹசரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் கூறும்போது முபாஹிலா செய்த ஜனாபா அதிக பாவமன்னிப்பு கேட்பதால் தண்டனையின் காலம் தாழ்த்தபட்டுள்ளது நிச்சயம் இறைத்தண்டனைக்கு ஆளாவர் என்றுகூறி உள்ளார்கள்.



**ஆதாரம் காண்க** :-https://sahih-al-islam.blogspot.com/2014/02/on-mubahila-against-janbah-sahib.html

6. **அஹ்மதிய்யா அல் மௌசலேமின்**

சபாருல்லாஹ் டொமேன் சாஹிப் மற்றும் ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்களால் தோற்றுவிக்கபட்டது இது இந்நூற்றாண்டின் இறை வெளிப்பாட்டின் ஆரம்ப காலகட்டத்தில் ஏற்படுத்தபட்டது இப்போது சபாருல்லாஹ் டொமேன் சாஹிப் அவர்களால் நிர்வகிக்கபடுகின்றது இவர் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் ஆசிம் (அலை) அவர்களை காலத்தின் இமாம் ஆக ஏற்று பையத் செய்ததன் அருளாக இறைவஹீயின் அருளை பெற்றார் பின்பு அன்னாரை பிரிந்துவிட்டார்.முன் சென்ற நபிமார்களின் வாழ்க்கையில் இதை போன்றவர்கள் நபிமார்களிடம் இருப்பதால் இறைவஹீயின் அருளை பெற்றதன் மூலம் அவர்களை விட்டு பிரிந்து

சென்று உள்ளார்கள் இன்னும் குறிப்பாக கூறுவதென்றால் நபி (ஸல்) அவர்களின் வஹீயை எழுதியவர்க்கு வஹீ வந்தால் தனக்கும் வஹீ வருகின்றது என்ற கர்வத்தில் அன்னாரை பிரிந்து சென்றார் , ஹசரத் மூசா (அலை) அவர்களின் காலத்தில் பல்லாம் போன்றவர்கள் இன்னும் ஹசரத் மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்ட காஸ்மீர் கான் அன்னாரை பிரிந்து சென்று மஸீஹ் வாதம் செய்த வரலாறும் உள்ளது. ஹசரத் முனீர் அஹ்மத் அலை அவர்களும் அவரை பல்லாம் என்றே குறிப்பிடுகின்றார்கள்

**ஆதாரம் காண்க**:- https://sahih-al-islam.blogspot.com/2012/02/zafrullah-domun-sahib-then-now-i.html#more

இவர்களை பற்றி அல்லாஹ் திருமறையில் கூறும்போது

நாம் எம்முடைய அடையாளங்களை வழங்கிய ஒருவருடைய நிலையை நீர் அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! பின்னர் அவர் அவற்றிலிருந்து நழுவித் தனித்துவிட்டார். இதனால் ஷைத்தான் அவரைப் பின்பற்றிச் சென்றான். ஆகவே அவர் வழிதவறியவர்களைச் சேர்ந்தவராகிவிட்டாரநாம் விரும்பியிருப்பின் அவற்றின் (அடையாளங்கள்) மூலம் நாம் அவரை உயர்த்தியிருப்போம். ஆனால் அவர் பூமியின் பக்கம் சாய்ந்தது தமது (தீய) விருப்பங்களைப் பின்பற்றிச் சென்றுவிட்டார். எனவே அவருடைய நிலை ஒரு நாயின் நிலையை போன்றது. அதனை நீர் தாக்கினாலும் அது நாக்கைத் தொங்கவிட்டு மூச்சிரைத்துக் கொண்டிருக்கும். இதுவே எம்முடைய அடையாளங்களைப் பொய்ப்படுத்தும் சமுதாயத்தினரின் நிலையாகும். எனவே அவர்கள் சிந்திக்கும் பொருட்டு நீர் இந்த வரலாற்றை அவர்களிடம் எடுத்தியம்புவீராக.( திருக்குர்ஆன் 7: 176-177 )

## <u>ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்</u>

**ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹமத் (அலை) அவர்களால் இறையாணைப்படி தோற்றுவிக்கப்பட்டு தொடர்ந்து இறைவனின் மாபெரும் அருளால் இந்த நூற்றாண்டின் இறைவஹீ கொண்டு வாதம் செய்யும் ஹசரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆண் சந்ததியை பெற்ற மேலும் அன்னாரின் 14வது கலீபத்துல்லாஹ்வை கொண்ட ஜமாஅத், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை தொடர்ந்து நூற்றாண்டின் முஜத்தித், கலீபா மற்றும் இமாம்களின் வருகையை**

**ஏற்றுக்கொண்டு நுபுவ்வத்தின் வாசலை திறந்து, அதாவது மஸீஹ் மார்களின் அருளின் கதவை திறந்து வைத்துள்ள ஒரே ஜமாஅத் ஆகும்.**

**அன்னார் கூறும்போது:-**



**மனித குலமே கேளுங்கள்!**
**முஸ்லீம் சமுதாயமே கேளுங்கள்!!**
**'அஹமதிகளே கேளுங்கள்!!!**
**என் சகாபிகளே கேளுங்கள்!!!!**
**முன் சென்ற சமுதாயம் செய்த தவறை நீங்களும் செய்யாதீர்கள், நபிமார்களை அனுப்பும் இந்த அருளை அல்லாஹ் ஒருபோதும் உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளமாட்டான், இதற்கு பிறகும் என்னை போன்ற நபிமார்களை அல்லாஹ் அனுப்புவான், நான் இந்த காலத்திற்கு மட்டும் நபியாவேன், என்னை போன்றவர்கள் தீர்ப்புநாள் வரை 'தொடர்வார்கள் உங்களிடம் நான் கூறியது நிச்சயம் நிகழும்.**

**ஆதாரம் காண்க** https://sahih-al-islam.blogspot.com/2018/05/the-khalifa-of-islam-title-and-tasks.html#more

எனவே அன்பு சகோதரர்களே முன் சென்ற சமுதாயம் செய்த தவறை நாமும் செய்வதா? வஹீ வாதத்தின் முக்கியத்துவத்தை அறிந்த மக்களாக திருகுரானின் அடிப்படையில் ஒரு வாதத்தை பார்ப்பதே சிறந்ததாக இருக்கும், மேலும் இதைப்போன்ற 16 நபர்கள் 20 நபர்கள் 60 நபர்கள் வாதம் செய்கிறார்கள் என்று பொய்யை பரப்புபவர்களிடம் ஆதாரப்பூர்வமாக திருகுரானின் அடிப்படையில் ஆராய்வதே சிறந்ததாக இருக்கும்.

**உங்களுக்கு உண்மையை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவானாக !!! இன்ஷாஅல்லாஹ் ஆமீன்!!!**

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




மதிப்புக்குரிய
சகோதரர்களின்



கேள்விகளுக்கு
எங்கள் பதில்

**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**02.05.2020**


**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**

بسم الله الرحمن الرحيم

## முன்றாவதுக்கு கேள்வி:-

## நபிமார்களின் வருகையின் நோக்கம் என்ன மேலும் அவர்கள் செய்கின்ற முக்கிய பணிகள் என்ன???- கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்**

**பதில்:-**

அல்ஹம்துலில்லாஹ்!!! இந்த கேள்வி பொதுவாக ஒரு நபி வருகையின் நோக்கம் சம்பந்தமாக இருப்பதால் இந்த கேள்விக்கு அழகியமுறையில் பதில் அளிக்க புனித திருகுர்ஆனில் இருந்தும் இமாம்களின் கூற்றில்லிருந்தும் இந்த நூற்றாண்டில் இறைவனின் அருளாகவும் பெருமானார் (ஸல்) அவர்களின் கிலாபத்தின் 14 வது கலீபா ஹசரத் முஹையதீன் அல் கலீபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்களின் கூற்றுகளில்லிருந்து பார்க்கலாம், மேலும் இது சிறிது நீண்ட பதிவாக இருக்கும், ஏனென்றால் இந்த அருளுக்குரிய நூற்றாண்டில் குறைமதி கொண்ட மக்கள் இக்காலத்தில் தூதர்களின் தேவை என்ன? மேலும் அவர், குறிப்பாக முன் சென்ற தூதர்களின் பெயரை குறிப்பிட்டு இதைப்போன்று இவர் என்ன செய்தார்? இவர் சமுதாயத்திற்கு என்ன தொண்டு செய்தார்? இன்னும் என்ன புரட்சி செய்தார்? என்று அடிப்படை திருகுர்ஆன்னின் போதனைகளை விட்டுவிட்டு தங்களது மறுக்கும் மனப்பான்மையால் தங்களது மனோஇச்சைகளை பின்பற்றுகின்றனர்

இவர்களை பார்த்து திருமறை இவ்வாறு கூறுகின்றது

இதற்கு முன்னர் யூஸுஃப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். ஆனால் அவர் உங்களிடம் கொண்டு வந்தது குறித்து நீங்கள் ஐயப்பாட்டிலேயே இருந்தீர்கள். அவர் மரணமடைந்த போது, அவருக்குப் பின்னர் எந்தத் தூதரையும் அல்லாஹ் ஒருபோதும் அனுப்ப மாட்டான் என்று நீங்கள் கூறினீர்கள். இவ்வாறே அல்லாஹ், வரம்பு மீறுபவர்களாகவும், ஐயம் கொள்பவர்களாகவும் இருப்பவர் களை வழி தவறியவர்கள் என்று (முடிவு எடுத்துக்) கொள்கிறான். ( திருக்குர்ஆன் 40: 35 )

இது எவ்வாறு இருக்கிறது என்றால் மனிதனின் நிலை நபிமார்கள் தோன்றும் போது அவர்களை எதிர்ப்பதும் அவர்கள் காலம் சென்றதிற்கு பிறகு அவரை போன்று அல்லது வேறு எவரும் வரமாட்டார்கள் என்று கூறி அருளாக தோன்றக் கூடியவர்களை மறுப்பதும் முந்திய காலத்திலிருந்து தொன்று தொட்டு வரும் ஒருநடைமுறையாக உள்ளது.

மேலும் நபிமார்கள் சென்ற பிறகு அவர்களுக்கு இறங்கிய வஹீயை ஒரு கதையை போல படிக்க ஆரம்பிக்கின்றனர் ஆனால் சென்ற நூற்றாண்டில் அல்லாஹ்வின் அருளாக நபி (ஸல்) அவர்களின் கிலபாத்தின் 13 வது கலீபா ஹசரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்;-

**“வஹீ”** என்பது ஒரு நிரூபிக்கப்படாத முந்திய காலத்தில் நடந்த சம்பவம் போல நினைக்கின்றார்கள் இது ஒரு தவறான எண்ணமாகும் நபிமார்கள் அலைஹி வஸ்ஸலாம் உலகிலிருந்து வாரிசு இல்லாமல் சென்று விடுகின்றார்கள் என்ற எண்ணமும் ஒருபோதும் சரியானது அல்ல. **இப்போது அவர்கள் தொடர்பாக கூறப்படும் எந்த ஒரு கருத்திற்கும் கதையைப் படிப்பதை விட அதிகமாக சிறிதளவு கூட நம்பகத்தன்மை இருக்காது**. ஆனால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தேவைகேற்ப அவர்களின் வாரிசுகள் உருவாகி கொண்டே இருப்பர். ( பரக்காத்துத் துஆ ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம்21-24).



அன்னார் மிகத்தெளிவாக நபிமார்களின் தொடர் அதாவது நூற்றாண்டின் இறை வெளிப்பாட்டின் தேவையை பற்றி குறிப்பிடுகின்றார்கள். மேலும் ஒரு தூதர் வருகையின் முக்கிய நோக்கம் அவர் மூலம் குறிப்பாக அவருக்கு இறக்கும் வஹீயின் மூலம் **இறைவன் தனது முகத்தை தான் நாடிய அவனது அடியானுக்கு காட்டுகின்றான்.**

இதையே அன்னார் (அலை) இவ்வாறு நமக்கு அழகாக புரியும் வகையில் ஒரு தூதரின் வருகையின் நோக்கத்தை பற்றி குறிப்பிடுகின்றார்கள்:-

ஏகத்துவம் கற்களில் மறைந்து இருக்கின்ற அந்த நெருப்பை போன்றே வைக்கப்பட்டுள்ளது என்பதே இதில் உள்ள ரகசியம் ஆகும். தூதர், நெருப்பு மறைந்திருக்கும் கல் போன்றவர், அந்த கல்லின் மீது தனது கவனத்தை செலுத்துகின்ற அடியின் மூலமாக அந்த நெருப்பு வெளியில் கொண்டு வரப்படுகின்றது எனவே தூதர் என்ற இந்த கல் இல்லாமல் ஏகத்துவத்தின் நெருப்பு ஏதோ ஒரு உள்ளத்தில் உருவானது என்பது ஒருபோதும் சாத்தியமாகாது* ,ஏகத்துவத்தை தூதர்கள் மட்டுமே பூமிக்கு கொண்டு வருகின்றார்கள் அவர்கள் மூலமாகவே இது

பெறப் படுகின்றது **இறைவன் மறைவானவனாக இருக்கின்றான், அவன் தனது முகத்தை தூதர் மூலமாக காட்டுகினறான்**.

எனவே ஒரு தூதர் வருகையின் நோக்கம் இந்த உலகத்தில் உயிருள்ள ஓர் இறைவனை அவனது அடியானுக்கு காட்டுவதே ஆகும்.

**எல்லா நபிமார்களும் ஒரே நோக்கத்திற்காகவே வருகை தருகின்றார்கள்**!!! இந்த உலகில் நபிமார்களது வருகையின் முக்கிய நோக்கம், அவர்களது போதனை மற்றும் பிரச்சாரத்தின் மகத்தான நோக்கம் என்னவென்றால், மனிதகுலம் சர்வவல்லமையுள்ள இறைவனை அங்கீகரிக்க வேண்டும், என்பதும் பாவகரமான வாழ்க்கை என்று அழைக்கப்படுகின்ற நரகத்திற்கும் அழிவிற்கும் இட்டுச் செல்கின்ற வாழ்க்கையிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். உண்மையில், இதுவே அவர்களுக்கு முன் இருக்கின்ற மிக முக்கியமான குறிக்கோள் ஆகும்.இப்போது சர்வவல்ல மையுள்ள இறைவன் ஓர் (இறை) அமைப்பை நிறுவி என்னை எழுப்பி உள்ளான். (இதுவே) எல்லா நபிமார்களுக்கு உரிய பொதுவான அதே நோக்கமும், நான் வருவதன் நோக்கமும் ஆகும்.அதாவது, **மிகத்தெளிவாக கூறுவதென்றால், இறைவன் என்றால் என்ன என்பதை உலகுக்கு (எடுத்துக்)கூறுவது மட்டுமல்லாமல், உண்மையில் அவர்கள் அவனைப் பார்க்க வேண்டும் என்பதும்**, பாவத்திலிருந்து விலகி இருப்பதற்கான வழியை (அவர்களுக்கு) காட்ட வேண்டும் என்பதும் எனது விருப்பமாகும்.( **மல்யூஷத் தொகுதி 3 பக்கம் 11( ஆங்கில மொழி பெயர்ப்பு Essence of Islam Vol 4 page 108)**

அல்ஹம்துலில்லாஹ் இவ்வளவு அழகான வழிகாட்டல் இருந்தும் சில குறைமதி கொண்ட மக்கள் தங்கள் கொண்ட கொள்கையை காப்பாற்றுவதற்காக உலக காரணிகளை முன் வைத்து இந்த மேலான அருளை எதிர்க்கின்றனர். மேலும், அவர் என்ன தொண்டு செய்தார்? என்ன புத்தகம் எழுதினார்? சமூக சேவை செய்தாரா? அவரை எத்தனை பேர் பின்பற்றுகின்றார்கள்? பின்பற்றுபவர்களிடம் என்ன குறையுள்ளது? அவர் பள்ளிக்கட்டினாரா? மாற்று சமைய மக்களுக்கு சென்று கூறினாரா? இன்னும் சில அறிவிலிகள் தொலைக்காட்சி சேனலில் வந்து தினம் தோறும் அல்லாஹ்வின் மேல் சத்தியம் செய்யவேண்டும் என்று கூறுகின்றனர்.

ஆனால் மாறாக அல்லாஹ் தனது தூதர் மூலம் அவனை வெளிப்படுத்துகின்றான், மேலும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களின் உம்மத்தில் இந்த அருளின் கதவு இன்னும் விசாலமாக திறக்கப்பட்டுள்ளது. எப்போதெல்லம் **சில சாக்கு போக்குகளை உருவாக்கி இறைவனின் தொன்மையான சட்டம்**

**தாக்கப்படுமோ** அப்பொதெல்லாம் நம்பிக்கைகொண்ட மக்களில் ஒருவரை தேர்வு செய்து அவன் தனது இருப்பை அவனது வஹியின் மூலம் வெளிப்படுத்துகின்றான் , எனவே தான் நம்பிக்கை கொண்ட நிலையில் இறைவன் தனது வஹீயை வைத்து வாதம் செய்ய அவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. மேலும்காத்தமுன் நபிய்யீன் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு வேதம் மற்றும் ஷரியத் முற்றுப் பெற்றுவிட்டதால் இனி அன்னாரின் நிழல்களாக தோன்றும் அருளுக்குரியவர்கள் இறைஇருப்பை பற்றிய செய்தியையே கொண்டுவருவார்கள்.

இதை இறைவேதம் இவ்வாறு கூறுகின்றது

**நற்செய்தி உடையவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமன்றி நாம் தூதர்களை அனுப்புவதில்லை. ஆகவே, நம்பிக்கைக் கொண்டு (தம்மைச்) சீர்திருத்திக் கொள்கின்றவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றி) எவ்விதப் பயமும் ஏற்படாது; அவர்கள் (சென்ற காலம் பற்றிக்) கவலைப்படவும் மாட்டார்கள். ( திருக்குர்ஆன் 6: 49)**

ஒரு தூதர் வருகையால் நம்பிக்கை கொண்டோருக்கு இறைஇருப்பை பற்றிய நற்செய்தியும் அந்த வஹீயை மறுப்பவர்களுக்கு எச்சரிக்கையாகவும் உள்ளது. இன்னும் ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் சம்பந்தமாக இந்த கூற்று மேலும் நமக்கு உண்மைப்படுத்துகின்றது:-

இந்த எளியவன் மீண்டும் மீண்டும் இதைத்தான் கூறுகின்றேன் அதாவது சகோதரர்களே!!! நான் எந்த புதிய மார்க்கத்தையும் புதிய போதனையையும் கொண்டு வரவில்லை இன்னும் சொல்வதென்றால் நான் உங்களிடம் இருந்து வந்துள்ள உங்களைப் போன்ற ஒரு முஸ்லிமாக இருக்கின்றேன் முஸ்லிம்களாகிய நாம் செயல்படுவதற்கும் வழி காட்டுவதற்கும் திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதமும் இல்லை. ஜனாப் காத்தமுன் முர்ஸலீன் அஹ்மதே அரபி (ஸல்) அவர்களை தவிர நாம் பின்பற்றி நடப்பதற்கு அல்லது மற்றவர்களை பின்பற்ற வைக்கும் வேறு எந்த ஒரு வழிகாட்டியும் பின்பற்றத்தகுந்தவரல்ல. இதை நான் கூறும் நிலையில் மார்க்கப்பற்றுள்ள முஸ்லிமுக்கு **இறைஅறிவிப்பின் அடிப்படை** யில் உள்ள எனது வாதத்தின் மீது நம்பிக்கை கொள்வதில் அபாயம் என்ன இருக்க **முடியும் எனது இந்த இல்ஹாம்களும் கஷ்ஃபுகளும் தவறானது என்றும் எனக்கு எதுவெல்லாம் கட்டளையிடப்பட்டுள்ளதோ** அதை புரிந்து கொள்வதில் எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கற்பனையாக வைத்துக்கொண்டாலும், இதை ஏற்றுக் கொள்பவர்கள் மீது என்ன குற்றம் இருக்க முடியும் இது மார்க்கத்தில் ஏதாவது இடையூறு ஏற்படுத்தக் கூடிய ஏதாவது ஒரு விஷயத்தின் மீது நம்பிக்கை கொண்டு விட்டாரா?...( **இஸ்லயே அவ்ஹாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம்186-189)**

இன்னும் ஒரு ஈஷாவின் வருகையின் நோக்கத்தை பற்றி திருக்குர்ஆன் கூறும்போது

**எனக்கு முன்னுள்ளதை அதாவது தவ்ராத்தை மெய்பிக்கக் கூடியவனாகவும் ,உங்களுக்கு விலக்கப்பட்டிருந்த ஒரு சிலவற்றை உங்களுக்கு அனுமதிக் கப்பட்டதாக ஆக்குவதற்காகவும் (வந்துள்ளேன்). உங்களிடம் உங்கள் இறை வனிடமிருந்து ஓர் அடையாளத்துடன் நான் வந்துள்ளேன். எனவே அல்லாஹ்விற்கு அஞ்சி எனக்குக் கட்டுப்பட்டு நடங்கள். ( திருக்குர்ஆன் 3: 51 )**

இந்த வசனத்தில் விலக்கப்பட்டது என்பதன் பொருள் அதாவது அவர்களின் தீய செயல்கள் காரணமாக உங்களுக்கு தடை செய்யப்பட்டிருந்த **இறைவஹீ** என்முலம் மீண்டும் ஆரம்பமாகும் என்பதாகும்.(**திருக்குரான் அஹ்மதிய்யா தமிழ் மொழிபெயர்ப்பு பக்கம் 139)**

எனவே சகோதரர்களே! ஒரு இறைத்தூதர் வருகையின் முதன்மை நோக்கம் மிகத்தெளிவாக விளங்குகின்றது,மேலும் நாம் வாழும் அருளுக்குரிய நூற்றாண்டில் இந்த காலத்தின் இறைத்தூதர் முஹையதீன் அல் கலீ**ஃ**பத்துல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்களும் இவ்வாறு போதிக்கின்றார்கள்



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீக அருள் என்னவென்றால் அது அன்னாரை பின்பற்றும் ஒருவரால் இறைவனை நேரடியாக தொடர்பு கொள்ள முடியும் என்பதாகும், இதன் மூலமாக இறைவனை அவனது ஆன்மாவாலும், உயிராலும் அவனுடன் ஒன்றிவிடவும், **இதன் மூலம் அந்த அருளாலனின் இனிமையான குரலையும் மற்றும் அவனுடைய தொடர்பினையும்வெளிப்படுத்தலாம் .இதுவே நபிமார்களை பின்பற்று வதால் கிடைக்கும் பிரத்யேகமான அருளாகும்**, இந்த அருளே முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கிடையே யான வித்தியாசம் ஆகும். இதுவே இஸ்லாத்தின் தனிசிறப்பாகும், இதனை முஸ்லீம்களும், அஹ்மதிகளும்மறந்துவிட்டனர், இதனையே இவர்களது

கவனத்திற்கு ஜமாத்துல் சஹீஹ் அல் இஸ்லாம் கொண்டு வருகிறது.( **புத்தகம் WHY CREATING JAMAAT UL SAHIH AL ISLAM? பக்கம் 17)**

மேலும் அன்னார் இக்காலத்தில் ஒரு இறை தூதர் வருகையின் அவசியம் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்

இப்போது உள்ள இக்கட்டான ஒரு முக்கிய காலகட்டத்தில் அல்லாஹ் சுபஹானஹுதாலா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா(ஸல்) அவர்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவூது(அலை) அவர்களையும் ஏற்றுக்கொண்டுள்ள தனது உண்மையான அடியார்களுக்காக ஒரு சிறந்த ஜமாஅத்தை எழுப்பியுள்ளான், அதாவது ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாமை எழுப்பியுள்ளான். இது எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால் எல்லாவிதமான அநீதிகளுக்கு எதிராக உண்மை இஸ்லாத்தை பாதுகாக்கின்றது. மேலும் முஸ்லீம் அல்லாத மாற்று மதங்கள் இஸ்லாத்திற்கு எதிராக வைக்கும் அனைத்து கேள்விகளுக்கும் மிக சிறந்த முறையில் பரஸ்பரம் முழு திருப்தியாகும் வகையில் பதிலை வழங்குகின்றது, இன்னும் இந்த ஜமாஅத்தை இந்த எளியவனின் இந்தகாலத்தின் முகையூதீன் என்றும் அல்லாஹ்வின் கலீஃபா (கலீபஃத்துல்லாஹ்) மற்றும் பல்வேறு வாதத்துடன் எழுப்பியுள்ளான். இவற்றை கேட்டு கோபமும் எரிச்சலும் அடைந்த எனது எதிரிகளும் நயவஞ்சகர்களும் எல்லையை மீறி என்மீது அவதூறுகளையும் அபாண்டங்களையும் பரப்புகின்றனர், இவர்களின் அவதூறு எவ்வளவு கீழ்த்தரமாக ஆகிவிட்டது **என்றால் அவர்கள் என்னை பார்த்து போதைக்கு அடிமையானவன், சூனியக்காரன் (மந்திரவாதி), குழப்பவாதி, ஒரு பொய்யன், நாய் பன்றி போன்ற எந்த பெயரையும் விட்டுவைக்கவில்லை,இன்னும் இவர்கள் என்னை காஃபீர் என்றும் போலி நபி என்றும் ஃபத்துவாவும் கொடுக்கின்றனர்**

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ் இதில் எந்த அதிசயமும் இல்லை மேலும் எனக்கு இதில் ஆச்சரியமும் இல்லை ஏனென்றால் எப்பொழுதெல்லாம் இறைபுரத்திலிருந்து ஒருவர் தோன்றும் போது இவ்வாறே நடந்துள்ளது. சிறிது காலம் சென்றதிற்கு பிறகே இவர்களின் (இறைபுரத்தில் இருந்து வந்தவர்களின்) உண்மையான நிலையை புரிந்துகொள்ளமுடியும். அவர்கள் என்மீது கொடுக்கும் காஃபீர் ஃபத்துவாக்களையும் அவர்கள் எனக்கு எதிராக வைக்கும் பெயர்களையும் பார்த்து நான் ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை ஏனென்றால் அவர்கள் எனக்கு கஷ்டம் கொடுக்கவேண்டும் என்று செய்வதெல்லாம் அவர்களின் ரூஹுவை (ஆத்மாவை) தீங்கு இழைத்து கொள்கிறார்களே அன்றி அந்த ஏக இறைவனால் தேர்தெடுக்கப்பட்டவர்களுக்கு அதனால் எந்த குறைவும் ஏற்படப்போவதில்லை. மேலும் இவர்கள் எவ்வளவு மூர்க்கத்தனமாக என்னை எதிர்த்து என்னை துன்புறுத்தவேண்டும் எற்று முயல்கின்றார்களோ அவ்வளவு அதிகமாக என்னை கொண்டு அவனது தீனை மேலோங்க செய்கிறான். மேலும் அவன் இதன் மூலம்

பெருமானார் (ஸல்), மஸீஹ் மௌவூது(அலை) மற்றும் திருகுரானின் சிறப்பையும் நிரூபித்துக்காட்டுகின்றான்.

எனது அன்பிற்குரியவர்களே! நான் நிச்சயமாக அல்லாஹ்வின் கையில் உள்ள பாத்திரமே ஆவேன் இந்த எளியவனை அவன் என்ன நாடுகின்றானோ அதை என்னை கொண்டு செய்கின்றான், அல்லாஹ் எந்த ஒரு நோக்கத்திற்காக ஒருவரை தேர்வு செய்கிறானே அப்போதிலிருந்தே அவர் முழுவதும் அவனையுடையதாகின்றார், மேலும் அவர் அல்லாஹ்வின் விருப்பப்படியே செய்கின்றார். அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் அனுமதி மற்றும் வழிகாட்டல் இல்லாமல் அவர் எதையும் செய்வதில்லை, அவர்களின் அனைத்து செயல்களும் அவன் வகுத்த எல்லைக்குட்பட்டே செய்கின்றார்கள், ஒவ்வொன்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் ஒரு குறிப்பிட்ட வேலைக்காகவே படைக்க ப்படுகின்றது, அதுபோலவே நம்மிடையே தோன்றும் தூதர்களும் மேலும் அவர்களுக்கு தூதை கொண்டுவரும் தேவதூதர்களும் (மலக்குகள்) ஒருகுறிப்பிட்ட பணிக்காகவே எழுப்பப்படுகின்றனர்.

இஸ்லாமிய மக்களாகிய நாம் ஒரு சிறந்த முஸ்லிம்களாக மாற நாம் என்ன செய்யவேண்டும் என்பதை குறிப்பாக ஒரு ஆணோ அல்லது பெண்ணோ அத்தகைய உயர்ந்த நிலையை எவ்வாறு அடைவது என்பதை பற்றி சிந்திக்கவேண்டும், இஸ்லாம் ஒரு உயிருள்ள வாழும் மார்க்கமாகும் எனவே தான் எந்த ஒரு காலத்திலும் அதன் வெற்றி முஸ்லிம்களின் கையில் மட்டுமே தான் உள்ளது.

எனது அருமையானவர்களே! இந்த உலகத்தில் இந்த உண்மையை தேடும் எத்தனையோ மனிதர்களை பார்க்கலாம். அவர்கள் இந்த உண்மை மார்க்கமாகிய இஸ்லாத்தை ஏற்ற பிறகு இறைவனின் மாபெரும் அருளால் அவர்களின் ஆன்மிக மற்றும் பௌதிக வாழ்க்கையில் மிக சிறந்த மாற்றம் ஏற்பட்டு முன்னேற்றத்தின் பாதையில் செல்கின்றனர். ஆனால் இஸ்லாம் காட்டும் கொள்கை மற்றும் கருத்தின் பக்கம் நாம் பயணம் செய்வது முதலில் கஷ்டமாகவும் கடினமாகவும் இருந்தாலும், எவர் அல்லாஹ்வையும் அவனது அனைத்து கட்டளைகளையும் பேணி இஸ்லாத்தின் அனைத்து போதனைகளையும் கடமைகளையும் உண்மையான நம்பிக்கை கொள்கின்றோம் என்று கூறும் அனைத்து முஸ்லிம்களும் உண்மையான தியாகம், செயல் சீர்த்திருத்தம் மற்றும் உண்மையான இறைநாட்டம் இல்லாமல் முன்னேறுவது சாத்தியமானதன்று,

உங்கள் அனைவரையும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்காக அந்த ஏக இறைவனே எனக்கு கட்டளையிட்டு நியமித்துள்ளான், மேலும் என்னை இழிவாகவும் கீழ்த்தரமாக பெயரை வைத்தும் அழைப்பவர்கள் அல்லது எனது செய்தியை பாரபட்சமாக பார்ப்பவர்களுக்கும் அல்லது என்மீது வெறுப்பு கொண்டவர்களுக்கும் அல்லது எனது வாதத்தை புரியாதவர்களுக்கும் என்று அனைத்து மக்களுக்கும் இன்னும் ஏன் மௌலவிகளையும் மார்க்க அறிஞர்களையும் (முப்திகள்) என்னை

எதிரியாக பார்ப்பவர்களுக்காகவும் நயவஞ்சர்களுக்கும் என்று அனைவரையும் அவன் பக்கம் அழைப்பதற்காக வந்துள்ளேன், எனவே என்னை அனுப்பிய அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் சுபஹானஹுதாலாவிடம் உண்மையாகவும் உருக்க மாகவும் இறையச்சத்துடன் தூய உள்ளத்துடன் அதிக அதிகமாக துஆ செய்து யார் நேரான வழியில் உள்ளார்கள் யார் வழிதவறிவிட்டார்கள் என்பதை கேளுங்கள், ஆனால் நான் உங்களிடம் உறுதியாக கூறுகின்றேன் எவர் இந்த எளியவனின் உண்மைத்தன்மையை ஏற்றுக்கொண்டார்களோ அல்லது என்னை அவர்களின் எதிர்காலம் என்று ஏற்று என்மீதும் எனது வாதத்தின் மீதும் நம்பிக்கை கொள் கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக நான் உறுதியளிக்கின்றேன், நீங்களே அருளுக்குரிய மக்கள் ஒருபோதும் நீங்கள் நஷ்டவாதிகள் அல்ல. இந்த உலக வாழ்க்கை ஒரு எல்லைக்குட்பட்டதும் தற்காலிகமானதாகும் ஆனால் உண்மையான வாழ்க்கையும் அதற்கான கூலியும் உண்மையான வெகுமதியும் உங்கள் உழைப்பின் உண்மையான பலன்களையும் அருட்கொடைகளையும் அந்த ஏக இறைவன் உங்களுக்கு தற்காலிக இந்த உலகத்தில் மட்டும் இல்லாமல் மறுமையிலும் வழங்குவான். அங்கு உங்களுக்கு கிடைக்கும் அருள்கள் எல்லையற்றதாகும் அங்கு எப்போதும் சாந்தியும் சமாதானமும் நிலவும் மேலும் ஒரு அடியான் அவனது இறைவனுடன் இணக்கமாக ஒரு நிரந்தரமான தொடர்பில் இருப்பான், இதுவே ஒரு உண்மையை தேடும் இறையாடினின் உண்மையான வெற்றியாகும்.

இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட எந்த மதத்தையும் பின்பற்ற கூடியவர்களில் ஒருவராக நீங்கள் இருந்தால் நிச்சயமாக அந்த ஏக இறைவன் பல்வேறு சமயங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு நபிமார்களை அனுப்பியுள்ளான் என்பதையும் நம்பிக்கை கொண்டே ஆகவேண்டும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் (நாட்டிற்கும்) ஒரு தூதர் இல்லாமல் இல்லை என்பத்திற்கேற்ப ஆப்பிரிக்கா கண்டத்தில் இன்னும் சொல்வதென்றால் ஆப்பிரிக்கா கண்டதில்லிருந்து தொலைவில் அனைத்து பக்கத்திலும் கடலினால் சூழப்பட்ட வெறும் 13 லட்சம் மக்கள் தொகை கொண்ட மிகச்சிறிய தீவு நாடான மௌரீஷியஸ் நாட்டில் அல்லாஹ் சுபஹானஹுதாலா அவனது அருளாக அவனுடைய கலீஃபத்துல்லாஹ்வை அவனது நபியை தேர்தெடுத்துள்ளான் ஏனென்றால் இந்தியாவுக்கும் இங்கிலாந்திருக்கும் பிறகு மஸீஹ் மௌவூது(அலை) அவர்களின் ஜமாஅத் ஆரம்பித்த நாடு இந்த சிறிய தீவான மௌரீஷியஸ் தான். இங்கு 1915 ஆம் ஆண்டே மிஷன் தொடங்கப்பட்டுவிட்டது மேலும் மௌரீஷியஸ் நாடு பன்முக கலாச்சாரம் கொண்ட உலகின் முக்கிய மதங்களின் பல பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு சிறிய தீவு நாடாகும்

மனித குலத்தின் ஆன்மிக முன்னேற்றம் என்பது இதைப்போன்ற உன்னதவர்களின் அடிப்படையிலே உள்ளது எனவே இறைவனால் தேர்தெடுக்கப்பட்டவர்கள் அவர்களிடையே தோன்றாமல் வெறும் (ஆன்மிக) இருளை தவிர இந்த உலகத்தில் வேறு ஒன்றும் இருக்காது. இதைத்தான் அந்த ஏக இறைவன் அவனது

திருமறையில் கூறும்போதுஎச்சரிக்கை செய்பவர் எவரும் வராத எந்தச் சமுதாயமும் இல்லை என்று விளக்குகின்றான்

எனவே **இப்போது நபிமார்கள் வருகைக்கான பொதிந்துள்ள இரகசியத்தை ஆராய்ந்தால் அதற்கு முக்கிய காரணமாக அந்த மக்களிடையே ஆன்மிக சீரழிவு காணப்படும் மேலும் மனித இனம் மற்றும் இறைவனின் நேரடியாக தொடர்பு துண்டிக்கப்பட்டிற்கும்**, **இது எவ்வாறென்றால் இந்த பூமி நெடுக்காலமாக வறண்டு காய்ந்து உயிரற்ற வறட்சி காலத்திற்கு பிறகு அந்த மேகக்கூட்டங்களுக்கு இடையில் மழையாக இந்த பூமியை உயிர்ப்பித்து புத்துணர்ச்சியை மலர செய்வது போல் எப்போதும் நபிமார்கள் நம்மிடையே தோன்றுவார்கள். எனவே நம்பிக்கைக் குரியவர்களே! நம்மிடையே கடந்த காலத்தில் நபிமார்கள் வந்தது போன்று எதிர்காலத்திலும் வந்துகொண்டே இருப்பார்கள், என்பதில் திட்டமாக நம்பிக்கை கொள்ளுங்கள், அவர்களின் வருகையை தடுக்கும் அனைத்து காரண காரியங்களிலிருந்து முற்றிலும் தவிர்ந்து கொள்ளுங்கள், மேலும் இறைவஹீயின் கதவு ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை அது எப்போதும் திறந்தே உள்ளது, இதுவே நமது உறுதியான நம்பிக்கையாகும். இறுதிக் காலங்களில் ஈமானை மீட்டெடுக்க வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதிகள் தேவை என்பதற்கேற்ப நாம் வாழும் இந்த காலத்தில் ஒரு நபியின் தேவையின் பக்கம் நம்மை கொண்டுசெல்கின்றது, இன்னும் நமது நம்பிக்கை நம்மிடையே தோன்று பவரை அவரின் சாட்சியத்தை வைத்து மட்டும் ஏற்றுக்கொள்வதில்லை மாறாக முந்திய நபிமார்களை ஏற்று அவர்களின் சாட்சியத்தின் மூலமுமே நாம் நம்பிக்கை கொள்கின்றோம், மக்கள் மனிதில் இழந்துபோன நம்பிக்கையை மீட்டு இறையச்சதை மீண்டும் ஏற்படுத்தவே அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் என்னை நியமித்துள்ளான்.முன்னுள்ள நபிமார்களின் மற்றும் சீர்த்திருத்த வாதிகளின் உண்மையான போதனைகளை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு காலத்தில் இறைவனிடம் இருந்து அவனுடைய தூதர்கள் வருவது அவசியமா கின்றது,அவ்வாறு தோன்றும் தூதர்கள் முன்சென்ற அல்லாஹ்வின் தூதர்களின் மான்பை பாதுகாப்பதுடன் அவர்களின் தெளிவான செய்தியையும் இறைவனின் தெளிவான போதனைகளையும் நமக்கு அளிக்கின்றார்கள் எனது அருமையானவர்களே! நீங்கள் ஒன்றை நன்றாக புரிந்துகொள்ளுங்கள், எனது வருகையின் மூலம் எனக்கு முன் சென்றவர்களை பொய்யர்கள் என்று முத்திரைகுத்திவிட்டு எனது வாதத்தை நான் வைக்கவில்லை மாறாக உண்மையில்**

**எனது வாதம் முன்சென்ற அனைவர்களில் வாதத்தையும் உண்மைப் படுத்துவதுடன் இந்த உறுதியான அழகான முத்து மாலையில் மேன்மேலும் முத்துக்கள் சேரும் என்றும் இது கியாமத்து நாள் வரை தொடரும் என்றும் தோன்றக்கூடியவர்கள் அனைவரும் ஒன்றன்பின் ஒன்றாக ஒருவரை ஒருவர் உண்மைப்படுத்திக்கொண்டே செல்வார்கள் என்பதே ஆகும், இதுவும்**

**இறைவெளிப்பாடுகள் (வஹீ) வைத்தும் வாதம் செய்பவர்களை அடையாளம் கண்டு கொள்ள ஒரு சிறந்த வழியாகும்**, மேலும் இறைவன் எனக்கு நியமித்துள்ள முக்கிய பணி அதாவது எனது வருகையின் முக்கிய நோக்கம் அடியார்கள் மறந்துபோன நிலையில் உள்ள ஆன்மிக உண்மைகளை போதித்து இறைவனுடன் அவனது அடியானின் அன்பையும் இறையச்சத்தையும் இறைபக்தியையும் மீட்டெடுப்பதே ஆகும். இதற்க்கு எல்லாம் மேலாக அல்லாஹ்வின் ஒளியை மீட்டு அந்த ஓரிறைவனை மீண்டும் அவர்களின் இதயத்தில் நிறந்தரமாக எத்திவைத்து அனைத்து பொய்த்தெய்வங்களில்லிருந்து அதை உருவாக்கும் கருத்துக்களிலிருந்தும் முற்றிலுமாக தூய்மைபடுத்தவே ஆகும். எனவே என்னை இறைவன் இந்த ஆன்மிக அவலநிலையிலிருந்து மனிதனை மீண்டும் அந்த உண்மையான தூய இறை நெருக்கத்தின் பக்கம் எடுத்துச்செல்ல அனுப்பியுள்ளான்

எத்தனையோ பேர் இறைவனை பற்றியும் ஆன்மிகத்தை பற்றியும் பேசுவதை பார்த்திருக்கின்றோம், ஆனால் உண்மையில் அவர்களின் உள்ளங்களில் பௌதீக உலக ஆசைகள் நிறைந்திருக்கும், எனவே அனைவரும் அந்த ஏக இறைவனுடைய உதவியுடனும் அவனது வார்த்தையுடனும் மனித குலத்தை சந்தேகம் தவறான நம்பிக்கை தவறான உறுதிப்பாடுகளிலிருந்து வழிநடத்த இந்த காலத்தில் தேவையுள்ளது என்பதில் நீங்கள் அனைவரும் என்னுடன் நிச்சயமாக உடன்படுவீர்கள் என்று நினைக்கின்றான் ,மேலும் எப்போது மார்க்கம் என்பது வெற்று பேச்சுகளாகவும் உண்மையின் நிலை கவலைக்கிடமாகவும் இன்னும் உலகின் சிலப்பகுதியில் உண்மை ஆற்றல் இழந்து போன நிலையிலும் மற்றும் உணர்வில்லாமலும் இறந்து கிடக்கும் நிலையில் இருக்கும்போது **மனிதகுலத்திற்கு ஒரு நபியின் தேவை இருப்பதை புரிந்துகொள்ளலாம் மேலும் அவ்வாறே இன்றும் தேவைப்படுகின்றார் என்பதை புரிந்துகொள்ளுங்கள்**!

மேலும் அல்லாஹ் தனது தூதர்கள் மற்றும் நபிமார்களின் மூலம் சத்தியத்தின் உண்மையை மக்களை உணர செய்து அவர்களை பாதுகாப்பானாக, உலகத்தின் தலை சிறந்த மனிதரும் உலகில் தோன்றிய நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாக **விளங்கும் நமது பெருமானார் காத்தமுன் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) உம்மத்திற்கு இதை போன்ற சீர்த்திருத்தவாதிகளை எழுப்புவதன் மூலம் அன்னாரின் மதிப்பை யுகனாள் (கியாமத்து) வரை மேலோங்க செய்வானாக அல்லாஹ் தனது தூய உடன்படிக்கையை பாதுகாப்பானாக மேலும் அவர்கள் மூலம் இந்த உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைத்து அந்த தூய ஓரிறைவனை வணக்கும் ஆனந்தத்தை அடைவோமாக**.

தொடர்ச்சியாக இறைவஹீயை வெளிப்பாடுகளை பற்றியும் பார்ப்போம், இறைவெளிப்பாடு என்பது இறைவனுடைய வார்தை மற்றும் அவனுடைய வழிகாட்டலும் ஆகும், மேலும் அல்லாஹ் தான் நாடும் அடியானை தேர்ந்தெடுத்து அவனுடன் உரையாடுவதன் மூலம் இறைவன் அவனை படைக்கப்பட்டதன்

நோக்கத்தை வெளிப்படுத்துகின்றான் , மேலும் இந்த வெளிபாடுகளை பெறுபவர் அதன் அர்த்தத்தையோ அல்லது வார்த்தையையோ பெறுகின்றார் இவ்விவரண்டுமே அல்லாஹ்விடம் இருந்துதான் வருகின்றது, இறைவஹீயே மனிதனின் உண்மையான (ஆன்மிக)வாழ்வாதரமாகும், இதன்முலமாகவே அவன் வாழ்கின்றான் மேலும் இதுவே அவருடைய படைத்தவுடனுடன் ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்து கின்றது, இறைவனிடம் இருந்து வெளிபடும் இத்தகைய வார்த்தைகள் ஒரு தனித்தன்மைவாய்த்த ஆற்றலையும் வல்லமையையும் கொண்டது மேலும் இறைவனை தவிர ஒருவராலும் இதை உருவாக்கமுடியாது மேலும் அதுவே ஞானம் மற்றும் அறிவின் கருவூளம் ஆகும். இன்னும் இவை மிக மிக ஆழமான அர்த்தத்தை கொண்டுள்ளது இதை எவ்வாறு சொல்வதென்றால் ஒரு சுரங்கத்தில் ஆழமாக செல்ல செல்ல அதிக விலைமதிப்புமிக்க கற்கள் கிடைக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும் இறைவஹி என்பதன் அற்புதத்தின் ஆழம் இந்த சுரங்கத்துடன் கூட ஒப்பிடமுடியாது ஏனென்றால் இதன் ஆழத்தின் மகிமை அந்த சுரங்கம் அதன் எல்லையை எட்டிவிட்டாலும் அதன் ஞானத்தின் ஆழத்தை அடையமுடியாது.

இன்னும் இறைவஹீயை பற்றி கூறுவதென்றால், இது ஒரு கடலை போன்றது அந்த கடலின் மேற்பரப்பில் அழகிய நறுமணத்தையும் அந்த கடலின் அடிப்பகுதியில் விலையுயர்ந்த உயர்ரக முத்துக்களும் விரிக்கப்பட்டுள்ளது,எனவே எவர் அதன் மேற்பரப்பை மட்டும் அடைகிறார்களோ அவர்கள் அந்த மேற்பரப்பில் உள்ள வாசனை யை அனுபவித்து மகிழ்கின்றனர்,ஆனால் எவர் அதில் ஆழமாக மூழ்குவாரோ அவர்களுக்கு நறுமணத்தையும் அந்த அழகிய முத்தையும் அடைகின்றார், மேலும் இறைவெளிப்பாடுகள் பல்வேறு வகைப்படும் சிலவேளைகளில் அது கட்டளை மற்றும் சட்டதிட்டங்களாகவும் சிலவேளைகளில் அது அறிவுரை போதனை களாகவும், சிலவேளைகளில் மறைவானவற்றின் அறிவாகவும்,சில வேளைகளில் உண்மையான ஆன்மிக ஞானமாகவும், சில வேளைகளில் அது அல்லாஹ் நம் மீது காட்டும் நல்லெண்ணமாகவும் மற்றும் நமது கோரிக்கைகளின் ஒப்புதலாகவும் , சிலவேளைகளில் அவனுடைய மறுப்பு மற்றும் அதிருப்தியில் வெளிப்பாடாகவும் , சிலவேளைகளில் அவனுடைய அன்பும் அரவணைப்பாகவும் சிலவேளைகளில் அவனுடைய கோபம் மற்றும் எச்சரிக்கையாகவும், சிலவேளை களில் அது அறநெறி களை போதிப்பதாகவும், சிலவேளைகளில் மறைவான தீமைகளை பற்றி அவனிடம் இருந்து கிடைக்கும் நுண்ணறிவாகவும் இருக்கிறது. சுருக்கமாக கூறுவதென்றால் ,நமது நம்பிக்கை இதுவாகும் அதாவது இறைவன் தனது அடியார்களுடன் தான் நாடியவர்களிடம் பேசக்கூடியவன் அவ்வாறு பேசும் அவனது தொடர்பு சூழ்நிலைக்கு ஏற்றாற்ப்போலும் அதை பெறுபவர் ஆன்மிக நிலையை பொருத்தும் மாறுபடுகின்றது.

எப்போது இந்த உலகத்தில் இருள் பரவத்தொடங்குமோ அப்போதில்லிருந்து மனிதன் பாவத்திலும் தீமையிலும் மூழ்கிவிடுகின்றான் ,இந்த நேரத்தில் இறைவனின் உதவி கிடைக்கவில்லை என்றால் மனிதன் ஷைத்தானின் பிடியில்லிருந்து அவர்களாகவே விடுபடுவது மிக கடினமாகிவிடுகின்றது, இந்த சமயத்தில் அல்லாஹ் அவனது

கருணையாலும் கிருபையாலும் தனது அடியார்களில் அன்பு மற்றும் விசுவாசம் கொண்ட தான் நாடியவரை தானே தேர்வு செய்து அவர்க்கு இந்த உலகை வழிநடத்த பணிக்கின்றான்.

எனவே ஒரு நபி தோன்றும்போது, அவரும் அவரை ஏற்றுக்கொண்ட உலகத்தின் ஒரு பிரிவை சார்ந்த மக்களும் அந்த ஓரிறைவனாகிய அல்லாஹ் சுபஹானஹுதாலாவை மட்டுமே வணங்குவார்கள் மேலும் அவனுக்கு எதையும் இணைவைக்க மாட்டார்கள், எனது அருமையானவர்ளே! ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் ஒரு நபி தோன்றும் போது தான் அங்கு அநீதிக்கு பதிலாக நீதியும் கொடுமைக்கும் பதிலாக கருணையும் பிறக்கின்றது, எனவே ஒரு இறைத்தூதர் மூலமே இறைவன் அவருடைய சித்தத்தையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றான், எவர் அவரை விட்டு விலகுகின்றார்களோ அவர்கள் தங்களுக்கு தாங்களே அநீதி இழைத்துக் கொள்கிறார்கள், ஆனால் எவர் இதன் பக்கமாக தனது கவனத்தை செலுத்து கின்றார்களோ அவர்கள் அந்த ஏக இறைவனின் அன்பை பெறுகின்றனர், மேலும் அவனது மேலான கிருபையாலும், கருணையாலும் அந்த அருள்களின் கதவுகளை அவர்களுக்காக அவன் திறக்கிறான், இன்னும் இந்த மேன்மையான அருளை அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் பெறுகின்றார்கள் , மேலும் அவர்களே இவர்களுக்கு பிறகு வரும் சந்ததியினருக்கு ஆன்மிக போதனைகளுக்கு முன்னோடியாகின்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தனது ஸஹாபிகளுக்கு போதித்த இஸ்லாம் இன்று எங்கே சென்றது, இந்த உண்மையான போதனைகளை ஏற்றுக்கொள்ளாத பெயர் தாங்கிய மௌலவிகளும் , அஹ்மதியா ஜமாஅத்தின் முல்லாக்களும் ,பெயர் தாங்கிய அமீர்களும் அப்பாவி மக்களை தனது பிடியில் வைப்பதற்காக மார்க்கத்தில் உள்ள இறை போதனைகளை தங்களுக்கு ஏற்றார் வகையில் திரித்து கொள்ள சிறிதும் தயங்குவதில்லை, இதனாலேயே இறைவன் எங்களுடன் பேசுகின்றான் என்று கூறியதற்காக நம்மை புறக்கணிப்பதில் எந்த வித தயக்கமும் அவர்களுக்கிடையே இல்லை, இன்னும் அவர்களின் நம்பிக்கை எவ்வாறு உள்ளதென்றால் இப்பொது இறைவெளிப்பாடு பெறக்கூடிய தகுதியை உடையவர் கலிபஃஅதுல் மஸீஹ் மட்டுமே என்று கூறுகின்றனர், மேலும் இது எந்த அளவிற்கு போய்விட்டது என்றால் இது தான் உண்மை என்று மார்க்க விவாதங்களிலும் கூற ஆரம்பித்துவிட்டனர், இதை எல்லாம் கேட்கும்போது இப்பொது உள்ள இஸ்லாத்தின் மீது சில சமயங்களின் நமக்கு சிறிது சந்தேகம் தோன்ற ஆரம்பிக்கின்றது, மேலும் இப்பொது உள்ள முஸ்லிம்கள் நடைமுறைகளை பார்க்கும்போது நிச்சயமாக உண்மை இஸ்லாத்தை பிரதிபலிப்பதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் ஏனென்றால் இஸ்லாம் எதற்காக தோற்றிவிக்கப்பட்டதோ அதன் நோக்கத்தை இப்போது அது வெளிப்டுத்துவதில்லை.

இந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்களின் பொன்மொழியை நினைவு படுத்துகின்றான் அன்னார் இவ்வாறு கூறினார்கள் அதாவது:-

**"ஒரு காலம் வரும் அப்போது இஸ்லாத்தில் அதன் பெயரை தவிர வேறு எதுமே எஞ்சியிருக்காது"**

இப்போது இவர்கள் நம்பிக்கை கொண்டு பின்பற்றி வருகின்ற இவ்வகையான இஸ்லாமால் எவ்வாறு அதன் பொன்னான சமயத்தில் அது வெளிப்படுத்திய சிறந்த தாக்கத்தை போல் இன்று ஏற்படுத்துவதில்லை, மேலும் இப்போது இவர்களால் தடம் பாதிக்கப்பட்ட இஸ்லாமாலும்,இறைவனின் இறுதிமார்கத்தின் பாதுகாவலர்கள் என்றும் மார்க்க அறிஞர்கள் என்று கூறிக்கொள்ளும் இவர்களாலும் மேலும், இவர்களின் மார்க்கத்தின் அரைகுறை விளக்கத்தாலும் சடங்குசம்பிரதாயங்களும்,அந்த மறைத்த பொற்காலத்தின் இஸ்லாத்தின் மேன்மையை பார்த்து கவரப்பட்ட மாற்றுமத சகோதரர்கள் இஸ்லாத்தின் ஏற்றுக்கொண்டாலும் துரதிஷ்டவசமாக அவர்களால் அந்த உண்மையான இஸ்லாத்தின் போதனையை உறுதியாக பிடிக்க முடியவில்லை

மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் மற்றுமொறு நபி மொழியின் பாகம் நான் உங்களை அழைத்து செல்வேன் அதாவது அன்னார் கூறும்போது

**"எனது உம்மத் பொழிந்துகொண்டிருக்கும் மழையை போன்றது இந்த மழையின் முந்தியது சிறந்ததா அல்லது பிந்தியது சிறந்ததா என்று எனக்கு தெரியாது"( முஸ்னத் அஹ்மத் திர்மிதீ)**

இந்த ஹதீதில் இருந்து மிக தெளிவாக இறைவனின் இந்த இறுதி மார்க்கம் ஆகிய இஸ்லாம் ஒவ்வொரு காலமும் அந்த காலத்திற்கு ஏற்ற எல்லையில்லா புத்துயிரை வழங்குவதற்கான நோக்கத்தை தன்னுள்ளே கொண்டுள்ளது ,மேலும் திருகுரானின் தெளிவான விளக்கத்தின் மூலம் கிடைக்கும் வாக்குறுதி படியும் இதை மேலும் **பெருமானார் (ஸல்) அவர்கள் உறுதியளித்துள்ள வாக்குறுதியின் படியும் அன்னாரின் இறைபோதனைகளுக்கு பாதுகாவர்களாக வாக்களிக்கப்பட்ட சீர்த்திருத்தவாதிகள், ஷரியத் அல்லாத நபிமார்கள் மற்றும் அல்லாஹ்வின் பிரதிநிதிகள் கியாமத்து நாள் வரை வந்துகொண்டே இருப்பார்கள். மேலும் அல்லாஹ் மிக உறுதியாக அவன் இறக்கிய திருகுரானை அவனே பாதுகாக்கின்றான் இந்த உறுதிமொழியை அவன் சூரத்துல் ஹிஜிர்ரில் இவ்வாறு கூறுகின்றான்**

**இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம் (15: 10)**

இப்போது கேள்வி என்னெவன்றால் அல்லாஹ் அவன் இறக்கிய திருகுரானை மனிதனின் உள்ளத்திலும் செயல்வடிவிலும் எவ்வாறு பாதுகாக்கின்றான் மேலும் அது

**இன்னுமொன்று,முதன்மையானவர்கள்,இவர்கள்முதன்மையானவர்களேயாவர். இவர்களே (இறைவனுக்கு) நெருங்கியவர்களாவார்கள். பேரின்பத் தோட்டங்களில் (இவர்கள் வாழ்ந்து வருவர்). முன்னவரைச் சேர்ந்தவர்கள் பெருங்கூட்டமாகஇருப்பார்கள். பின்னவரைச் சேர்ந்தவர்கள் சிறு கூட்டமாக இருப்பார்கள். (56: 11-15)**

வெறும் எழுத்துக்களாக "**கல்வெட்டை**" போல பாதுகாக்கின்றான் என்று எடுத்துக்கொள்ளமுடியுமா இப்போது ஒருவேளை இவ்வாறு தான் பாதுகாக்கின்றான் என்று இருந்தால் பிற்காலத்தில் தங்களை முஸ்லீம்கள் என்று வாதம் செய்பவர்களிடம் ஒரு நூல் இலை அளவிற்கு கூட உண்மை இஸ்லாம் அவர்களிடம் இருக்காது எனவே இங்கே கூறப்படுகின்ற பாதுகாப்பு என்பது என்ன?

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதிநாட்கள்களில் தனது தோழர்களின் ஒத்த காலத்தை அடைவார்கள் என்று முன்னறிவித்துள்ளார்கள், இஸ்லாத்தின் முதலில் உதித்த ஒளிக்கதிர் மகிமையுடையது இதையே பெருமானார் (ஸல்) அந்த நபிமொழியில் மழைக்கு ஒப்பிட்டு கூறுகிறார், மேலும் இந்த அருளுக்குரிய இந்த மழை தொடர்ச்சியாக இந்த உம்மத்திற்கு அன்னாரின் காலத்திற்கு பிறகும் நீடிக்கிறது, இன்னும் கவனமாக படித்தால் உங்களிலிருந்து உங்களுக்கு பிறகு வரக்கூடியவர்கள் யார் என்று அறியலாம், மேலும் அவர்கள் உண்மையான முஸ்லிம்களாக அவர்களுக்கு முன் அவ்வாறு தோண்றியவர்களை கிட்டத்தட்ட ஒத்திருப்பார்கள் ஆனால் முழுவதும் அவர்களை போல் இருப்பார்கள் என்று கூறுவது கடினம் , ஏனென்றால் இந்த எளியவனின் கருத்தின் படி இஸ்லாத்தின் தோற்றத்தில் அதாவது ஆரம்ப காலத்தின் மகிமை வேறு எந்த காலத்துடனும் ஒப்பிடமுடியாது,இருப்பினும் இந்த இறுதி நாட்களில் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் அவனது நபியின் மூலம் அந்த மழைக்கு உத்தரவாதம் வழங்குகின்றான், இதையே அவன் தனது திருமறையில் இவ்வாறு குறிப்பிடுகின்றான்

**மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (62: 4)**

மேலும் ஒரு நபி மொழியில் இவ்வாறாக கூறப்பட்டுள்ளது:-

“ எனது உம்மத்தில் முதல் மற்றும் கடைசி பகுதியை சார்ந்தவர்கள் சிறப்புடையவர்கள், இவர்களுக்கு இடையில் சில கோணல்புத்தியுள்ளவர்கள் இருப்பார்கள். என்று கூறியபின் “ நம் சகோதரர்களை பார்க்க நான் ஆசைப்படுகிறேன்” என்று சொன்னார்கள்.மக்கள் (நபித்தோழர்கள்) , அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்கள் “சகோதரர்கள்” இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “நீங்கள் என் தோழர்கள் தாம்” என்று அன்னார் பதிலளித்தார்கள்

முஸ்லீம் ஹதீத் தொகுப்பில் உள்ள இந்த நபிமொழியில் மிக தெள்ளத்தெளிவாக இங்கே குறிப்பிடுகின்ற “சகோதரர்கள்” என்று பெருமானார் (ஸல்) கூறுபவர்களை அன்னார் பார்த்ததே இல்லை என்பதும் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உலகத்தைவிட்டு சென்றதிற்கு பிறகு இறுதிக்காலத்தில் தோன்றக்கூடியவர்கள் என்பதும், இன்னும் பல்வேறு விளக்கங்களில் இங்கே குறிப்பிடப்படும் “சகோதரர்கள்” இறுதிக்காலத்தில் தோன்றக்கூடியவர்கள் என்பதும் தெளிவாகின்றது.

**எனவே திருகுரானும் நபி மொழியும் எதிர்காலத்திலும் இறைத்தூதர்கள் தோன்றுவார்கள் என்பதையே மிகத்தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது, மேலும் இறைவனால் தேர்வு செய்து இனி வரக்கூடியவர்கள் இறுதிவேதத்தை கொண்டுவந்த காத்தமுன் அன்பிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிம்பமாகவும் அன்னாருக்கு இறைவன் அருளிய உண்மையான போதனைக்கு புத்துணர்வு வழங்குபவர்களாகவும் வருவார்கள், மேலும் அல்லாஹ் இந்த போதனைக்கையும் வாழ்கை நெறிமுறைகளையும் மறுமை வரை பாதுகாப்பதாக உறுதிமொழி அளித்துள்ளான்**

நான் உங்களிடம் மேலே கூறிய ஹதிதுகளில் ஞானத்திலிருந்து, எத்தனையோ முஸ்லீம் அமைப்புகள் அவர்களுக்கிடையே எண்ணற்ற கருத்து வேறுபாட்டை கொண்டுள்ளனர். மேலும், அதில் உள்ள எந்த அமைப்பும் நபியே கரீம் (ஸல்) அவர்களுடன் அவர்களின் ஸஹாபிகள் வாழ்ந்துபோல் அல்லது பெருமானார் (ஸல்) அவர்கள் தனது இதயத்துக்கு இதயமாக சந்திக்கவிற்கும் அந்த “சகோதரர்கள் போலவும் இல்லை, ஏனென்றால் இவ்விவரண்டிருக்கும் அவர்கள் வாழும் காலத்தில் ஒரு அல்லாஹ்வின் நபியின் ஆன்மிக அருளின் கீழ் வரமால் இது சாத்தியமற்றது.

இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தை நான் உங்களுக்கு தெளிவுபடுத்த விருப்புகின்றேன் அதாவது ஜமாஅத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்பது ஒரு புதிய மார்க்கம் அல்ல, என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் ,மேலும் இந்த ஜமாஅத் இஸ்லாத்தில் பிரிவினையை ஏற்படுத்துவற்காகவும் தோன்ற வில்லை ,மாறாக அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் தனது மகிமை வாய்த்த அந்த இஸ்லாத்தை மீண்டும் உருவாக்குகின்ற ஒரு கருவியாக இதை எழுப்பியுள்ளான்.

எனவே நான் உங்களிடம் மீண்டும் தெளிவுபடுத்துகின்றான் இந்த ஜமாஅத் ஒரு புதிய மார்க்கத்தை தன்னுள் கொண்டுவரவில்லை, மாறாக இதன் பெயர் அதாவது ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் திருக்குரானில் மார்க்கம் என்பதற்க்கு என்ன பெயர் விளக்கப்ட்டுள்ளதோ அல்லது அறிவிக்கபட்டுள்ளதோ அந்த பெயரின் மறுவடிவமாகும், இந்த மறுவடிவத்தை மீண்டும் இந்த காலத்தின் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட எளியவனான என் மூலமாக இறைவழிகாட்டலின் கீழ் அருளியுள்ளான், மேலும் ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்ற இந்த பெயரை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவனின் இந்த காலத்தின் கலீபத்துல்லாஹ் ஆன இந்த எளியவனுக்கு அவனே வழங்கியுள்ளான், அந்த ஏக இறைவனே இதன் பெயரை வைத்து அவனுடைய அடியானையும் அவனே தேர்வு செய்வதை விட சிறந்த அருள் வேறு என்ன இருக்கமுடியும், மேலும் அவன் இந்த அருளுக்குரிய முதலீடை அந்த தூய தீனே இஸ்லாத்தை மீட்டெடுக்கும் நோக்கத்தில் செய்துள்ளான், இப்பொது எத்தனையோ முஸ்லீம் அமைப்புகள் இஸ்லாத்தில் மாறுபட்ட காணோட்டத்தினாலோ அல்லது அவர்களின் சில நம்பிக்கைகளின் அடிப்படையில் அவர்களின் அமைப்புகளுக்கு பல்வேறு வேறுபட்ட பெயர்களை தாங்களாகவே வைத்துக்கொள்கின்றனர், ஆனால் நம்மிடையே அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் சுபஹானஹுதாலாவின் வெளிப்பாடுகளும் அவனால் நியமிக்கப்பட்ட அவனது கலீபாவும் மேலும் அவனால் பெயரிடப்பட்ட அமைப்பும் இருக்கும்போது இவ்வகை அமைப்புகளின் தேவை என்ன இருக்கிறது என்பதை சிந்தித்து பாருங்கள், மேலும் அல்லாஹ் அவனது இறைவஹீயியை அனுப்புவதன் மூலமே அவனால் உருவாக்கப்பட்ட ஜமாத்தை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றான், எனது அருமையானவர்களே இந்த தொடர் மூலம் என்னுடைய செய்தியை உங்களுக்கு தெளிவாக விளக்கிவிட்டேன் என்று நினைக்கின்றேன்.

நான் அல்லாஹ்விடம் துஆ செய்கின்றேன், அவன் முஸ்லிம்களுக்கு உண்மையையும் அவர்கள் அந்த மேலாக நோக்கத்தை ஒளிரூட்டும் தெளிவான கருத்துக்களின் வழியாக பெற செய்வானாக, இதன் மூலமாக அல்லாஹ் நம்மிடம் என்ன நாடுகிறான் என்பதை நமக்கு புரியசெய்வானாக ,மேலும் நாம் எல்லாவிதமான ஷைத்தானின் ஈர்ப்பில்லிருந்து முற்றிலும் விலகி அவனிடம் முழுமையாக அர்ப்பணிக்க செய்வானாக, இதன்முலமாக அவனை அறிந்து அவனுடைய இருப்பின் ஆனந்தத்தை அடைவோமாக, இன்னும் அவனால் தேர்தெடுக்கப்பட்ட இறை அடியார்களின் பொதுவான பணியான மனித இனத்தையும் ஆன்மிகத்தையும் பாதுகாப்பானாக இன்ஷாஅல்லாஹ் ஆமீன்

எனவே சகோதரர்களே ஒரு இறை தூதர் வருகையின் நோக்கம் "**ஐனுல் யகீன்**" ஆகும் இறுதியாக மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுடன் முடித்து கொள்கின்றேன் நிறைவு செய்கின்றோம்.

## முழுமையான இறைஞானம் பெறும் வழி

**அன்புமிக்க நண்பர்களே! இறைவனுடைய நோக்கங்களுக்கு எதிராக எவனாலும் போரிட முடியாது. இறைவனின் தூய தூதர்களுக்கு இறைவன் புறமிருந்து கிட்டும் இல்ஹாம் (இறையறிவிப்பு)தான் முழுமையான இறைஞானத்திற்கான வழியாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த அருட்கடலான இறைவன் தனது இல்ஹாம் எனும் அருளை அடைத்து வைத்து உலகத்தை ஒருபோதும் அழிவிற்குள்ளாக்க நாடவில்லை. மாறாக தனது இல்ஹாம் என்னும் இறையறிவிப்பின் வாசல்களை என்றென்றும் திறந்தே வைத்திருக்கின்றான். ஆனால் அவற்றை அவற்றிற்குரிய சரியான வழியின் மூலமே தேடவேண்டும். அப்போதுதான் அவற்றை எளிதில் பெறமுடியும். அந்த ஜீவநீர் வானத்திலிருந்து இறங்கி அதற்கேற்ற இடத்தில் தேக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜீவநீரை அருந்துவதற்கு, நீங்கள் எப்படியாவது அந்நீரூற்றை அனுகி அதில் உங்கள் உதடுகளைப் பதித்து அந்த ஜீவநீரை மனநிறைவோடு பருகுங்கள்.**

( இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்)

**இன்ஷாஅல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ் சுபஹானஹுதாலா அருள்புரிவனாக ஆமீன்**



# Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu


**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**03.05.2020**

**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**





**மதிப்புக்குரிய சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு எங்கள் பதில்**




**நான்காவது கேள்வி:-**

ஃபிர்அவ்ன், காரூன், அபு ஜஹ்ல், அபு லஹப்,லேக்ராம், அப்துல்லாஹ் ஆத்தம் போன்ற எதிரி ?? யாரும் இல்லையா? கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்**

**பதில்:**

இந்த கேள்விக்கு பதில் அளிக்கும் முன் இன்ஷாஅல்லாஹ் நபிமார்களின் உண்மையான வாதத்தை திருக்குரானில் அடிப்படையில் பார்க்கலாம்.

வானவர்களை நாம் உண்மையுடனே இறக்குகின்றோம் (என்பது அவர்களுக்குத் தெரியாதா?) மேலும் அந்த நேரத்தில் (நிராகரிப்பவர்களாகிய) அவர்களுக்கு காலக்கெடு அளிக்கப்படுவதில்லை. ( திருக்குர்ஆன் 15: 9 )

இதில் நாம் மேலும் கவனிக்க வேண்டியது என்னவென்றால் வஹீயின் தரம் அதனை பெறக்கூடியவரின் ஆன்மீக நிலையை பொறுத்து உள்ளது, இது எவ்வாறு என்றால் நபிமார்களுக்கு இறங்கும் வஹீயின் தரமும் சாதாரண மனிதருக்கு இறங்கும் வஹீயின் தரத்திற்கும் மிக பெரிய வித்தியாசம் உள்ளது. இன்னும் கூற போனால் இறைவனின் வார்த்தையின் தரம் ஒரு நபிக்கும் நபிக்கும் இடையே வேறுபடுகிறது, மேலும் வஹீயின் தரம் அந்த நபியின் ஆன்மீக நிலை அவரின் திறனுக்கு ஏற்ப மாறுபடுகின்றது !!!!

இதனால் தான் திருகுரானின் வார்த்தைகள் மாபெரும் நபியான நபிமார்களில் சிறந்த நபியான ஹஸ்ரத் முஹம்மது (ஸல் ) அவர்கள் மீது இறங்கி உள்ளது (தப்பிஸிர் திருகுரான் 15:9, Five -volume commentary -page no:1572)

இன்னும் ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் ஒருபோதும் காத்தமுன் நபிய்யீன் ஹசரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) மற்றும் காத்தமுள் குலபா ஹசரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் உயர்வான நிலை என்று (நஊதுபில்லாஹ்) வாதம் செய்யவில்லை.

இது சம்பந்தமாக **ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீ:பத்துல்லாஹ் முனீர் அஹமத் (அலை)** கூறும்போது இந்த இடத்தில் நான் உங்களிடம் தெளிவு படுத்துகின்றேன் நான் அந்த புனித நபி எம்பெருமான் (ஸல்) அவர்களை போன்ற பரிபூரண முழுமைபெற்றவன் என்று ஒருபோதும் நான் கூறவில்லை, ஆனாலும் அந்த ஏக இறைவன் என்னை **ஒரு சிறிய முஹம்மத்தாக முயற்சி செய்யும் பொருட்டு என்னை தேர்வுசெய்துள்ளான்** மேலும் அன்னாரின் அடிசுவற்றை பின்பற்றுவதன் மூலம் **அன்னாரின் உம்மத்தில் நபியாக ஒரு சீர்திருத்தவாதியாக** தகுதியை பெற்று இஸ்லாம் மற்றும் முழுமனித சமுதாயத்தையும் சீர்த்திருத்த நான் வந்துள்ளேன். நிச்சயமாகவும் உங்களிடம் மீண்டும் மீண்டும் கூறிக்கொள்கின்றேன் நான் எனது எஜமானார் தூய நபி பெருமானார் (ஸல்) அவர்களின் கணுக்காலில் உயரத்தின் நிலையை கூட நான் ஒருபோதும் எட்டவில்லை,மேலும் அல்லாஹ் என்னை ஆதாம் என்றும் தாவூது என்றும் அழைத்துள்ளான் என்பதன் அர்த்தம் நான் என் எஜமானர் பெருமானார் (ஸல்) அவர்களை விட உயர்ந்தவன் அல்லது சிறந்தவன் என்றில்லை, மேலும் நான் ஒரு புதிய மார்க்கத்தை கொண்டுவந்துள்ளேன் என்பதும் இல்லை, மாறாக இதன் அர்த்தம் அல்லாஹ் என்னை இன் நபிமார்களின் குணஇயல்புடன் அனுப்பியுள்ளான், என்பதும் ஏனைய நபிமார்களின் சிறப்புகளையும் என் மூலமாக பிரதிபலிக்கின்றான் என்பதாகும்.அவை நூறு சதவீதம் இல்லாவிட்டாலும் அவன் என் தோலின் மீது வைத்துள்ள வேலையை நான் சிறப்புடன் செய்வதற்க்காகவே அவன் இவ்வாறு செய்கின்றான்.

மாறாக அன்னாரோ அவர்களின் நிழலாக உள்ளார்கள். எனவே நபியின் ஆன்மீக நிலையை பொறுத்தே அவர்களின் வஹீயின் தரம் மற்றும் அவர்களின் எதிரிகளின் நிலையும் உள்ளது. இதற்கு நம்முன் சிறந்த எடுத்துக்காட்டாக பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தின் எதிரிகளுக்கும் ஹசரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தின் எதிரிகளுக்கும் மிகப்பெரிய வேற்றுமை உள்ளது என்பதை அறியலாம்.

மேலும் ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் வாதம் செய்யும் ஒருவரின் உண்மைத்தன்மையை அறிய நமக்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள்.

**ஒன்று**. அறிவைப்பயன்படுத்துவது, அதாவது ஒரு இறைத்தூதர் வருகிறா ரென்றால், அந்தக்காலம் அப்படிப் பட்ட ஒருவர் வரவேண்டிய தேவையு டையதாய் இருக்கின்றதா? இல்லையா என்பதைத் தீர்மானிப்பது. இதன்படி

தற்கால மக்களின் நிலை ஒரு சீர்திருத்தவாதியின் தோற்றத்தை வேண்டிக்கொண்டிருப்பதா என்பது பற்றி சிந்தனை செய்வதாகும்.

**இரண்டு** சென்ற கால இறைத்தூதர்களின் முன்னறிவிப்புக்கள் சென்ற கால இறைத்தூதர்களில் எவராவது, பின் வர இருப்பவர் குறித்து அதாவது இக்காலத்தில் ஒருவர் தோன்றப்போவது பற்றி முன்னறிவிப்புச் செய்துள்ளனரா இல்லையா என்று பார்க்க வேண்டும்.

**மூன்றாவது**, வானத்தின் அடையாளங்கள். (Urdu- Roohani Khazain, Volume 20, Page 241)

இம்மூன்று அடையாளங்களும், இறைவனால் அனுப்பப்பட்டவரைப் பிரித்தறிவதற்கு தொன்றுதொட்டே நிர்ணயிக்கப் பட்டவையாகும். அன்பர்களே! இறைவன் உங்கள் மீது கருணை கூர்ந்து என்னை மெய்ப்படுத்த மேற்கண்ட மூன்று அடையாளங்களையும் ஒன்று சேர்த்துள்ளான். விரும்பினால் நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். என்று அன்னார் மிக தெளிவாக வழிகாட்டி உள்ளார்கள்

முதலாவது கேள்வியின் படி ஒரு சீர்த்திருத்தவாதியின் தோன்றும் காலம் என்பதை அண்ணல் நபி (ஸல்) அவர்களும் மஸீஹ் (அலை) அவர்களும் ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்களும் ஒவ்வொரு நூற்றாண்டை குறிப்பிடுகின்றார்கள், மேலும் மிக தெளிவாக ஒவ்வொரு நூற்றாண்டு முடியும் போதும் மனிதனின் ஆன்மீக நிலைபற்றி தெளிவாக விளக்கியுள்ளார்கள்

ஹஸ்ரத் மஸீஹ் மௌவூது (அலை ) போதிக்கின்றார்கள் :-

ஒவ்வொரு ***நூற்றாண்டும்*** கடக்கும் போது மக்களிடையே ஆன்மீக சோம்பறித்தனம் , அறியாமை, தீனை அவமதிப்பது போன்ற எல்லா விதமான ஒழுக்க பலஹீனங்கள் மற்றும் நீதியில் நடைமுறை தவறுகள் போன்றவை ஏற்படுகின்றன, இந்த அறியாமையான பருவம் *இலையுதிர்காலத்தை* போன்றது ஆனால் இதன் பிறகு ஒரு காலம் ஆரம்பமாகின்றது அதுவே *வசந்த காலமாகும்* இந்த பருவதைத்தான் நமது அருமை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ***நூற்றாண்டின்*** தலைமையிலும் ஒரு முஜத்தித் தோன்றி* ஈமானுக்கு புத்துணர்வு வழங்குவதாக கூறிகின்றார்கள் (Urdu- Malfoozat, Volume 5, Page 118)

மாநபி (ஸல்)விவரித்தது போல ஒவ்வொரு **நூற்றாண்டும்** மார்க்கத்தின் நம்பிக்கை பாதிக்கப்படும்போது அதை புதுப்பிப்பதற்க்காக அல்லாஹ் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவான் . சீர்திருத்தவாதிகளை அனுப்பும் இந்த நடைமுறை மற்றும் அவனது இந்த வாக்குறுதியை Surah Al-Hijr verse 10 (திருகுர்ஆன் 15:10) ல் கூறியுள்ளான்(Malfoozat – Volume 2, (New Edition), Page 355-356)

மேலும் இந்த ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்களின் தப்பிஸிர்ரை அறிந்து கொண்டாள் இவ்வாறு தோன்றும் சீர்திருத்தவாதிகள் யார்? அவர்களின் வருகையின் நோக்கம் மேலும் அவர்களின் வருகையின் தொடர் இந்த இறுதி இறைவேதம் இந்த உலகத்தில் உள்ளளவில் வந்துகொண்டே இருப்பார்கள் என்பதை அறியலாம்.

**இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனை பாதுகாப்போம்.**

என்று உறுதியளித்தது போல் அதன் எழுத்துக்களை மட்டுமல்லாமல் அதன் உண்மை கருத்தையும் (ரூஹையும்) பாதுகாக்கின்றான். மேலும், இந்தப்பணியை ஒவ்வொரு நேரத்திலும் முஸ்லிம்களில் இருந்து இறைவனால் எழுப்பப்படும் மார்க்க சீர்திருத்தவாதிகள் மூலம் செய்கின்றான். இந்த மார்க்க சீர்திருத் தவாதிகளை இஸ்லாமிய சொல்வழக்கில் “**முஜத்திதுகள்**” என்று அழைக்கப் படுகின்றார்கள். இவ்வாறு இறைபுரத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் இறைவனிடமிருந்து **வஹீயை** பெற்று திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கு உண்மையான மற்றும் விரிவான விளக்கத்தை வழங்குகின்றனர். இவ்வாறு தோன்றும் முஜத்தித்மார்கள் மற்ற மார்க்கத்திலும் அந்த மார்க்கத்தின் வேதம் அதை பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டும் வரை வந்து கொண்டிரு ந்தார்கள்.ஆனால் எப்போது இஸ்லாம் தோன்றிவிட்டதோ அதற்கு பிறகு மற்ற அனைத்து மார்க்கங்களும் மற்றும் வேதங்களும் முடிவுக்கு வந்து விட்டன. ஏனென்றால் அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்க்காக அருளப்பட்டிருந்தது. எனவே இங்கே முஜத்தித்மார்கள் தோன்றுவது முடிவுக்கு வந்துவிட்டது. மேலும் திருக்குர்ஆன் ஒன்றே இப்போது உலகப்பொதுமறையாக ஓர் வாழும் வேதமாக உள்ளது. எனவே இறைவனிட த்திலிருந்து தோன்றும் இத்தகைய மார்க்க சீர்திருத்தவாதிகள் ஆகிய முஜத்தித்மார்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் மட்டும் தோன்றிக்கொண்டே யிருக்கின்றார்கள். தப்ஸீரில் பக்கம் 1263-1264(ஆதாரம் english w/5 vol. Commentary alislam.org)

இவ்வாறே நாம் வாழும் காலத்தில் இறைவனால் 15 வது நூற்றாண்டில் முஜத்தித்தாக எழுப்பட்டவரே **ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)** அவர்கள்,அன்னார் இந்த நூற்றாண்டின் இறைவஹீயின் மூலம் திருகுர்ஆன் விளக்கவுரையை அல்-அஸீம் தஃப்ஸீரூல் குர்ஆன் என்ற பெயரில் 23 பாகங்களாக எழுதியுள்ளார்கள்.அல்ஹம்துல்லாஹ் ,

இறங்கிய இறைவஹீ(10.09.2010)

**Bismillah hir rahman nir raheem**

**Ya Khalifathullah! Qul: "*Annal Mujaddido*" (*O Khalifathullah! Tell them: 'I am the Mujaddid'*)**

**கலீபத்துல்லாஹ்வே! அவர்களுக்கு கூறுவீராக! "நான்** தான் **முஜத்தித்** என்று"

அன்னாரின் முஜத்தித் வாதத்தை பற்றி மேலும் அறிய காண்க

https://sahih-al-islam.blogspot.com/2015/01/a-mujaddid-after-promised-massih.html,

https://sahih-al-islam.blogspot.com/2011/06/divine-manifestation-in-mauritius.html,

https://sahih-al-islam.blogspot.com/2018/05/the-khalifa-of-islam-title-and-tasks.html

மேலும் முன்னறிவிப்பின் அடிப்படையில் அவர்களால் வழிநடத்த பட்ட உண்மை இஸ்லாம் இன்று நூற்றாண்டின் முஜத்தித்மார்களின், கிலாபாத்த்தே முஹம்மதிய்யாவின் கலீபாத்துல்லாஹ் வருகையின் மற்றும் மஸீஹ் மார்களின் வருகையின் கதவை அடைத்துக்கொண்டு இந்த நபிமார்கள் அல்லாத கலீபாமார்கள் அதாவது கலீஃபதுல் ரசூல்கள் வருகை தொடரும் என்ற நம்பிக்கைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மஸீஹ் (அலை) கூறிய உயிருள்ள இறைஇருப்பின் ஆணி வேரான வஹீ அவர்களுக்கு வரவில்லை என்பதால் சில சாக்குபோக்குகளை கூறி இன்னும் கூறுவதென்றால் வஹீ வருகின்றது ஆனால் சொல்லமாட்டோம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். இந்த காலத்தை தான் ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்

ஒவ்வொரு புதிய நூற்றாண்டிலும், ஒரு புதிய உலகம் ஆரம்பமாவதை போன்றதாகும். ஆகவே, உண்மையான இறைவனாக இருக்கின்ற இஸ்லாத்தின் இறைவன், ஒவ்வொரு நூற்றாண்டின் திருப்பத்திலும் குறிப்பாக இந்த நூற்றாண்டின் தலைமையில் ஒவ்வொரு புதிய உலகிற்காகவும் புதிய

அடையாளங்களை வெளிப்படுத்துகீன்றான்., அதிலும் குறிப்பாக நம்பிக்கை(ஈமான்) மற்றும் நேர்மை ஆகியவற்றிலிருந்து விலகி, பல இருள்களைக் கொண்டிருக்கின்ற அத்தகைய நூற்றாண்டின் தலைமையில் ஆரம்பத்தில், நபியின் பிம்பமாக எழுப்புகின்றான் (உருது- ரூஹானி கசேன், தொகுதி 5, பக்கம் 246-247)

மிக துல்லியமாக இந்த நூற்றாண்டில் அல்லாஹ் தனது சீர்த்திருத்த வாதியை தனது கலீபத்துல்லாஹ்வை எழுப்பியுள்ளான் மேலும் திருமறையில் அவன் கூறியதுபோல் அவனது கலீபாவை ஆவேனே எழுப்புகிறான்

**"இன்னி ஜாய்லுன் பில் அர்ஜி கலீபா " ("நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை(கலீபாவை ) அமைக்கப் போகிறேன்)" (அல்குர்ஆன் : 2:31))**

கடந்த திங்கள் கிழமையில் இறங்கிய இறைவஹீயில் கூட அல்லாஹ் அன்னாரை **ஆதம்** என்று அழைத்துள்ளான்

**திங்கட்கிழமை 27 ஏப்ரல் 2020 அன்று 1: 45 மணிக்கு லுஹர் தொழுகைக்குப் பிறகு (3 வது நோன்பில்)**

**Bismillah hir rahman nir raheem**

**"ஆதம் தன்னுடைய காலத்தில் கலீஃபத்துல்லாவாக இருந்தது போன்றே நீரும் இக்காலத்தின் கலீஃபத்துல்லாவாக உள்ளீர்கள். நான் உமக்கு அருள்புரிவோம், உம்மை பாதுகாப்போம், உமக்கு வெற்றியை வழங்கு வோம் . இன்று ஒரு அருளுக்குரிய நாளாகும். மேலும், மக்கள் உங்களுடைய குறைகளை மட்டுமே உங்களிடம் காண்கிறார்கள். ஆனால், நான், நீங்கள் என் மீது கொண்டுள்ள அன்பை மட்டுமே உங்களிடம் காண்கின்றேன். மேலும், நான் உங்களுடைய குறைகளை சிறிதுசிறிதாக நற்குணங்களாக மாற்றிவிடுவோம். நீங்கள் இப்பூமியின் அரசராக ஆகிவிட்டீர்கள். நான் என்னுடைய அரியணையின் ஆட்சியையும் உங்களுக்குக் கற்பிப்பேன்".**

எனவே மிக தெளிவாக ஒருவர் வரும் காலகட்டம் என்பதை அறியலாம், மேலும் இரண்டாவது முன் சென்ற தூதர்களின் தீர்க்கதரிசனம் ஹசரத் மிர்சா குலாம்

அஹமத் (அலை) அவர்களுக்கும் இந்த தீர்க்கதரிசனத்திற்கு நூற்றாண்டில் தோன்றும் முஜத்தித் பற்றியும் குறிப்பிடுகின்றார்கள் மேலும் ஹசரத் முனீர் அஹ்மத் ஆசிம் (அலை) அவர்களின் வருகையை பற்றி மேலும் முன்னறிவிப்புகள் இந்த காலத்தை மேலும் உறுதி படுத்துகின்றது

அன்னார் தனது வருகையை பற்றி கூறும்போது

**…ஹிஜ்ரி 1400 லிருந்து 20 அல்லது 30 வருடங்களை கூட்டிக்கொள்ளுங்கள் அப்போது உங்களிடையே மஹதி தோற்றுவார்….**(ஆதாரம்: Qalda bin Zayd bin Baraka, Qalda bin Zayd bin Baraka, Asma Masalik Li Ayyam Al-Mahdi: Malik Li Kul Al-Dunya Bi Amr Allah El-Malik, p.216))

மேலும் இந்த ஹதீதின் அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரலி)ஆவார்கள் மேலும் இந்த நபிமொழி பற்றி கலீஃபத்துல்லாஹ் (அலை) அவர்கள் கூறும்போது:-- நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு எனது வருகையை உறுதி செய்கின்றது என்று வாதம் செய்து உள்ளார்கள். (https://sahih-al-islam.blogspot.com/2011/06/divine-manifestation-in-mauritius.html)

இந்த நூற்றாண்டில் தனது உண்மைத்தன்மைகாகா வெளிப்பட்ட வானத்தின் அடையாளங்களை பற்றி ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் தன்னுடைய வருகைக்கான இறைவனின் மாபெரும் அத்தாட்சிகளில் ஒன்றாக தொடச்சியாக தோன்றும் இரத்த சந்திரன் மற்றும் சூப்பர் மூன் பற்றி அன்னார், ஒவ்வொரு நூற்றாண்டில் மட்டுமே தோன்ற கூடிய இந்த அறிய நிகழ்வு இந்த நூற்றாண்டில் இமாம் ஆக தோன்றியுள்ள தனது வருகைக்கான இறைஅடையாளமாகும் என்று கூறியுள்ளார்கள்.இந்த அத்தாட்சிகளை பற்றி அன்னார் கூறும்போது:

**ஆகவே, பார்வையும் மழுங்கி;சந்திரனின் ஒளியும் மங்கி;சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்பட்டுவிடும்போது.{ திருகுரான் 75:7-10}**

**வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்.கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வரும் முன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (பைபிள்பழைய ஏற்பாடு JOEL 2:30-31)**

**கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வரும் முன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (பைபிள் புதிய ஏற்பாடு ACTS 2:20)**

திருக்குர்ஆன்,பைபிள் மற்றும் மற்ற இறைவேதங் களும் இந்த நிகழ்வுகள் பூமியில் இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட தூதர் உங்களிடையே உள்ளார் என்பதை முன்னறி விக்கின்றது. நான் எனது நாட்டின் **இந்துக்கள் மற்றும் தமிழர்களிடம்** எனது வருகையை பற்றி உரையாற்றும் போது,மேலும் முக்கியமாக அவர்களின் முக்கிய பண்டிகையான தீபாவளியின் போதும் இந்த நிகழ்வுகள் தோன்றியது, இன்னும் சில நிகழ்வுகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மட்டுமே நிகழக்கூடியவை. மேலும் 01.09.2016 அன்று மிக நீண்ட சூரிய கிரகணம் ஏற்பட்டது. மேலும் இதற்கு பிறகு இந்த நிகழ்வு 2200 ஆண்டிற்கு பிறகே நிகழும். இந்த நிகழ்வுகள் 2014 -2015 ல் சரியாக யூதர்களின் புனித நாட்களில் தோன்றியுள்ளது

(https://sahih-al-islam.blogspot.com/2014/04/total-eclipses-during-ramadan-great-sign.html, https://sahih-al-islam.blogspot.com/2018/02/on-super-blue-blood-moon-2018.html

**இப்போது இந்த தருணத்தில் கூட சென்ற ஆண்டு கரோனா வைரஸ் பற்றி அன்னாருக்கு வெளிப்பட்ட வஹீயில் ஒன்று உங்கள் பார்வைக்கு, இந்த வஹி அன்னாருக்கு 20.07.2019 அன்று அரபி மற்றும் கிரியோல் மொழியில் இறங்கியது**

**Bismillah hir rahman nir raheem**

**After Tahajjud prayers Saturday 20 July 2019 17 Dhul-Qaddah 1440 AH**

**Fatawakkal ‘alallaah. Innaka ‘alal-Haqqil mubeen. Innaka laa tusmi-‘ul-mawtaa wa laa tusmi-us-summaddu-‘aaa-‘a izaa wallaw mudbireen. Wa maaa anta bihaadil-‘umyi an-zalaalatihim. ‘In tusmi-u ‘illaa may-yu’-minu bi-Aayaatinaa fahum Muslimuun. Wa izaa waqa-‘al-Qawlu ‘alayhim ‘akhrajnaa lahum Daaabbatam-minal-‘arzi tu-kallimuhum ‘annannaasa kaanuu bi-‘Aayaatinaa laa yuuqinuun.**

தஹஜ்ஜுத் தொழுகைக்கு பிறகு அரபி மற்றும் கிரியோல் மொழியிலும் இறங்கிய வெளிப்பாடு

பொருள்:- நீங்கள் அல்லாஹுவிடத்தில் நம்பிக்கை வையுங்கள் நீங்கள் உண்மையாகவே உண்மையின் மீது இருகிண்றீர்கள் உங்களால் இறந்தவர்களை செவியேற்க செய்ய முடியாது மேலும் முதுகு பின்னால் திரும்பிய அத்தகைய செவிடர்களை உம்மால் கேட்கும்படி செய்யவியலாது, இன்னும் குருடர்களை உம்மால் அவர்களின் தவறுகளில் இருந்து நேர்வழி செலுத்த முடியாது ஆனால் எவர்கள் உம்முடைய அடையாளங்கள் மீது நம்பிக்கை கொள்கிறார்களோ மேலும் உம்முடன் தங்களை முஸ்லிம்களாக அர்ப்பணித்து இருக்கின்றார்களோ அவர்களையே உம்மால் சீர்திருத்த முடியும் மேலும் அவர்களின் (நிராகரிப்பாளர்கள்) மீது அவர்களின் வாக்கு நெருங்கும் போது **பூமியில் இருந்து ஒரு பிராணியை நாம் வெளிப்படுத்துவோம்** மக்கள் நம் அடையாளங்களில் நம்பிக்கை கொள்ளாததே அதற்குக் காரணம். **ஆதாரம் காண்க** :- http://jamaat-ul-sahih-al-islam.com/jusai2019/rev_hmaa_20jul19.pdf

இந்த நூற்றாண்டின் மாபெரும் எச்சரிக்கை செய்யும் வஹீ இதன் உண்மைத்தன்மையை நாம் வாழும் இந்த காலத்தில் ஒவ்வொரு மனிதனும் அவன் அரசனானாலும் சரி பிச்சைக்காரனானாலும் சரி உணர முடிகின்றது .இந்த பூமி இதுவரை கண்டிராத மாபெரும் இறை அடையாளத்தை பார்த்த பிறகும் நம்மிடையே இறைவனின் இந்த நூற்றாண்டின் தூது செய்தி மீது நம்பிக்கை கொள்ளாமல் இருப்பது நிச்சயம் ஆச்சரியத்திற்குரியது.

எனவே ஒரு வாதம் செய்பவர்றின் உண்மைத்தன்மையை அறிய தெளிவான வழிகாட்டல் இருக்க வாதம் செய்பவரின் வாதத்தை குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு புனிதர்களின் வாதத்துடன் ஒப்பிடுவது எவ்வாறு சிறந்த தேர்வாக இருக்கும். இருப்பினும் ஒரு நபி தோன்றும்போது நிச்சயம் அவர் தோன்றும் சமுதாயத்தில் எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இது பற்றி ஹஜ்ரத் மூனீர் (அலை( அவர்கள் குறிப்பிடும் போது: ஒவ்வொரு முறை அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரை இவ்வுலகிற்கு அனுப்பும்போதும், ஃபிர் அவ்ன், அபு ஜஹ்ல், நம்ருத், யூதா போன்ற அத்தகைய (தீய) மக்களின் எழுச்சியும் உருவாகி விடுகின்றது.ஆகவே இந்த சகாப்தத்திலும் இவ்வாறான நிறங்களை. கொண்டுள்ள தவரிழைப்பவர்களும் பிறந்து உள்ளனர்.அவர்களிடம் காணப் படுகின்றன கர்வம், ஆணவம்,தீய திட்டங்களை செயல் படுத்துவது, மக்களை அடிமைகள் போன்று நடத்துவது,தான் தோன்றி தனம், ஆணவோ பேச்சு, பொது மக்கள் நிதி யிள் மோசடி,( சொந்த

விஷயங்களுக்கு உபயோகித்தல்),புறம் பேசுதல்,நபி (ஸல்) அவர்களின் மிம்பரில்(ஜும்மா மேடையை) பொய் பேசுதல்,இவற்றின் அடிப்படையில் அவர்கள் மொரிசியஸ் **முன்னால் அமீர் ஆமீன் ஜவாகிர் அவரது முல்லாக்கள் நவீன காலத்தின்** ஃபிர் அவ்ன் என்று பல முறை அறிவித்து உள்ளார்கள் மேலும் அவரின் தூது செய்தியை சமுதாய புறக்கணிப்பு மூலம் கையாளும் நிசமே ஜமாஅத் பற்றியும் குறிப்பிடுகின்றார்கள்.

மேலும் அன்னாரின் இந்த நூற்றாண்டின் வாத எதிரிகளான **அப்துல் கப்பார் ஜம்பா மற்றும்** நாசீர்அஹ்மத் சுல்தானின் குறிப்பாக நாசீர் அஹ்மத் சுல்தான் போன்றவர்களை அன்னார் முபாஹிலா மூலம் என்றோ அழித்து விட்டார்.

ஆதாரம் காண்க

https://sahih-al-islam.blogspot.com/2011/06/response-to-dr-rashid-jahangiri.html#more

https: https://sahih-al-islam.blogspot.com/2019/08/eid-ul-adha-sermon-2019.html

https://sahih-al-islam.blogspot.com/2019/07/dawat-i-allah-calling-people-to-god-i.html

https://sahih-al-islam.blogspot.com/2019/05/prophecies-tests-of-faith.html

https://sahih-al-islam.blogspot.com/2019/02/fourth-caliph-and-divine-signs.html

https://sahih-al-islam.blogspot.com/2017/10/divinely-revealed-prayers-ii.html

https://sahih-al-islam.blogspot.com/2016/03/disasters-and-renewal-of-faith.html

https://sahih-al-islam.blogspot.com/2016/01/15-years-of-divine-manifestation.html

//sahih-al-islam.blogspot.com/2011/04/corruption-in-ahmadiyya-jamaat-i.html

https://sahih-al-islam.blogspot.com/2014/05/truth-about-whispering-campaign.html

https://sahih-al-islam.blogspot.com/2014/03/janbah-sahib-allah-does-not-like.html

https://sahih-al-islam.blogspot.com/2011/06/friday-10-and-new-massih.html

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




# வெளியீட்டு

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**04.05.2020**


**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**


**மதிப்புக்குரிய சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு எங்கள் பதில்**




## ஐந்தாவது கேள்வி:-

மிஸ்டர் முனீர் அவர்களுக்கு எந்த மொழியில் வஹீ வருகின்றது கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்.**

**பதில்:**

வஹி மூலம் அல்லது திரைக்குப் பின்னாலிருந்து அல்லது தன் கட்டளையினால் தான் விரும்புவதை எடுத்துரைப்பதற்கு (வானவர்களுள்) **ஒரு தூதரைத் தான் அனுப்புவதன் மூலமேயன்றி, அல்லாஹ் எந்த மனிதருடனும் பேசுவதில்லை.** நிச்சயமாக அவன் உயர்ந்தவனும், நுட்பமான ஞானமுள்ளவனுமாவான்.இவ்வாறே நாம் எமது கட்டளை யின் மூலம் உமக்கு மகத்தான வஹியை இறக்கினோம். வேதம் என்றால் என்ன வென்பதையும், நம்பிக்கை என்றால் என்னவென்பதையும் நீர் அறியாமலிருந்தீர். ஆனால் நாம் அதனை (அந்த இறையறிவிப்பை) ஒளியாக ஆக்கியுள்ளோம். அதன் மூலம் எம் அடியார்களுள் நாம் விரும்புபவருக்கு நேர்வழி காட்டுகிறோம். நிச்சயமாக நீர் (மக்களை) நேரான வழியின்பால் கொண்டு வருகின்றீர்.( திருக்குர்ஆன் 42: 52-53 )

**இந்த வசனம் அல்லாஹ் தனது தூதரின் வஹியின் மூலம் தன்னை வெளிப்படு த்துகிறான், மேலும் நபிமார்களுக்கு இறக்கும் வஹீக்கும் சாதாரண மனிதனுக்கு இறங்கும் வஹீ மற்றும் கனவிற்கு என்ன வித்தியாசம் உள்ளது ஏனென்றால் கனவு மற்றும் ஒரு சில வஹீ இன்னும் <u>சிலரோ எங்களது துஆக்கள் கபூல் ஆகின்றது என்பதால் நபியின் தேவை என்ன என்ற கேள்வியை எழுப்புகின்றனர்</u>**.

காத்தமுள் குலபா ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் சிறந்த முறையில் விளக்கி உள்ளார்கள் இந்த வழிகாட்டல் இந்த நூற்றாண்டில் ஒரு தேவையான ஒன்றாக உள்ளது.

மற்ற மக்களை விட வலிமார்கள், (இறைநேசர்கள்) நபிமார்கள் (இறை தூதர்கள்) ஆகியோரின் இறையறிவிப்புகளுக்கும், ஆன்மீகக் காட்சிகளுக்கும் என்ன சிறப்புத் தன்மை இருக்கிறது என்ற சந்தேகங்களிலும், ஐயப்பாடுகளிலும் மூழ்கியி ருக்கின்ற மக்களின் சந்தேகங்களையும் நீக்க விரும்புகிறேன். ஏனெனில் நபிமார்கள், வலிமார்களுக்கு மறைவான செய்திகள் கிடைக்கின்றன என்றால், மற்றவர்களுக்கும் தான் சில நேரங்களில் கிடைக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், சில தீய நடத்தையுடையவர்களுக்கும், மிக மோசமான நடத்தையுடையவர் களுக்கும் உண்மையான கனவுகள் வருகின்றன. இன்னும் கூறப்போனால், சில

கீழ்த்தரமானவர்களும், தீயோர்களும் தமது சில கனவுகளைக் கூறுகின்றனர். கடைசியில் அவை நிறைவேறுகின்றன. எனவே, தம்மை நபி (இறை தூதர்) என்றோ , அல்லது சில குறிப்பிட்ட தரத்தை கொண்ட நபர் என்றோ கருதுகின்ற இத்தகைய வர்களுடன், தீய நடத்தைகளிலும், புகழ் பெற்று விளங்குகின்ற துர் நடத்தையுடைய மக்களும் அடங்குவர் என்றால், இறை தூதர்களுக்கும், இறை நேசர்களுக்கும் என்ன சிறப்பு எஞ்சியிருக்கிறது? என சிலர் கேட்கின்றனர்.அதற்கு விடையாக நான் கூறுவது என்னவென்றால், உண்மையில் இந்தக் கேள்வி, எந்த அளவுக்கு தன் உண்மை நிலைமையைக் கொண்டிருக்கிறதோ அவை அனைத்தும் உண்மையானதும், சரியானதும் ஆகும். **மேலும் ஜிப்ராயீலிய ஒளியின் 46-ஆவது பகுதி முழு உலகிலும்** பரவி இருக்கிறது. சொல்லப்போனால், வேசிகளின் குழுவைச் சேர்ந்த மிகவும் துர் நடத்தையுடைய- தன் இளமையை முழுவதும் தீய நடத்தையிலேயே கழித்த ஒரு பெண், சில நேரத்தில் உண்மையான கனவைப் பார்த்து விடுகிறாள் என்பது அனுபவத்தில் அறிந்த உண்மை என்பது வரை நான் ஏற்றுக் கொள்கிறேன். இத்தகைய பெண் இரவில் குடித்து விட்டு அந்நிய ஆணுடன் படுக்கையில் கிடக்கும் போது கூட ஏதாவதொரு கனவைப் பார்க்கிறாள். அது உண்மையாகி நிறைவேறியும் விடுகின்றது என்பது இன்னும் ஆச்சரியமான விஷயமாகும்(குறிக்கோள் பற்றிய விளக்கம் பக்கம் 73)



இறைவனின் தூய உரையாடல் என்னும் அருளைப் பெற்றவர்கள் அவர்கள் மூலம் அசாதாரண நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவர்களுடைய துஆக்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்கள் செய்யும் துஆக்களுக்கு இறைவனிடமிருந்து மிகுதியாக பதில்கள் கிடைக்கின்றன. இவ்விடத்தில் சில அறிவீனர்கள், தாங்களும் **உண்மையான கனவுகள் காணப்தாலும், சில சமயங்களில் தங்களின் துஆக்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதாலும், சிலவேளை, ' இல்ஹாம்' பெறுவ தாலும், எங்களுக்கும் இறைத் தூதர்களான நபிமார்களுக்கும் என்ன வேறுபாடு உள்ளதென்றும் வினவுவார்கள்**. இதற்குக் காரணம் என்னவெனில், **அவர்களின் கருத்தின்படி இறைவனுடைய நபி ஏமாற்றுகிறவராகவோ, ஏமாற்றப்பட்டவராகவோ இருக்கிறார். ஒரு சாதாரண விஷயத்தில் பெருமையடிக்கக் கூடியவர்; மற்றவர்களுக்கும் அவருக்குமிடையே எந்தவித வித்தியாசமுமில்லை**. இந்த எண்ணமே ஆணவமுடைய ஒன்றாகும். இதனால் மக்களில் பலர் இக்காலத்தில் அழிவுக்குள்ளாகின்றனர். ஆயினும்

உண்மையைத் தேடுகின்றவர்களுக்கு, இப்படிப்பட்ட ஐயங்கள் எழுமானால் தெளிவான பதில் தர முடியும். அதாவது, இறைவன் தன் தனிச்சிறப்பான அருளாலும் அருட்கொடைகளாலும் ஒரு கூட்டத்தை தேர்ந் தெடுத்து அவர்களுக்கு தன் ஆத்மீக அருளின் பெரும்பகுதியை வழங்கியுள்ளான் என்பது ஐயத்துக்கிடமில்லாத ஒரு உண்மையாகும். எனவே எதிரிகளான இக்குருடர்கள், எப்பொழுதும் நபிமார்களை மறுப்பவர்களாக இருந்த போதிலும் அவர்களை இறைத்தூதர்கள் வென்றே வந்துள்ளனர். மேலும், அவர்களுக்கும் இறைத்தூதர்களுக்குமிடையே ஒரு மாபெரும் வேறுபாடு இருப்பதை, அறிவுடையார் இறுதியில் ஏற்றுக்கொள்ளும் அளவு நபிமார்களிடமிருந்து **ஓர் அற்புத ஒளி** வெளிவந்து கொண்டிருந்தது. **அந்த வேறுபாட்டை ஒரு எடுத்துக்காட்டின்மூலம் கூற வேண்டுமாயின், பிச்சை எடுக்கும் ஒருவனிடமும் சில நாணயங்கள் இருக்கும்; ஒரு மாமன்னரின் கருவூலத்திலும் நாணயங்கள் நிரம்பி இருக்கும். ஆனால் அந்த மாமன்னருக்கு ஒப்பானவராகத் தன்னைபிச்சைக்காரன் கூற இயலாது'(லெக்சர் ஷியால்கோட் பக்கம் 34)**

எனவே ஒருபோதும் ஒருவர் அவர் ஆன்மிகத்தில் உயர்த்த நிலையில் இருந்தாலும் அவர் ஒரு தூதருக்கு ஓப்பாக மாட்டார்!!!

மேலும் இந்த காலத்தின் இறைத்தூதர் ஹசரத் முனீர் அஹ்மத் அலை அவர்கள் இந்த நூற்றாண்டின் இறைவஹீயை பற்றி குறிப்பிடும் போது:-

இறை வெளிப்பாடுகள் (இறை வஹீ ) தொடர்பாக, ஒரு தவறான, மிக மோசமான கருத்தானது எனது காலத்தில் அதாவது, இந்நூற்றாண்டில் நிலவி வருகின்றது. மேலும் இது மார்க்கங்களின் அடிப்படை அஸ்திவாரத்தை வலுவற்றதாக ஆக்கிக் கொண்டு இருக்கின்றது. இதன் காரணமாகவே, மார்க்கத்தின் மிக முக்கியமான சாராம்சம் முற்றிலுமாக புரட்சிகரமாக மாற்றப்பட்டு, அதன் விளைவாக இறை வெளிப்பாட்டில் ஒரு தெய்வீக பேரொளி ஏற்படுவதற்கு பதிலாக, அவ்விடத்தில் மனித உள்ளத்திள் உதிக்கும் எண்ணங்களும் கருத்துக்களும் அதற்கு மாற்றமாக வைக்க ப்பட்டு, இது தான் சத்தியம் என்று முன்வைக்கப்படுகின்றது. இன்னும் கூறுவ தென்றால் இறைவெளிப்பாட்டின் இத்தகைய முற்றிலும் தவறான விளக்கமே பொதுவாக மக்களாலும் நம்பப்பட்டும் வருகின்றது. இது எவ்வாறு தோன்றுகின்றது என்றால், நபிமார்களின் முத்திரையான **காத்தமுன் நபீயீன் முஹம்மது முஸ்தஃபா (ஸல்**) அவர்களின் தோற்றத்திற்கு பின்னர், சுதந்திரமான சிந்தனைகளும், மற்றும் வெகு நீண்ட காலம் கடந்துவிட்ட காரணத்தினாலும், உலகிலுள்ள பெரும்பாலான மக்கள் இறை வெளிப்பாடு (இறை வஹீ) என்பதை உள்ளத்தில் ஏற்படும் வெறும் கற்பனையாகவே நம்பி வருகின்றனர். அதாவது, இறைவன் ஒரு உயிருள்ளவன் அல்ல என்பதாகவும், அவன் மனிதர்களைப் போன்று உலகப் பொருட்களைச் சார்ந்துள்ளவன் என்பதாகவும் அவர்கள் நம்பி வருகின்றனர். இக்காரணத்தினால், அவனால் வார்த்தைகளால் பேசமுடியாது என்ற நம்பிக்கை, மற்றும் எண்ணம் வரக் காரணமாக அமைகின்றது.

மேலும், நான் எனது தனிப்பட்ட அனுபவத்திலிருந்து விளக்குவது என்னவெனில், இறைவெளிப்பாடு என்பது வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒன்றாகும் .மேலும், **அது வெளிப்படுத்தப்படும் விதம் என்பது நிச்சயமானதாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்றாகவும் இருக்கின்றது. அதாவது, ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் பேசுவதைப்போன்றதாக இருக்கின்றது**. அன்றியும், இறைவெளிப்பாடு என்பது வார்த்தைகளின் மூலம் மட்டும் வெளிப்படுத்தப் படவில்லை எனில், அது முற்றிலும் சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்றாகவும் அல்லது முழுமையான உறுதித்தன்மைக்கு வழிவகுக்கக் கூடிய ஒன்றாகவும் இருந்திருக்க முடியாது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் தனக்கு இறை வெளிப்பாடு வருவதாக தவறாகப் புரிந்துக்கொண்டு, தனக்கு வரும் அனைத்து வெளிப்பாட்டையும் இறை வெளிப்பாடு என்பதாக தவறாக எண்ணிக்கொண்டு, தானும் ஏமாறுவது மட்டுமின்றி, மனித குலம் முழுவதையும் வழிக்கெடுத்து கொண்டு இருக்கின்றார்கள். **ஆகையால், இந்த இறை வெளிப்பாட்டின் தவறான எண்ணம் என்பது உண்மையில் பல்வேறு தருணங்களிலும் நிகழ்ந்துள்ளதாக அமைந்துள்ளது**. அவ்வாறு இருப்பினும் இறை வெளிப்பாடுகள் வெளிப்படுவதன் மூலமாக, பல மார்க்க சந்தேகங்கள் மற்றும் தவறானக் கருத்துக்கள் ஆகியவை நீக்கப்படுகின்றன. இந்த இறை வெளிப்பாடுகள் என்பது வார்த்தைகளால் மட்டும் வெளிப்படுத்தப்படவில்லை எனில், ஒரு நிச்சயமற்ற தன்மையையும் மற்றும் சந்தேகக்கதவுகளையும் வலுவாக திறப்பதற்கு இன்னும் காரணமாக அமைந்து இருக்கும். இதனால், மேலும் இறை வெளிப்பாடுகள் மற்றும் மனித உள்ளத்தின் கற்பனைகள் ஆகியவற்றிற்கு இடையில் எந்த வேறுபாடும் இல்லாமல் போயிருக்கும். இறைவெளிப்பாடுகள் என்பது அசாதரணமான மகிமையையும் மற்றும் மாட்சிமை யையும் கொண்ட வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படும் ஒன்றாக உள்ளது. இன்னும் கூறவதாக இருந்தால்,இரண்டு மனிதர்களுக்கு இடையில் நடக்கும் உரை யாடலைப்போன்றே இறைவனுக்கும்,மனிதனுக்கும் இடையில் நடக்கும் உரை யாடலும் உள்ளது இதன் காரணமாகவே, இறை வெளிப்பாட்டை பெறும் ஒருவர் அந்த உறுதிப்பாட்டின் நிலையை அடைகின்றார். அத்துடன், இதுவே கூடுதலான ஆதாரங்களையும் மற்றும் வாதங்களையும் வழங்குவதாகவும் அமைகின்றது.

மேலும் கூறப்போனால், இறைவன் பேசுகின்றான் என்றால் அவ்வாறு பேசுவதற்கு அவனுக்கு நாவு இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு, நாம் அறிந்திருக்க வேண்டியது என்னவெனில், இறைவன் தான் நாடியதை வெளிப்படுத்த உலகப் பொருட்களைச் சார்ந்துள்ளவனாக இல்லை என்பதும்,அவன் இந்த பிரபஞ்சத்தை பௌதீக கைகள் கொண்டு உருவாக்கவோ அல்லது பௌதீக கண்கள் கொண்டு பார்க்கவோ அல்லது பௌதீக நாவைக் கொண்டு பேசவோ இல்லை என்பதுமாகும்.அதாவது, **நிச்சயமாக இறைவன் பேசுகின்றான்** என்று நாம் கூறும்பட்சத்தில், அவன் பௌதீக நாவுகள் கொண்டு பேசுகின்றான் என்று நாம் பொருள் கொள்ளக் கூடாது. மாறாக, இறைவன் இயற்கையில் இத்தகைய அசைவுகளை உருவாக்கி, அவற்றை

வார்த்தைகளின் வாயிலாக வெளிப்படுத்துவதன் மூலமாக, ஒரு இறைவெளிப்பாட்டு கிடைக்கப் பெறுபவரால் அவை சிறப்பாக பெறப்படுகின்றது. அன்றியும், அவன் வார்த்தைகளின் தேவையுள்ளவனாக இல்லை, மாறாக, இறைவெளிப்பாடு வெளிப்படுத்தப்படும் ஒருவரே அவற்றின் தேவையுடையவராக இருக்கின்றார். அதாவது, இறைவெளிப்பட்டு என்பதை நான் வெறும் வார்த்தையாக கூறவில்லை மாறாக, **எனது சொந்த அனுபவத்தின் வாயிலாக , நான் அந்த மாபெரும் அருளை அடைந்தவனாக உள்ளேன் என்றே கூறுகின்றேன்**. மேலும், அல்ஹம்துலில்லாஹ், இந்த எளியவனான எனது பிரார்த்தனையின் விளைவாக, மொரீஷியஸில் **இறைவெளிப்பாட்டின் தொடக்க காலத்தில், எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து வழங்கப்பட்ட இந்த ஆன்மீக ஆற்றலின் வாயிலாக, பல்வேறு மக்களுக்கும், எனது ஸஹாபாக்களுக்கும், மற்றும் உண்மையை தேடுபவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றாக பயனடைய முடிந்தது.** மேலும், இத்தகைய இறை வெளிப்பாடுகள் இன்னமும் கூட அவர்களால் பெற முடிகின்றது. **மேலும், அவர்கள் யாருடன் இணைந்துள்ளனர் என்பதற்கு இவ்வாறான இறைவெளிப்பாடுகளே தெளிவாள அடையாளங்களாக உள்ளன**. இதற்கு உதாரணமானது, ஒரு மலரின் மீது ஒரு தேனீக்கு இருக்கும் தொடர்பைப் போன்றதும் மற்றும் ஒரு மரத்தின் மீது ஒரு கிளைக்கு இருக்கும் தொடர்பைப் போன்றதும் என்று கொள்ளலாம். அதைப்போன்றே, அறியாமை, மற்றும் பாவங்களின் இருளிலிருந்து உங்கள் அனைவரையும் வெளியே கொண்டு வருவதற்காக, இக்காலத்தில், உங்களுக்காக அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறப்பான பேரொளியை உருவாக்குபவரும் மற்றும் தெய்வீக வெளிச்சம் தருபவருமான ஒருவரின் ஒளியிலிருந்தும் உங்களால் ஒளியைப் பெறமுடியும்.

எனினும், சில நேரங்களில், உண்மையான இறை வெளிப்பாட்டின் பேரொளியை பெரும்பாலாக மக்கள் உணர்ந்து கொள்வதில்லை. அதற்கான காரணம், அவர்கள் தங்களது உள்ளங்களை அதிலிருந்து மூடி கொள்கின்றனர். அதாவது, ஒரு வீடு என்பது எவ்வாறு மூடப்பட்ட கதவுகளுடனும், மூடப்பட்ட ஜன்னல்களுடனும் மற்றும் இழுத்து மூடப்பட்ட திரைச் சீலைகளுடனும் இருப்பதால் இருளாகி விடுமோ, அதேப் போன்ற நிலையே, ஒரு மூடப்பட்ட உள்ளத்திற்கும் இருக்கும் என்பதற்கு இது உதாரணமாக கூறப்படுகின்றது. இவ்வாறான நிலையில், அந்த வீட்டின் உள்ளே சூரிய ஒளி ஊடுருவிச் செல்வதை எவ்வாறு ஒருவரால் எதிர்பார்க்கமுடியும்? அதேப்போன்றே, ஒருவரின் உள்ளம் மூடப்பட்டிருக்கும் பட்சத்தில்,அந்த இறை ஒளியை அவரால் எவ்வாறு உட்புறமாக உணர்ந்து கொள்ள முடியும் என்பதும், மற்றும் அவரை நேரான பாதையில் எவ்வாறு அது வழிநடத்த முடியும் என்பதும் எவ்வாறு ஒருவரால் எதிர்பார்க்க முடியும்?

மேலும், **இவ்வுலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், அல்லாஹ்வின் தூதராகவும் உள்ள இந்த எளியவனான என் போன்றவர்களுடைய பணியானது, இக்காலத்தில் உங்கள் அனைவருக்குமான இறைச்செய்தியை**

<u>தெரிவிப்பது மட்டுமாகும்.</u>அதாவது, இவ்வாறு அனுப்பப்படும் இவர்களால் மனிதர்களின் உள்ளங்களை திறப்பதற்கோ, அல்லது ஆன்மீக ஒளியை அதனுள் செலுத்துவதற்கோ முடியாது. ஆனால் இவர்களால் அவ்வொளியை வெளிப்புறமாக மட்டுமே பரவச் செய்யவும், இன்னும் இறைதூதில் அவர்களை மூழ்க செய்ய மட்டுமே முடியும். ஆனால், அவர்களுடைய உள்ளங்களின் நிலைகளை மாற்றுவதற்கான ஆற்றல் அவருக்கு சுயமாக எதுவும் கிடையாது. அதாவது, அப்பிரகாசமான பேரொளியை நம்பி, ஏற்றுக் கொண்டுள்ள அவ்விறை வெளிப்பாடை பெறும் ஒரு அடியாருக்கு அல்லாஹ்வின் ஆற்றலாலும் மற்றும் நாட்டத்தாலும் உதவி கிடைக்கப் பெறும் வரை, அவருக்கென்று சுயமாக எந்த ஆற்றலும் கிடையாது. அதாவது சில நேரங்களில், <u>அல்லாஹ் தனது தூதருடைய உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்காக, இறை வெளிப்பாட்டை தாராளமாக ஒரு சத்தியத்தை தேடுபவருக்கு கிடைக்கச் செய்கின்றான். அத்துடன், அவரை பரிசுத்த ஆவியுடனும் பேச வைக்கின்றான். இவ்வாறு பரிசுத்த ஆவியை அவர் அடைவதன் மூலம்,அவருக்கு அல்லாஹ்வின் மீதும், மற்றும் அவன் அனுப்பியுள்ள தூதரின் மீதும் நம்பிக்கை ஏற்பட்டு, அந்நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதற்கும் அது காரணமாக அமைகின்றது.</u>



எனினும் இத்தகைய அருட்கொடையைப் பெற்றவர்கள், அல்லாஹ்வுடைய தூதரின் மீது பொழியப்படும் இவ்வாறான இறை வெளிப்பாடுகளுக்கு சாட்சியாகவும் இருக்கின்றார்கள். அத்துடன், அல்லாஹுவின் தூதருடைய உண்மைத்துவத்தையும் இறைவெளிப்பாடுகளையும் உறுதிப்படுத்தும் வகையில் தாங்களே அவ்விறை வெளிப்பாடுகளை பெறக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். அவ்வாறு இருந்தபோதிலும், **சிலரோ இவ்வாறு பெறப்படும் அவ்விறை வெளிப்பாடுகள் அனைத்தையும் தங்கள் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள வெறும் மாயை என்பதாக கருதி, அவை அனைத்திலிருந்தும் தங்களுடைய முகங்களை அவர்கள் திருப்பிக் கொள்கின்றார்கள். இதுவொரு மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இவ்வாறான மக்களே, மக்களில் மிகவும் துரதிர்ஷ்டமானவர் ஆவார்கள்.** ஏனெனில், அவர்கள் சத்தியத்தை உணர்ந்துக் கொண்டதன் பிறகும், அச்சத்தியத்தை அசத்தியம் என்றும் மற்றும் மாயை என்றும் கூறுகின்றார்கள். இதனையே, இறை சத்தியத்திலிருந்து தங்கள் முதுகுகளை திருப்புவதற்கு ஒரு சாக்காகவும் கூறுகின்றார்கள்.

மேலும், நான் இந்த இறை வெளிப்பாட்டின் தன்மையை விளக்குவதன் மூலம், மார்க்கத்தின் மீது தொடுக்கப்படும் இந்த ஆபத்தான தாக்குதலை சரிசெய்வதற்கான

வழிமுறையையும் வழங்கியுள்ளேன். அதாவது, ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட மற்ற அனைத்து வேதங்களின் தவறான விளக்கத்தின் அடிப்படையில், இறை வெளிப்பாடுகள் என்பது வெறும் கற்பனையான ஒன்றாகவே உள்ளது. ஆனால் இவ்வாறு வெளிப்படும் இறைவெளிப்பாடுகள் மூலம் தவறான விளக்கம் என்பது முற்றிலுமாக துடைத்து எறியப்படுகின்றது. ஆகையால், இவ்வாறான இறை வெளிப்பாட்டை பொறுத்தமட்டில், மனிதர்கள் இவ்வுலகில் வாழ்வதற்கான அறிவு கிடைக்கப் பெறுவது என்கின்ற விஷயத்தை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அடியாரின் மீது வெளிப்படுத்தப்படும் இறைவெளிப்பாட்டின் தனித்துவமான தன்மையுடன் ஒப்பிடமுடியாது. இவ்வாறாக வெளிப்படத்தப்படும் வெளிப்பாடானது, இறை தோற்றத்தின் பாதுகாப்பாகவும் மற்றும் உத்தரவாதமாகவும் செயல்படுகின்றது. அத்துடன், இவ்விறை வார்த்தைகளின் தன்மை என்பது அனைத்து மனிதகுலத்தின் நலனிற்காக கிடைக்கப்பெறும் ஒரு அருளாகவும் அமைகின்றது.

மேலும், எல்லாம் வல்ல இறைவன் **ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின்** உறுப்பினர்களுக்கு அவனுடைய நெருக்கம் மற்றும் அவனுடைய வஹீ ஆகியவற்றைக் கொண்டு தொடர்ந்து அருள்புரிவானாக. இன்னும் இந்த அருளை பற்றி கூறுவதென்றால் ஒரு முறை எனக்கு அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்விடமிருந்து

**“அல்லாஹ்வின் பேரொளியில் மூழ்கி, அவனது பேரன்பை அருந்துங்கள்”**

**என்ற இந்த இறைவஹீ அருளப்பட்டது .**

**ஆகவே, எனது அருமையானவர்களே!! நீங்களும் அல்லாஹ்வின் பேரொளியில் உங்களை அதிகமாக மூழ்க வையுங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில், நீங்கள் அதிகமாக அவனது பேரன்பை (பானத்தை) அருந்துவீர்கள்.இன்ஷாஅல்லாஹ் ! ஆமீன்!!!**

மேலும் அன்னாருக்கு அரபி ,உருது, கிரியோல், பிரெஞ்சு,ஆங்கிலம் சன்ஸ்க்ரிட் போன்ற பலவேறு மொழிகளில் வஹீ இறங்கி உள்ளது அவற்றில் நற்செய்தி, எச்சரிக்கை மற்றும் துஆக்களும் அடங்கும்.

**துஆ வடிவிலான வஹீ சில**

அஹ்மதிகளின் இதயத்தில் (எனக்கு எதிராக) வெறுப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மொரிஷியஸில் உள்ள அஹ்மதியா ஜமாத் நடத்திய வெறுப்புணர்வுப் பிரச்சாரங்களைக் கருத்தில் கொண்டு இந்த எளிய ஊழியனை அல்லாஹ்

புறக்கணிக்கவோ, கைவிடவோ இல்லை. மேலும் எனக்கு வரும் இவ்விறை வெளிப்பாடுகள்யாவும் பொய்யானவைகள் என்று எண்ணுகிறார்கள். அதற்கு ஒருப்படி மேலேயும் போய், இவ்விறை வெளிப்பாடுகள் அனைத்தும் ஷைத்தானிய வெளிப்பாடுகள் என்றும் உறுதி செய்தார்கள்-நவூதுபில்லாஹ்! நிச்சயமாக, அவர்களுடைய இந்த தீய பேச்சுகள் என்னைத் துன்புறுத்தியதால், மேலும் அதிகமாக நான் பிரார்த்தனையில் ஈடுபட்டதன் காரணத்தால், அல்லாஹ் இதனை எனக்கு அறிவிக்கின்றான் (அதாவது, நான் அவனிடம் கூறுவதற்காக அவனே சில துவாக்களை எனக்கு வெளிப்படுத்தினான்):

**"ரப்பி ப.ஃர்ரிக் பைனஸ் ஸாதிக்கீன் வல் கத்தபீன் அன்த தர குல்ல முஸ்லிஹீன் வஸ் ஸாதிக்கீன்**

**என் இறைவா! உண்மை மற்றும் பொய்யிற்கு இடையில் உள்ள வித்தியாசத்தை எங்களுக்கு காட்டுவாயாக; நீயே உண்மையாளர்களையும், நன்மை செய்பவர்களையும் அறிபவனாக இருக்கின்றாய்."**

**"ரப்பி லா தவ்கினி மினஸ் ஸியாதித் திக்ரா"**

**பொருள் :-""என் இறைவா! என்னை இழிவுபடுத்தும் எதனையும் விட்டு விடாதிருப்பாயாக"**

**"ரப்பிஷ் ஹிஸ்னி ஃப இன்னல் கவ்மத் தக்ஹஸோனனி ஷுக்ரா"**

**பொருள் :-""என் இறைவா, நீ என்னை இந்த பரிகசிக்கும் மக்களிடமிருந்து காப்பாற்றுவாயாக!"**

அஹஸிபன் நாஸு அய்யுத்ரகூஹு அய் யகூலூன ஆமன்னா வஹும் லா யு.ஃப்தனூன்

**நாங்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளோம் என்று கூறுவதனால், அவர்கள் விட்டு விடப்படுவார்களென்றும், அவர்கள் சோதனைக்கு ஆளாக்கப் படமாட்டாரகள் என்றும் மக்கள் எண்ணுகின்றனரா?** (இறைவெளிப்பாடுகள்-27 மார்ச் 2020)

இத்தகைய அனைத்து வெளிப்பாடுகளை இந்த கிழ்கண்ட இணைப்புகளில் நீங்கள் காணாலாம்

https://sahih-al-islam.blogspot.com/2020/02/divine-revelations-of-22-january-2020.html
https://sahih-al-islam.blogspot.com/2014/05/divine-revelations-of-khalifatullah.html
https://sahih-al-islam.blogspot.com/2020/03/revelations-in-corona-times.html#more
http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2018/fseng_29jun18.pdf
http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2018/fseng_29jun18.pdf
http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2018/fseng_06jul18.pdf
http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2020/fseng_13mar20.pdf
http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2020/fseng_27mar20.pdf
http://www.jamaat-ul-sahih-al-islam.com/engsection.html

இன்ஷா அல்லாஹ் கடைசியாக அன்னாரை அல்லாஹ் நபி என்றும் ரசூல் என்றும் அழைத்த உருது வெளிப்பாட்டை பதிகின்றேன்

بسم الله الرحمن الرحيم

**H AZRAT MUNIR A HMAD A ZIM A MIR ' UL M OMENEEN**
**A L M ASSIH - E -M AOUD -A L -R ASSOOL - E -N ABIULLAH ( AS )**

*Revelation (in Urdu & French) received twice, once in 2004 and the second one after the official proclamation of Messiah in October 2010.*

**Ya Massih-e-Maoud-Al-Rassool-e-Nabiullah,**
**Munir Ahmad Azim, tamannaé kawno makan.**
O Promised Messiah, Messenger and Prophet of Allah Munir Ahmad Azim, the universe as a whole desires to inherit your love.
**Rooho sidqo yaqeen jaané imaan-o-deen.**
You are the coolness of the soul and the essence of faith and religion.
**Raahaté aa'refeen rehmaté a'alameen.**
You are the inspiration of the pious and the benefactor of the universe.
**Dastageeré zaman shaafaaé békassan.**
You are the saviour of all creatures and the intercessor of the poor.
**Toum habeebé Khoudaa ho, Khoudaa ki qassam.**
By Allah, you are surely the most beloved of your Lord.
**Hé toumhin pé ziaa-daa Khoudaa ka karaam.**
May Allah pour down His blessings upon you all the more.
**Haq ké pyaaré haq sé waasil.**
For you are verily the beloved of Allah and closest to Him.
**Toum né mourdon ko jilaayaa.**
You (certainly) have revived the dead.
**Ya Massih-e-Maoud-Al-Rassool-e-Nabiullah,**
**Munir Ahmad Azim, tamannaé kawno makan.**
O Promised Messiah, Messenger and Prophet of Allah Munir Ahmad Azim, the universe as a whole desires to inherit your love.

**Munir Ahmad Azim,**
**Hazrat Khalifatullah Al-Massih-Al-Maoud**
**Jamaat Ul Sahih Al Islam**

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu

**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**05.05.2020**

**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**




**மதிப்புக்குரிய சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு எங்கள் பதில்**




**ஆறாவது கேள்வி:-**

நூற்றாண்டு என்பதின் கணக்கை எதன் அடிப்படையில் செய்வது? கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்.**

**பதில்:**

**1.“நூற்றாண்டு”- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் ஒரு மிக இன்றியமையாத இடத்தை பெறுகின்றது முதலில் அன்னார் முன்னறிவித்த**

**ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் அல்லாஹ் ஒரு முஜத்தித்தை தோன்ற செய்து மார்க்கத்திற்கு புத்துயிர் வழங்குவான்**

**(அபூதாவூத் 4291)**

இது சம்பந்தமாக காலத்தின் இமாம், கிலாபாதே முஹம்மதிய்யாவின் கலீபா, கலீபத்து ல்லாஹ் ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள், ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் கூற்றை மேற்கோள் காட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:- **மஸீஹ் (அலை)** அவர்கள் இந்த ஹதீதை பற்றி கூறும்போது **(ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்மார்கள் வருவார்கள் பற்றிய)** இது **அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட** நபிமொழி **என்றும்**, **ஷாவலி-உல்லாஹ்** அவர்களும் இது நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் உதட்டிலிருந்து தான் உதித்தது என்று சான்றுபகிர்கின்றார்கள். இது ஹதீத் நூல்களில் மிக தெளிவாக பதிவுசெய்யப்பட்டுள்ளது மேலும் இந்த ஹதீதை எவரும் புறக்கணிக்கவில்லை.

**இந்த ஹதீத் ஒருபோதும் பொய்யானதில்லை மாறாக இது முற்றிலும் உண்மையான ஹதீத் என்பதை நான் உறுதியளிக்கின்றேன். ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு முஜத்தித் வருவதை நாம் இவ்வாறு கூறலாம், அதாவதுஒரு நூற்றண்டில் நமது பௌதீக உடல் குன்றுவதைபோல் ஒவ்வொரு நூற்றாண்டும் ஆன்மிகமும் அதன் இறப்பை சந்திக்கின்றது , எனவே ஒவ்வொரு நூற்றாண்டு கடந்ததும் ஒரு புதிய தலைமுறை உருவாகின்றது, இந்த புதிய தலைமுறைக்கு ஆன்மிக புத்துயிர் வழங்க ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்மார்களை அனுப்புவது அந்த தூய இறைவனின் சுன்னத்துல்லாஹ் வாஹும்.**

## 2.“நூற்றாண்டு”- பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தின் இமாம்களின் வருகை சம்பந்தமான முன்னறிவிப்பும் நூற்றாண்டுடன் தொடர்புடையது

**நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:- “இமாமை பற்றி அறியாதவர்களின் மரணம் அறியாமையின் மரணம் ஆகும்”**(Page 96 vol. 4 Musnad Ahmad)

**மேலும் மஸீஹ்( அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:-**

**They do not realize that such a thought is altogether sinful because our Holy Prophet(sa) has testified to the need for an Imam for every century(Book The Need For The Imam page 5)**

**இமாம்களின் வருகையை மறுப்பது தண்டனைக்குரிய பாவம் ஏன்னென்றால் ஹசரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த இமாமின் தேவை ஒவ்வொரு நூற்றாண்டும் தேவை என்று கூறுகின்றார்கள்.**

காலத்தின் இமாம் கிலாபாதே முஹம்மதிய்யாவின் கலீபா கலீபத்துல்லாஹ் ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:-

என் அன்பிற்குரியவர்களே! இதிலிருந்து இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்து செல்வத்திற்கு ஆட்சி அரசாங்கமோ, செல்வமோ அல்லது அதிக எண்ணிக்கை யிலான மக்களோ தேவையில்லை என்பதை தெரிந்து கொள்ளலாம் மாறாக இந்த வேலைக்கு இறையச்சம் மற்றும் இறை நம்பிக்கையே தேவையானதாகும். அல்லாஹ் வின் அருளால் இந்த பணியை ஜமாத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் பலவேறு விதமான எதிர்ப்புகள் இருந்தபோதிலும் இஸ்லாத்தின் தூய போதனைகளை உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச்செல்கின்றது, இந்த ஜமாத்தில் உலக செல்வச்செழிப்போ அல்லது அதிக **எண்ணிக்கையிலான** மக்களோ இல்லை மாறாக எளிமையான மிக சொற்ப எண்ணிக்கையிலான மக்களே உள்ளனர் இருந்த போதும் இதன் பணியை உண்மை இஸ்லாத்தை முழு உலகத்திலும் பரப்பும் பணியை எவராலும் தடுக்கமுடியாது. ஏனென்றால், இவர்களுடன் அந்ததூய அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட கலீப:துல்லாஹ் உள்ளார் **மேலும் அவர் காலத்தின் இமாமாகவும் திகழ்கின்றார்.**

(**ஆதாரம்**:- http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2016/fseng_29jan16.pdf

## 3.“நூற்றாண்டு-திருக்குர்ஆன் கூறும் நூற்றாண்டு

**நாம் அவர்களை (மக்களின்) தலைவர்களாக ஆக்கினோம். அவர்கள் நமது கட்டளை மூலம் அவர்களுக்கு நேர்வழி காட்டினர். நாம், அவர்களுக்கு நற்செயல்களைச் செய்யுமாறும், தொழுகையை நிலைநாட்டுமாறும், ஸக்காத்து கொடுக்குமாறும் வஹியின் மூலம் அறிவித்தோம். அவர்கள் யாவரும் எம்மை வணங்கும் அடியார்களாகவே விளங்கினர். ( திருக்குர்ஆன் 21: 74 )**

**தப்பிஸிர்** :- பரிசுத்த குர்ஆன் 2: 125-ல் குறிப்பிடப்பட்டுள்ள பிரார்த்தனையை நிறை வேற்றுவதற்காக இறைவன் இப்ராஹீமின் சந்ததியினரிடமிருந்து மார்க்க இமாம்களைத் தேர்ந்தெடுத்தான். தம்மைப் பின்பற்றுபவர்களிடமிருந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆன்மீக சீர்திருத்தவாதிகளை எழுப்புவது தொடர்பாக இதேபோன்றதொரு வாக்குறுதியே புனித நபி(ஸல்) அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

**(நிச்சயமாக ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இறைவன் இந்த உம்மத்திற்கு,அவர்களது மார்க்கத்தை மீட்டெடுக்கும் ஒரு சீர்திருத்தவாதியை நியமிப்பான்-அபூதாவுத்).**

இந்த வாக்குறுதியானது பிரபலமான பிரார்த்தனையிலும் அடங்கி உள்ளது, அதாவது தரூதில், அது:-
அல்லாஹ்வே! நீ (ஹஸ்ரத்)இப்ராஹீமின் மீது எவ்வாறு அருள்புரிந்தாயோ அது போன்று ((ஹஸ்ரத்) முஹம்மது(ஸல்) அவர்களின் மீதும் அருள்புரிவாயாக! ஆன்மீக சீர்திருத்தவாதிகள் (ஹஸ்ரத்) இப்ராஹீமின் சந்ததியினரிடையே தொடர்ந்து தோன்றிவந்தார்கள், யூதர்களால் ஈசா(அலை) அவர்கள் நிராகரக்கப்பட்டதன் மூலம், அவர்கள் எல்லா காலத்திற்கும் அந்த அருளை இழந்துவிட்டார்கள், மேலும் மேற்கூறப்பட்ட(2:125) பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கான முன்னறிவிப்பு இஸ்மாயிலின் சந்ததிக்கு மாற்றப்பட்டது. இஸ்லாத்தை சீர்திருத்தம் செய்வதற்காக **ஒவ்வொரு நூற்றாண்டிலும்** ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களை பின்பற்றுபவர்களிடமிருந்து ஆன்மீக சீர்த்திருத்தவாதிகள் இப்போது எழுப்பப்ப டுகின்றார்கள், அவர்கள் இறுதி காலம் வரை தொடர்ந்து (அந்த சீர்திருத்தம்) செய்து கொண்டிருப்பார்கள். தரூத்(ஷரீ:ஃபி)ல் உள்ள பிரார்த்தனையின் நிறைவேற்றமானது இப்ராஹீம்(அலை) அவர்கள் மீது ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களது மேன்மையை நிலைநிறுத்துகின்றது, ஏனென்றால் (ஹஸ்ரத்)ஈஸா நபிக்குப் பிறகு இப்ராஹீமின் சந்ததியினரிடையே ஆன்மீக சீர்த்திருத்தவாதிகள் தோன்றுவது நிறுத்துப்பட்டு விட்டது,(தற்போது) அவர்கள் அவரை(அதாவது நபி(ஸல்) அவர்களைப்) **பின்பற்றுபவர்களிடையே இந்த உலகம் நீடித்திருக்கின்ற வரை தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருப்பார்கள்**!!!! (English w/5 vol.Commentry(2018) பக்கம்-2101-2111)

**தீர்ப்பிற்குரிய இரவு, ஆயிரம் மாதங்களை விட மிகச்சிறந்ததாகும்.**
**( திருக்குர்ஆன் 97: 4 )**

The verse, however, embodies an allusion to the appearance of Divine Reformers among the Muslims when they would stand in need of them. One thousand months roughly make one century and **the Holy Prophet is reported to have said that God would continue to raise from among his followers, at the head of every century**, a Reformer who would regenerate Islam and give it new life and new vigour (Mājah). Thus väl all (Night of Destiny) may signify the period of each one of these Divine Reformers.

(English w/5 vol.Commentry(2018) **பக்கம்**-3415)

**(1000 மாதம் என்பது ஒரு தோராயமாக ஒரு நூற்றாண்டை குறிக்கும் இதையே ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இறைவன் இந்த உம்மத்திற்கு,அவர்களது மார்க்கத்தை மீட்டெடுக்கும் ஒரு சீர்திருத்தவாதியை நியமிப்பான்- இப்பனுமாஜா)**

*பெருமானார் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள்* என்பதற்கான வலுவான ஆதாரம் அவன் (அதாவது அல்லாஹ்) ஒவ்வொரு**நூற்றாண்டின்** ஆரம்பத்திலும் ஒரு நபரை நியமிக்கின்றான். அவர் இஸ்லாத்தை மரணிப்பதிலிருந்து காப்பாற்றுகின்றார். அதற்கு புதிய வாழ்க்கையை வழங்குகின்றார். உலகில் உள்ளவர்களை அவர்களிடம் உருவாகின்ற தவறுகள், பித் அத்துகள்(மார்க்க தில் புதிதாக புகுத்தப்படும் விஷயங்கள்) கவன மற்ற நிலைமைகள், சோம்பல்கள் ஆகிய வற்றில் இருந்து அவர் காப்பாற்று கின்றார். *இந்த **தனிச்சிறப்பு பெருமானார் (ஸல்)*** அவர்களுக்கே கிடைத் திருக்கின்றது. இது அவர்கள் *உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான வலுவான ஆதாரமாக இருக்கின்றது* . **யாரும் அதை எதிர்த்து நிற்வே முடியாது**. (**அஹ்மதி அவ்ர் கைர் அஹ்மதி மே கியா ஃபரக் ஹே? ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 469**)

சகோதரர்களே சற்று சிந்தியுங்கள்!! *ஒவ்வொரு **நூற்றாண்டிலும்** ஆரம்பத்தில்* அல்லாஹ் அவனிடம் இருந்து ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவது அவனது வாக்குறுதியாகும் இதை நாம் 14 நூற்றாண்டுகளாக ஏற்று, ஹஸ்ரத் மஸீஹ் மௌஊது (அலை ) அவர்களை ஏற்றோம் ஆனால் *15 வது நூற்றாண்டு தொடங்கி வாதம் செய்பவர் வந்த பின்னும்* ஹஸ்ரத் மஸீஹ் (அலை ) அவர்களின் போதனையை கவனம் அற்று இருப்பது ஏனோ!? இறைவன் அவனது சுன்னத்தை ஒருபோதும் மீறமாட்டான் அவனுடன் போட்டியிட்டு வெல்லமுடியுமா!!

ஆனால் இந்த கூற்றுக்கு மாறாக இந்த நூற்றாண்டில் சில தவறான கொள்கைகள் நம்மிடையே நிலவுகின்றன அதாவது கலீபாதுல் ரஸூல் /மஸீஹ்மார்கள் இன்னும் குறிப்பாக கூறவேண்டும் என்றால் இந்த நபிமார்கள் அல்லாத கலீஃபாமார்கள் தான் முஜத்தித்,காலத்தின் இமாம் என்று நிசாமிகளால் முன்வைக்கப்படுகின்றது, ஆனால்

அவர்களின் இந்த கூற்றிற்கு எந்த திருகுர்ஆன் வசனமும் முன் நிற்பதில்லை மாறாக ஒரு கலீபாதுல் மஸீஹ் அவருக்கு முன் உள்ள கலீபாதுல் மஸீஹ் இறந்ததிற்கு பிறகு தேர்வு செய்யப்படுகின்றார். ஆனால் இறைவனோ ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் இறைவஹீ மூலம் ஒருவரை அவனே நியமிக்கின்றான். என்பதை அவர்கள் மறந்து விட்டனர். மேலும் நிசாமிகள் வைக்கும் மற்றும்மொரு ஆட்சேபனை ஒவ்வொரு நூற்றாண்டும் பல முஜத்தித்க்கள் வந்துள்ளனர் என்று ஆனால் திருகுரானின் அடிப்படையில் இந்த ஹதீஸ் மிகத்தெளிவாக ஒவ்வொரு நூற்றாண்டில் தலைமையில் தோன்றும் அந்த முஜத்தித் பற்றி அதாவது அந்த நூற்றாண்டின் இமாம்மை பற்றி அங்கே மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்க மறுக்கின்றனர். **அவர்களின் நோக்கம் இந்த கிலாபாதே ரஸூலை அதாவது நபிமார்கள் அல்லாத கலீபாக்களை இறுதி தீர்ப்புநாள் வரை கொண்டுசெல்வதில் தான் உள்ளது என்பதையும் நாம் தெளிவாக உணரலாம்**.

இன்னும் மற்றுமொரு வியக்கத்தக்க ஆட்சேபனை என்னவென்றால் நிஜாமிகள் இறைபுரத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் வாதம் செய்வதில்லை என்ற கூற்றை முன் வைக்கின்றனர். ஆனால் திருகுறான் மற்றும் மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றின் அடிப்படையில் நாம் பார்த்தால் இந்த கூற்றும் தவறானது எனபதை அறியலாம்.

**அந்த இரவை அது மூடிக் கொள்ளும் போது சான்றாகக் காட்டுகிறேன். அந்தப் பகலை அது ஒளி வீசும் போது சான்றாகக் காட்டுகிறேன். ஆணையும், பெண்ணையும் படைத்ததை சான்றாகக் காட்டுகிறேன்.( திருக்குர்ஆன் 92: 2-4 )**

"Procreation of man depends upon the coming together of two individuals of opposite sexes. The characteristic quality of the one the (male) is to give and of the other (the female) is to receive. Like the physical world, **there are in the spiritual world, males- God's great prophets and Divine Reformers-** who teach and guide, and there are also spiritual females- their followers- who receive and benefit by the Divine Teaching. The verse embodies a hint that by coming together of the perfect Teacher-the Holy Prophet- and the ideal pupils- his Companions- **a new world is about to be born**". **(HQ, 92: 2-4, pp. 2835)**

**வருகின்ற முஜத்தித் ஆன்மீக ஆண்கள் என்ற பொருள் வருகின்ற அதாவது முஜத்தித்மார்கள் நபிமார்களை போன்று ஆன்மீக ஆண்கள் அதாவது வாதம் செய்யும் ஆன்மீக சந்ததி என்று தெளிவாக ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.**

மேலும் ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் ஹகீகத்துள் வஹீயில் அன்னாரின் வருகையின் முதல் அடையாளமாக நூற்றாண்டின் முஜத்தித்மார்களின் வருகையை பற்றி மிகவும் குறிப்பாக நூற்றாண்டின் தலைமையில் தோன்றும் இத்தகைய முஜத்தித்

மார்கள் **<u>தத்தமது காலத்தில் வாதம் செய்துத்துள்ளனர்</u>** என்று தெளிவாக குறிப்பிட்டுளார்கள்( HaqIqatul-WaHI—The Philosophy of Divine Revelation page no:241)

## நூற்றாண்டு:-

**ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் ஒரு முஜத்தித் தோன்றுவர் என்றும் அத்தகைய முஜத்தித் வாதம் செய்வார்கள் என்றும் அவர்களின் வருகை இறுதி தீர்ப்புநாள் வரை தொடரும் என்பதை திருகுரானின் அடிப்படையில் பார்த்தோம். மேலும் நூற்றாண்டு எவ்வாறு கணக்கிடப்படுகின்றது என்பதையும் இப்போது பார்க்கலாம் நபிகள் நாயகம் ஸல் அவர்களும் ஒரு சிறந்த முஜத்தித் ஆவார்கள்.**

நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறந்த முஜத்தித் ஆவார்கள் (Urdu- Roohani Khazain, Volume 20, Page 206)

அன்னாருக்கு பிறகு ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் முஜத்தித்மார்கள் தோன்றார்கள் அவர்கள் தோன்றும் காலத்தை பற்றி ஹசரத் முஹையதீன் அல் கலீ:பத்துல்லாஹ் முனீர் அஹமத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் அந்த நாளை பற்றிய அறிவு எவர்க்கும் இல்லை மேலும் அதன் அறிவை அவன் தன்னகத்தே வைத்துள்ளான் இதன் அறிவை அவனது மிகவும் நெருங்கிய அவனது அன்பிற்குரிய ஹசரத் முஹம்மது ஸல் அவர்களிடம் கூட வெளிப்படுத்த வில்லை மேலும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

( https://sahih-al-islam.blogspot.com/2015/10/super-blood-moon-grand-celestial-sign.html)

அவர்கள் உம்மிடம் அந்த நேரத்தைக் (கியாமத்தை) குறித்து அது எப்போது வருமென்று கேட்கின்றனர். நீர் கூறுவீராக! அதனைப் பற்றிய அறிவு என் இறைவனிடமே உள்ளது. அவனையன்றி அதனை அதற்குரிய காலத்தில் வெளிப்படுத்த எவராலும் முடியாது. அது வானங்களிலும் பூமியிலும் பாரமானதாக இருக்கும். (மேலும்) அது உங்களிடம் திடீரென்று தான் வரும். அது குறித்து நீர் அதனை நன்கறிந்திருப்பதைப் போன்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறுவீராக: அதனைப் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. ஆனால் பெரும்பாலான மக்கள் இதனை அறிவதில்லை.
( திருக்குர்ஆன் 7: 188 )

இறுதிக்காலம் குறித்து மக்கள் உம்மிடம் கேட்கின்றனர். நிச்சயமாக அதைப் பற்றிய அறிவு அல்லாஹ்விடம்(தான்) உள்ளதென்று நீர் கூறுவீராக. மேலும் அந்த நேரம் நெருங்கியிருக்கலாம் என உமக்குத் தெரிவிப்பது எது?
( திருக்குர்ஆன் 33: 64 )

எனவே ஒரு நூற்றாண்டிற்கு பிறகு அடுத்த நூற்றாண்டு என்று கணினியை வைத்து நாளை கணிப்பது அறிவார்ந்த சிந்தனையாக இருக்காது, மாறாக அல்லாஹ் யாரை அவனது வஹியின் மூலம் எழுப்புகின்றான் எப்போது எழுப்புகின்றான் என்பதை அவன்

எவரிடமும் அறிவிப்பதில்லை, எனவே ஒரு நூற்றாண்டு முடிந்து அடுத்த நூற்றாண்டுக்கு வாதம் செய்பவரை பொறுத்தே உள்ளது மேலும் வாதம் செய்யும் அந்த புனிதர்கள் அவர்களின் நூற்றாண்டை குறியே வாதமும் செய்கின்றனர்.

**இதையே ஹசரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலை அவர்கள் கூறுகின்றார்கள் 13 வது நூற்றாண்டு முடித்து 14 வது நூற்றாண்டு தொடங்கியது அந்த ஏக இறைவாகிய அல்லாஹ் எனக்கு வஹியின் மூலம் அறிவித்தான் நான் தான் முஜத்தித் என்று (கிதாபுல் பரிய்யா பக்கம் 201)**

**இதையே ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்களும் கூறுகின்றார்கள்;-**

**பாருங்கள்! எனது பிறப்பு ஹிஜிரி 1380 அதாவது 14 வது நூற்றாண்டு ஆகும் மேலும் அந்த ஏக இறைவன் ஹிஜிரி 1421 அதாவது 15 நூற்றாண்டில் என்னை வஹியின் மூலம் எழுப்பினான்**

இவ்வாறே நாம் வாழும் காலத்தில் இறைவனால் 15 வது நூற்றாண்டில் முஜத்தித்தாக எழுப்பட்டவரே **ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)** அவர்கள்,அன்னார் இந்த நூற்றாண்டின் இறைவஹீயின் மூலம் வாதம் செய்துள்ளார்கள்

இறங்கிய இறைவஹீ(10.09.2010)

**Bismillah hir rahman nir raheem**

**Ya Khalifathullah! Qul: *"Annal Mujaddido"* (*O Khalifathullah! Tell them: 'I am the Mujaddid'*)**

**கலீபத்துல்லாஹ்வே! அவர்களுக்கு கூறுவீராக! "நான்** தான் **முஜத்தித்** என்று"

**அல்ஹம்துலில்லாஹ், உண்மையை தேடும் ஒரு இறைநேசருக்கு நிச்சயம் ஒரு சிறந்த ஆன்மீக உணவாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை, மேலும் உங்கள் புரிதலுக்காக அஹ்மதியா ஜமாத்தில் இதுவரை ஏற்றுக்கொண்ட நூற்றாண்டின் முஜத்தித்மார்களின் பட்டியலிடப்பட்டுள்ளது ஜசாக்கல்லாஹ்**

**NABI VAZHI** Tamil Monthly October 2008

Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211

# இஸ்லாத்தில் தோன்றிய முஜத்திதுகள்

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்குப் பிறகு தோன்றிய சில முஜத்திதுகள் (சீர்திருத்தவாதிகள்) வரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளது.

அவ்வரிசையில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களைத் தவிர வேறு எவரும் தம்மை நபி என்றோ அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கலீஃபா என்றோ வாதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

| காலம் | பெயர் | ஹிஜ்ரி ஆண்டு | கி.பி. |
|---|---|---|---|
| முதல் நூற்றாண்டு | உமர் பின் அப்தில் அஸீஸ் | 60-101 | 717-720 |
| இரண்டாம் நூற்றாண்டு | அஹ்மத் பின் ஹம்பல் | 164-241 | 780-855 |
| மூன்றாம் நூற்றாண்டு | அபுல் ஹசன் அஷாரி | 260-324 | 873-935 |
| நான்காம் நூற்றாண்டு | அபூபக்கர் பக்லானி | ? -403 | ? -1013 |
| ஐந்தாம் நூற்றாண்டு | அல் கஸ்ஸாலி | 450-505 | 1058-1111 |
| ஆறாம் நூற்றாண்டு | அபுல் காதிர் ஜீலானி | 470-561 | 1077-1166 |
| ஏழாம் நூற்றாண்டு | இப்னு தய்மிய்யா | 661-728 | 1263-1328 |
| எட்டாம் நூற்றாண்டு | இப்னு ஹஜர் அஸ்கலானி | 773-852 | 1372-1449 |
| ஒன்பதாம் நூற்றாண்டு | ஜலாலுத்தீன் சுயூத்தி | 849-911 | 1445-1505 |
| பத்தாம் நூற்றாண்டு | முஹம்மது தாஹிர் குஜராத்தி | 963-1014 | 1556-1605 |
| பதினோராம் நூற்றாண்டு | அஹ்மத் சர்ஹிந்தி | 971-1034 | 1564-1624 |
| பன்னிரெண்டாம்நூற்றாண்டு | ஷாஹ் வலியுல்லாஹ் | 1113-1175 | 1702-1762 |
| பதிமூன்றாம் நூற்றாண்டு | அஹ்மத் பரேல்வி | 1201-1246 | 1786-1831 |
| பதிநான்காம் நூற்றாண்டு | மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) | 1251-1326 | 1835-1908 |

If undelivered please return to:
முகவரி : நிர்வாகி - **நபி வழி**
**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. **Ph : 2481 7174**

Printed & Published By : **K. NASIR AHMED** From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174. Editor : **O.M. MUZZAMMIL AHMAD.** Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.

**அக்டோபர் - 2008 விலை ரூபாய் 7/-**

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**06.05.2020**


**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**


**மதிப்புக்குரிய சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு எங்கள் பதில்**

بسم الله الرحمن الرحيم

**ஏழாவது கேள்வி:-**

**இஸ்லாம் அல்லாத மாற்று மதத்தினருடன் எவருடன் விவாதம் செய்துள்ளார்?? அதன் ஆதாரம் சான்று தரவும் கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- ஜனாப் ஷாஜஹான் சாஹிப்.**

**பதில்:**

அரபி மற்றும் ஹிப்ரு மொழிகளில் நபி என்ற வார்த்தைக்கு இறைபுறத்திலிருந்து வெளிப்பாடுகளை பெற்று தீர்க்கதரிசனங்களை வழங்குபவர் என்பதாகும் ,திருக்குரான் நபித்துவத்தின் கதவு ஒருபோதும் அடைக்கபடுவதில்லை என்று கூறுகின்றது. இதன் படி நபிதுவம் நபி(ஸல்) கீழ்படிதல் மற்றும் பின்பற்றுதன் முலம் அல்லாஹ்வின் அருளால் மறைவான விஷயத்தை இறைவெளி ப்பாடுகள் மூலம் அறிவிக்கின்றான், எனவே முஸ்லிம்களுக்கு இதை போன்ற நபிமார்கள் தோன்றுவதில் என்ன தவறு இருக்கின்றது நாங்கள் ஒருபோதும் இதை போன்ற நபித்துவம் தடை செய்யப்பட்டுவிட்டது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை மாறாக ஷரியத்த்தை கொண்டுவரும் நபித்துவம் முற்று பெற்றுவிட்டது அல்லது நபி பின்பற்றாமல் வரக்கூடிய நபித்துவம் முற்றுபெற்றுவிட்டது என்றே கூறுகின்றோம் ஆனால் நபியை பின்தொடர்ந்து இறைவெளிப்பாடு பெற்று வாதம்செய்யலாம் அவரை நபி என்று அழைக்கப்படுவது திருகுரானுக்கு மாற்றமானதில்லை இன்னும் இவர்களின் நபித்துவம் நபியின் (ஸல்)நபித்துவத்தின் பிம்பமாக நிழலாகவும் கருதப்படும்[Brahin-e-Ahmadiyyah, part V, Ruhani Khaza'in, vol. 21, pp. 351-352]

அன்னாரின் வாழக்கையை இரண்டு விதமாக பிரிக்கலாம் அதாவது அன்னாரின்





Dawa in a Kovil

அறிவிக்கும் படியான இறைவெளிப்பாட்டிற்கு முன் உள்ள வாழ்க்கை, இந்த நூற்றாண்டின் இறைவெளிப்பாட்டிற்கு பின் உள்ள வாழ்க்கை என்று பிரிக்கலாம்.



அன்னாரின் முன் உள்ள வாழ்க்கை தூய்மையாகவும் மிக சிறந்த தாயிலில்லா ஹ்வாகவும் திகழ்தார்கள். தனது வயதில் இருந்தே அன்னார் இப்பணியை அதாவது அன்னார் **“பிறப்பால் இஸ்லாத்தின் போர் வீரர்”** என்று அழைக்கப்பட்டர்கள் அண்ணரின் தாவா பணியை நான்காவது கலீபாதுல் மஸீஹ் அவர்களே பல்வேறு முறை பாராட்டி உள்ளார்கள். அன்னாரின் விவாதம் கிருத்துவ போதகர்கள் முஸ்லீம் முல்லாக்கள் என்று தொடர்ந்தது மேலும் அன்னாரின் நேரடி தாவா பணி இந்து கோவில்களையும் விட்டுவைக்கவில்லை. அன்னாரின் இத்தகைய பணியாள் சில நாடுகளை அன்னார் மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் பக்கம் மக்களை கொண்டுவந்தது. ஆதாரங்களை கீழ்காணும் லின்க்குகள் மூலம் அறியலாம்


https://sahih-al-islam.blogspot.com/2017/02/the-myths-of-hindus.html

https://sahih-al-islam.blogspot.com/2015/10/super-blood-moon-grand-celestial-sign.html

http://www.jamaat-ul-sahih-al-islam.com/books/bkbiohmaa_tam2016.pdf


http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2016/lightmoonmag_07jan16.pdf


https://www.youtube.com/watch?v=G9cgxx1jrZU&t=9s





அன்னார் இந்த நூற்றாண்டின் இறைவெளிப்பாட்டின் வாதத்திற்கு பிறகு இந்த உலகத்தை சூழ்ந்துள்ள ஆன்மீக இருளை தனது எழுத்துக்கள் மூலம் போக்குவதிலும் நற்ச்செய்தி கூறி தீர்க்க தரிசனைகள் மூலம் உலக மக்களுக்கு எச்சரிப்பவர்க்காகவும் திகழ்கின்றார்கள், மேலும் பல்வேறு சமயங்களில் மாற்று சமய மக்களுக்கு தமது தூது செய்தியை எடுத்து வைத்துள்ளார்கள். தமது நாட்டின் **இந்துக்கள் மற்றும் தமிழர்களிடம்** எனது வருகையை பற்றி உரையாற்றும் போது,மேலும் முக்கியமாக அவர்களின் முக்கிய பண்டிகையான தீபாவளியின் போதும் இந்த நிகழ்வுகள் தோன்றியது, இன்னும் சில நிகழ்வுகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மட்டுமே நிகழக்கூடியவை. மேலும் 01.09.2016 அன்று மிக நீண்ட சூரிய கிரகணம் ஏற்பட்டது. மேலும் இதற்கு பிறகு இந்த நிகழ்வு 2200 ஆண்டிற்கு பிறகே நிகழும்.

இந்துமத நம்பிக்கை சம்பந்தமாக அன்னார் “An Insight into the Sacred Scriptures of the Hindu Faith” என்ற புத்தகத்தையும் ஈஷா அலை இயேசு அவர்களின் மரணம் சம்பந்தமாக உண்மைநிலை பற்றியும் புத்தகம் எழுதி உள்ளார்கள் மேலும் இந்த நூற்றாண்டின் ஒரு கலீபத்துல்லாஹ்வின் தேவை போன்ற பல்வேறு புத்தகங்களை எழுதி உள்ளார்கள்.



அதே சமையத்தில் இந்த நூற்றாண்டின் இறைவெளிப்பாட்டிற்கும், முந்திய இறைவெளிப்பாட்டிற்கும் எதிராக இருபவர்களை அல்லாஹ்வின் கலீபா என்ற முறையில் வாதம் மற்றும் ஆன்மீக போரையும் அறிவித்துள்ளார்கள். இந்த நூற்றாண்டின் இறைவஹீயின் மூலம் திருகுர்ஆன் விளக்கவுரையை அல்-அஸீம் த.்ப்ஸீரூல் குர்ஆன் என்ற பெயரில் 23 பாகங்களாக எழுதியுள்ளார்கள்.

https://sahih-al-islam.blogspot.com/2011/12/nasir-ahmad-sultani-and-intoxication-of.html
https://sahih-al-islam.blogspot.com/2013/06/mubahila-statement-on-nasir-ahmad.html
https://sahih-al-islam.blogspot.com/2013/05/mubahila-challenge-to-nasir-ahmad.html
https://sahih-al-islam.blogspot.com/2011/10/warning-to-nasir-ahmad-sultani.html
https://sahih-al-islam.blogspot.com/2014/03/mubahaila-khalifa-sani-and-ahmadiyya.html
https://sahih-al-islam.blogspot.com/2014/03/janbah-sahib-allah-does-not-like.html
https://sahih-al-islam.blogspot.com/2014/02/on-mubahila-against-janbah-sahib.html